உ

முருகவேள் துணை

# பட்டினத்துப் பிள்ளையார்

அல்லது

## தவராஜர் போற்றும் சிவராஜயோகி

---

## முதலாவது அத்தியாயம

### காவிரிப்பூம் பட்டினத்துச் சிறப்பு

"கொள்வார்தம் பேரோதை கொடுப்பார்தஞ்
சீரோதை துளிர்சங் கீன்ற
வெள்ளாரக் கருங்கடலி னோதையினை
விழுங்கியிரு விசும்பி னோங்கு
முள்ளாநஞ் சிறுவீதி பலசாதித்
தொழிலோதை யொழிவி லாவாம்
போள்ளாத நாகமணி யகங்கடோறும்
விளக்கொளிரும் பூம்பு காரே!"

என்று அறிவாளரால புகழ்நது கூறப்பட்டதும, பூமபுகார என்னும பெயரினைகொண்டதுமாகிய காவிரிப்பூமபட்டினம பல நூறு வருடஙகளுககு முன்னாச் (சீருஞ சிறபபும, பேரும பெருமையும வாய்ந்து விளங்கியதென்பது) அறிவாளர் அறிநத தேயாம். (அநநாட்டிலுள்ளார் எப்பொருளைககருதியும

உரிமையுரை

இப்புத்தகம்,
என்மீது பேரன்பு கொண்டுள்ளவரும்
சென்னைச் சார்ட்டர்ட் பாங்க் உதவி பொக்கிஷதாரரும்
சென்னைக் கருணாவிலாசசபையின் அங்கத்தினருமாகிய
ஸ்ரீமான் P. S. முருகேச முதலியார் அவர்கட்கு
அன்புடனும் ஆர்வத்துடனும்
உரிமையாக்கப்பட்டது.

எஸ். எஸ். அருணகிரிநாதன்

சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்
**ஸ்ரீமான் மணி. திருநாவுக்கரசு, முதலியார் அவர்கள்**
எழுதியது

சென்னைத் தொண்டைமண்டல உயர்தர பாடசாலைத்தமிழ்ப் புலவரும், பல நூல்களுக்கு ஆசிரியரும் ஆகிய ஸ்ரீ அருணகிரிநாத முதலியார் எழுதிய பட்டினத்துப் பிள்ளையார், என்னும் உரைநூலைக் கண்ணுற்று மகிழ்ந்தேன். அஃது இனிய எளிய நடையில் இயன்று படிப்பவருக்கு விருப்பத்தையே விளைத்து நிற்கின்றது, பட்டினத்தார் வரலாற்றைக் குறிக்கும் முன்னூல்களினின்றும் பொருள்வகையில் ஒரு சிறிதும் வழுவாது காலத்திற்கு ஏற்றவண்ணம் திரித்தும், விரித்தும் எழுதப்பட்டிருத்தல் விரும்பத் தக்கது. பொதுவாய்க் கதைகளே ஒரு புறம் ஓங்கியும், சமய சரித்திரங்களே மற்றொரு புறம் சிறந்தும் வரும் இக்காலத்திலே இவ்விரண்டின் நலங்களும் ஒருங்கே பொருந்த நூல் இயற்றுதலால் கலையறிவு, சமயவுணர்ச்சி, தத்துவ ஞானம் முதலியன எளிதில் உண்டாகும் என்பது திண்ணம். இத்தகைய நன்னூலைத் தமிழுலகம் தாழாது ஏற்குமென நம்பும்,

**மணி. திருநாவுக்கரசன்.**

# முன்னுரை

"பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல்—ஆருந் துறக்கை யரிதரிது," என்று சிவராஜயோக பரிபூரணரான தாயுமானவரால் வியந்து கூறப்பட்ட சிவானுபூதிச் செல்வராகிய பட்டினத்தடிகளின் சரித்திரத்தை முன்னூல்களைத் தழுவியும், கான பரம்பரையாக வழங்கிவரும் சில விஷயங்களை யொட்டியும் எழுதியுள்ளேன். இந்நூல் இதுகாறும் எவராலும் எழுதப்படாத புதிய முறையில் எழுதப் பட்டிருக்கிறதென்று படிப்போருக்கு விளங்காமற் போகாது. புதிய முறையில் எழுதப்பட்ட இப்புத்தகம் பலர்க்கும் பயன்படுமென்பது என் நம்பிக்கை. இதை முற்றும் படித்துப் பார்ப்பார் எவரும், 'இது மாணாக்கர்முதல் பெரியோர் வரையில் படிக்கத் தகுந்ததே' என்று கூறுவரென நினைக்கின்றேன்.

என்னிடத்தும், என்னால் எழுதப்படும் நூல்களினிடத்தும் என் சகோதரத் தமிழ்ப் புலவர்களுக்கு நன்மதிப்புண் டென்பதை நான் அறிவேனாதலால், அவர்கள் வழக்கம்போல் இந்நூலையும் ஏற்று மாணவர்களுக்கு உதவுவார்களென்று யான் கூறவும் வேண்டுமோ?

இவ்வாறு என்மாட்டுப் பேரன்பு கொண்டுள்ள என் சகோதரத் தமிழாசிரியர்களுக்கும், இந்நூலைப்

பற்றித் தம் கருத்தை வெளியிட்ட சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் ஸ்ரீமான் மணி-திருநாவுக்கரசு முதலியார் அவர்கட்கும், இந்நூல் அழகுபெற வெளி வரும் விஷயத்தில் எனக்குத் தோன்றாத் துணையாயிருந்து உதவிய என் இன்னுயிர் நண்பர் தமிழ்ப்புலவர் ஸ்ரீமான் மயிலை-சிவ. முத்துக் குமாரசுவாமி முதலியார் அவர்கட்கும், இப்புத்தகத்தை அன்புடன் ஏற்று வெளியிட்ட அனந்தா அண்டு கம்பெனியின் சொந்தக்காரராகிய ஸ்ரீ V. அனந்த நாராயண ஐயர் அவர்கட்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

எஸ். எஸ். அருணகிரிநாதன்

# அத்தியாய அட்டவணை


| அத்தியாயம் | பக்கம் |
|---|---|
| 1—காவிரிப்பூம் பட்டினத்துச் ... | 1 |
| 2—செட்டிப்பிள்ளைகள் ... ... | 11 |
| 3—மைந்தனில்லா மனக்குறை ... | 16 |
| 4—திருவெண்காடர் திருவவதாரம ... | 20 |
| 5—மாய வாழ்வு ... ... | 25 |
| 6—திருவெண்காடரின் கல்வித்திறம் ... | 31 |
| 7—வெறுப்புற்ற மனம ... ... | 40 |
| 8—இறைவன் அருள் ... ... | 44 |
| 9—குருதரிசனம—உபதேசம் ... | 50 |
| 10—தெய்வபூசை—திருவருள் ... | 62 |
| 11—ஊர்விஷயம்—மணப்பேச்சு ... | 70 |
| 12—திருமணம் ... ... ... | 76 |
| 13—சிவகலையம்மையார் ... ... | 81 |
| 14—தெய்வக்குழந்தை ... ... | 85 |
| 15—தெய்வக்குழந்தையின் திருவிளையாடல்... | 97 |
| 16—மருதவாணரின் கல்வித்திறம ... | 105 |
| 17—மருதவாணர் வியாபாரம் செய்தல் ... | 113 |
| 18—பெருந்துறவு ... ... | 119 |
| 19—துறவின் திறம் ... ... | 128 |
| 20—பத்திரகிரியாரின் துறவு ... ... | 137 |
| 21—சேந்தனார் சிவனருள் பெறுதல் ... | 143 |
| 22—அடிகள் முத்தியடைதல் ... ... | 151 |

உ

முருகவேள் துணை

# பட்டினத்துப் பிள்ளையார்

அல்லது

## தவராஜர் போற்றும் சிவராஜயோகி

---

## முதலாவது அத்தியாயம

### காவிரிப்பூம் பட்டினத்துச் சிறப்பு

"கொள்வார்தம் பேரோதை கொடுப்பார்தஞ்
சீரோதை துளிர்சங் கீன்ற
வெள்ளாரக் கருங்கடலி னோதையினை
விழுங்கியிரு விசும்பி னோங்கு
மள்ளாருஞ் சிறுவீதி பலசாதித்
தொழிலோதை யொழிவி லாவாம்
போள்ளாத நாகமணி யகங்கடோறும்
விளக்கொளிரும் பூம்பு காரே!"

எனறு அறிவாளரால புகழ்நது கூறப்பட்டதும, பூம்புகார எனனும பெயரினைக்கொண்டதுமாகிய காவிரிப்பூமபட்டினம பல நூறு வருடஙகளுக்கு முன்னர்ச (சீருஞ சிறபபும, பேரும பெருமையும வாய்ந்து விளங்கியதென்பது) அறிவாளா `அறிநத தேயாம். (அந்நாட்டிலுள்ளார் எப்பொருளைக்கருதியும

புறநாட்டிற் புகாராதலின் புகார் என்றும், அங்குக காவிரியாறு கடலோடு கலக்கின்றமையால் காவிரிப் பூம்பட்டின மென்றும் அந்நாட்டிற்குப் பெயர்கள் அமைவதாயின.) பலவகை வளங்களுமழிந்து இப் பொழுது ஒரு சிறு கிராமமாயிருக்கும காவிரிப்பூம பட்டினம பல நூற்றுண்டுகளுககு முன்னர்பபல்வளங் களு நிறைந்த பெருநகரமாயிருந்த தென்பது எவரும அறிந்த உண்மையேயாம. இப்போது தலைசிறந்து விளங்கும சென்னை முதலிய நகரங்கள் அககாலத்தில் இருககுமிடமே தெரியாம லிருந்ததென்பது எவரு மறிநததேயாம! ஆதலின், உலகில் உயிர்களுக்கே யன்றி மற்றவைகட்கும் மாறுதலுண்டென்பது விளக் கமே யன்றோ? முற்காலத்திருநத கரிகாற் சோழன் மேல் பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனாரென்னும அறிவுடைபபெரியாரும் இநநக ரின் சிறப்பை வியநது கூறியுள்ளார்.

'திருமாலின் திருமார்பில் அகலாது வீற்றிருக்கும் இலக்குமியானவள், காவிரிப்பூம்பட்டினத்தையும் அத் திருமார்பாகவே நினைத்து அங்கு அகலாது வீற்றிருக் கின்றளோ' வென்று கண்டோர் நினைத்துக் காமுறத் தக்க செல்வச்செருக்கினை யுடையதாயிருந்த காவி ரிப்பூம் பட்டினத்துப் பெருமையைப் பற்றி உள்ள வாறு கூறுதற்கு எவராலு மியலாதென்பதுண் மையே! அந்நாட்டிலிருநதார் அனைவரும் தெய்வ பக்தியும், பரோபகார சிந்தையும் உடையவர்களாய் இந்திரன்போல எல்லாவளங்களும் வந்துறப்பெற்று வாழ்ந்திருந்தனர். அவரவர்கள் குலத்திற்கேற்ற

ஒழுக்கமும் அவர்களிடத்துக் குடிகொண்டிருந்தது. தேவாலயங்களில் அபிஷேகம், ஆராதனை முதலிய வைகள் நடத்துவதே அந்நகரத்தாரின் முதல் நோக்க மாகும். அதனால் அவர்கள், இம்மையில் நாம இன்பங்கள் அனைத்தையும் அனுபவிப்பதைப் போலவே மறுமையிலும் அனுபவிப்போம் என்னும் உறுதி யுடையவர்களா யிருந்தார்கள். இன்னும் அங்குக்கடலோடுகலக்கும் காவிரிநதியின் உதவியால் வணிகர்கள் நிலைபெறுன மலைகளிலுள்ள கருநிறங் கொண்ட அகிற்கட்டைகளையும, சந்தனக்கோடுகளை யும், போர்புரியும் யானைத்தந்தங்களையும், விளக்க முள்ள இரத்தினங்களையும், பொற்பொடிகளையும், செழிப்பான தேனையும், கொழுமையான பழங்களை யும், மணமுள்ள மிருதுவான மலர்களையும, இன்னும் சொல்லுதற்கரிய பல வளப்பங்களையும விசேடமாகப் பெற்று, அந்நகரத்திலுள்ள எவர்களுக்கும அள்ளி யள்ளிக் கொடுத்து மகிழ்ந்தார்கள். அறத்தால்வரும் இன்பத்தையே அவர்கள் பேரின்பமாகக் கருதிவந்த னர். மற்றவழியில் வரும் இன்பத்தைச் சாரமற்ற தெனக் கருதினர். அவ்வூர்த் துறைமுகத்தில் பல தேயங்கட்கும வியாபார நிமித்தம சென்றுவரும் கப்பல்கள், அலங்கரிக்கப்பட்ட தேர்களைப்போல் நிறைந்து நிற்கும காட்சியைக்கண்டோர் அளகாபுரி யும் அவ்வூருககு நிகராகாதெனக கூறுவர். அந் நகரிலே எப்பொழுதும பண்டங்களை விற்பாருடைய ஓசையும், வாங்குவாருடைய ஓசையுமே நிறைந்திருக் கும். அந்நகரில் தேனையுண்டு வண்டுகள் ஓயாது

ரீங்காரம் செய்யும் சோலைகளினிடையே சிவனார் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருந்ததோடு, அறிவு நிறைந்த தவத்தினர்களும் நிறைந்திருந்தனர். அங்கு எங்குப்பார்த்தாலும் நவமணிகளை சிந்திக்கிடந்தன. யானைகளும், குதிரைகளும், தேர்களும், வீரர்களும் நிறைந்த இராஜ வீதியிலுள்ள மாளிகைகள் வானளாவி உயர்ந்திருந்தன.

காவிரிப்பெருக்கால், அந்நகருக்கு வெளியில் உள்ள கொழுமைபெற்ற நிலங்களில் உழும் காராளரிடும் ஓசையும், கொழுமையுற்று வளர்ந்து முற்றிய கரும்பை நசுக்கிச் சாறு பிழிவதாலேற்படும் ஆலைகளின் ஓசையும், வாய்க்கால்களில் ஓயாது ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீரின் ஓசையும் அந்நாட்டின் சிறப்பை ஒருபுறம் ஓயாது விளக்கிக்கொண்டிருந்தன.

அந்நகரத்திருந்த ஆண்மக்கள் அனைவரும் அறிவிலும், வீரத்திலும், வியாபாரத்திலும் சிறந்தவர்களாயிருந்ததோடு உத்தமகுணம்படைத்த சத்திய சீலர்களாயுமிருந்தனர். பெண்மக்களோ ஆண்மக்களினும் சிறந்து அறிவு நிறைந்தவர்களாய் அருந்ததியுந் தங் கலைக்கண்டு அஞ்சுமாறு கற்பிற் சிறந்து,

“தெய்வந் தொழாஅள், கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை”

என்னும் மெய்யுரையைத் தங்கள் மனத்திற்கொண்டு, தத்தம் கணவரை வழிபட்டு வணங்கி வாழ்ந்திருந்தனர். அத்தகைய பெண்மணிகளின் சரிதங்களிற் சிலவற்றைத் துறவறத் தூய்மையாளராய்ப் பல நூறு வருடங்களுக்கு முன்னிருந்தவரும், அரசனுயி

சேரன் செங்குட்டுவனைத் தம் சகோதரனாகக்கொண்டவருமாகிய இளங்கோவடிகளென்பார் தாமியற்றிய சிலப்பதிகாரமென்னும் சிறந்ததொரு காப்பியத்திற் சிறக்கக் கூறியுள்ளார். நிற்க.

காவிரிப்பூம் பட்டினத்திற் பிறந்த கரிகாற்சோழனுடைய மகள் ஆதிமந்தியார் தமது கணவனுடன் இல்லறம் நடாத்திக்கொண்டு வருகையில் ஒருகால், பெருகிய காவிரி வெள்ளத்திலகப்பட்டுக் கொண்ட தமது கணவன் ஆட்டனத்தி என்பானைப் பிரிந்துயிர் வாழத் தரியாராய்க் கடற்கரையிற் சென்று வருந்திக் கொண்டிருந்தனர்; அப்போது அவரது கற்பின் மேம்பாட்டைக் கருதிய கடலானது, காவிரி வெள்ளம் தன்னிடத்திற் சேர்த்த அவர் மணாளனைத் தனது அலைகளென்னும் கரங்களாலேந்திக்கொண்டு வந்து கரையிற் சேர்த்து, ' ஓ திருமகள்போல்வாளே!' என்றழைத்துக் கொடுக்கப்பெற்றனர். அந்நகரத்திற் பிறந்த மற்றோர்மாது, தன்னை மணந்த கணவன் கடல் யாத்திரைபோய்த் திரும்புமளவும் தனது கற்புக்கழிவு நேராவாறு, அக்கற்பின் மேம்பாட்டாற் கல்லுருவம் பெற்று, அவன் திரும்பி வந்தவுடனே அவ்வுருவம் நீங்கித் தனதியற்கை யுருவமைந்து அவனுடன் இல்லறம் நடாத்திவந்தாள்.

காவிரிப்பூம் பட்டினத்திற் பிறந்த ஓர் மாது இளமையிலேயே மாதா பிதாக்களை இழந்தவளாய், அங்குள்ள ஒரு தேவாலயத்தில் திருப்பணிசெய்து காலங் கழித்து வருகையில், அவ்வூர் வழியாக யாத்திரை வந்த வேற்றூரானொருவன், அத்தேவாலய தரிசனத்

திற்காகச் சென்று தரிசனஞ்செய்து திரும்புகையில் அப்பெண்ணின் அழகையும ஒழுக்கத்தையும் நோக்கி, அவள்மீது பிரியங்கொண்டு அவ்வாலயப் பரிசாரகர் முதலியோரால் அவளது விர்த்தாந்தத்தை யுணர்ந்து, அவளை எவ்வகையிலேனும் மணமுடிக்க வேண்டுமென் றும, தனக்கு முன்னுள்ள மனையாட்டியால் வெகு நாளாகப் புத்திரப்பேறில்லையே யென்றும் கருதி, அங்குள்ளாாக்குத் தன் கருத்தைத் தெரிவிக்க, அவ் வூரவர் வெகுநாளாகத் தக்க மணவாளன் கிடைக்கா மையால் வருந்தியுள்ளோராதலின், உடனே அதற் கிணங்கித் தேவாலயத்தின் மடைப்பளிக் கருகி லிருந்த வன்னிவிருட்சத்தினடியில் மணபபந்தலலங் கரித்து வதுவை முடித்தனா. அதன்பின் அமமணவா ளன் தனது தேவியை அழைததுக்கொண்டு தன்னூ ரிற் சோந்து அங்குத் தன் மனையின்கணுள்ள முதன் மனைவியுடனே இசசெய்தியைக் கூற, அவள் இது கேட்டவுடனே சினந்து, இவள யாரோ வைப்பாட் டியே யொழிய மணவாட்டியாகாள் ; இவள் உள்ளே வரலாகாதெ(த)ன மறுததனள். அப்போது அக்காவிரிப் பூம் பட்டினத்துப் பெண் மனங்கலங்கி, ' ஓ சிவபெரு மானே ! அடியேன் இதுகாறும உமக்குத் திருத் தொண்டு புரிந்ததும் கற்பின் நிலைமை தவறு திருந்ததும் உண்மையாயின், யான் மணமபுரிந்துகொண்ட பந்தற் கருகிலிருநத வன்னி விருட்சமும அதன் சமீபத் திருந்த மடைப்பளியும் ஈண்டுவந்து சான்று கூற வேண்டுமெனப் பிரார்த்திக்க, அவ்வாறே அவளது கற்பின் மேமபாடு விளங்குமாறு அவ்வன்னிமாமும்

மடைப்பளியும் சான்று கூறிற்று. காவிரிப்பூம் பட்டினத்திற் பிறந்த ஓர் மாதை மணந்த மணவாளன், பொருளீட்டும் பொருட்டுப் பிரிந்து சென்றபோது, தன் காதலியை நோக்கி, 'யான் வருமளவும் பிறபுருடரைப் பாராதிருக்குமாறு யான் ஓர் திரை யிட்டுப் போவேன்; நீ அதற்குள்ளாகவே யிருந்து கொண்டு தாதியரால் உனக்கு வேண்டுவனவற்றைப் பெற்றுக்கொண்டிருக்கக் கடவையெனக் கட்டளை யிட்டுத் திரைகட்டிப் பாங்கியாகட்கும் அவ்வாறே கட்டளையிட்டயற்பதிக்கேகினன். அவன் கட்டளைபபடி திரைக்குள்ளிருக்கும் தலைவியின் கற்பைப் பரீட்சிக்கத் தொடங்கிய பாங்கியர்கள், சின்னாட் சென்ற பின் ஓர் நாள், காவிரிக்கரையின் கணுள்ள மணலினாற் பாவையைச் செய்து திரைக்கு வெளியில் நிறுத்தி, இதோ உனது கணவர் வந்திருக்கின்றனர். இப்போது நீ வெளியில் வரலாமென்றழைக்கவும் வெளியில் வாராதவளாய் உள்ளிருந்த கற்பின் மேம்பாட்டால, அக்காவிரி வெள்ளம் பெருகிய காலத்தும் அவளிருக்குமிடத்தை யழிக்காமல் அதைச் சூழ்ந்து கொண்டு போகும்படி செய்தாள். அதன்பின் அவள் கணவன் தான் சென்ற அலுவலை முடித்துக்கொண்டு வந்து பார்க்கையில், காவிரிப் பெருக்கால் மற்றைய கட்டடங்கள் யாவும் அழிந்தும் தனது காதலியிருந்த கட்டடமாத்திரம் அழியாதிருக்கக்கண்டு அவளது கற்பின் மேம்பாட்டை மெச்சினவனாய்த் தனது நற்றவத்தை வியந்து முன்னிலும் மிக்க பிரியத்துடன் இல்லறத்தை இனிது நடாத்தி வந்தான்.

காவிரிப்பூம பட்டினததிற பிறந்த மற்றோர் வணிகை, தனது சககளத்தியின் குழந்தை தவறிககிணற்றில் விழுந்த வுடனே தன்னையொத்தாள் மகவின்றி யிருககத் தான்மாத்திரம குழநதை வைத்திருக்கலாமோ வென்றெண்ணித் தாமதியாமல் தன் குழந்தையையும் அக்கிணற்றிலேயே போட்டுவிட்டனன். அவள் கற்பின்மேம் பாட்டையும் நல்லெண்ணத்தையும் வியந்த கடவுளருளால, இரு குழநதைகளும அக் கிணற்றின்மேல் உயிர் பிழைத்து மிதக்கக்கண்டு எடுத தனளென்பது அக்ககாச் சரிதங்களுள் ஒன்றாகும.

காவிரிப்பூம் பட்டினத்தில பிறந்த இரண்டு பெண்கள் சிறுவயதில் முத்துக்களைக்கொண்டு சிற்றில் விளையாடும்போது, தம்மிருவருக்கும ஆண் பெண் ணென்னும பாற்பகுதிப்படி மகவுண்டாமாலுல், அவ் விருவர்க்குமே மணமுடிப்போ மென்று பேசிக்கொண் டார்கள். பிறகு அவவிருவர்ககும பருவம் வாய்த்து மணம் முடிந்து புத்திரோற்பத்தியாய்த் தாங்கள் பேசிக்கொண்டவாறே ஆண் பெண் என்னும இருபாற் பகுதிப்படியே பிறந்தன. ஆயின், அப்புத்திரன் முடவனா யிருந்தமையைக கண்ட பெண்மகவின்ற மாது, தனது காதலனை நோக்கி, நான் சிறுவயதுடன் வண்டலாட்டயர்கையில் இவ்வாறு பேசிக்கொண்ட துண்டு; இப்போது அப்பிள்ளை முடமாயிருககின் றதேயென்று சிந்தித்து வருந்துகின்றே னென் றுரைக்க, எப்போது நமது தாய் அவருக்கென் றுரைத்தாளோ அப்போதே அவர் மனைவியாயினே மெனச்சிந்தித்தவளாய், அவள் புத்திரியாகிய பெண்

சற்றுந்தரியாதவளாகக் கோடி யுடையுடுத்திக்கொண்டு கூந்தலைவாரிச் சொருகாகக் கட்டிச்சென்று அப்புதல்வனைத் தன் தலையிற் சுமந்துநின்றனள்.

மற்றும் அக்காவிரிப்பூம் பட்டினத்தில் பெருஞ் செல்வமும், போழகும் வாய்ந்த கோவலன் என்னும் பெயரினையுடைய வணிக புத்திரன் ஒருவன் இருந்தான். அவன் தகுந்தபருவத்தில் கண்ணகியென் னும் பெயரினையுடைய கற்பிற் சிறந்த மங்கையை மணந்திருந்தும், ஊழ்வினையால் அந்நகரில் இருந்த மாதவியென்னும் கணிகைகுல மகளொருத்தியை விரும்பி அவள்பாலடைந்து வாழ்ந்திருந்தான். நாட் பல சென்ற பின்னர் ஒரு காரணத்தால் அவள்பால் வெறுப்புற்றுத் தன் மனையை யடைந்து, கையிலிருந்த பொருளெல்லாம் தாசியின் பொருட்டுச் செலவழித்து விட்டமையால், மீண்டும் பொருள்தேடித் தனிகனாக எண்ணித் தன்மனைவி கண்ணகியோடு மதுரைக்குச் சென்று மனைவியை மாதரியென்னும் ஆயர்குலமா திடம் அடைக்கலமாக வைத்துவிட்டு மனைவியின் காற் சிலம்பொன்றைப் பெற்று, வியாபாரத்திற்கு முதல் வேண்டியதின் நிமித்தம் அதை விற்றுவர வெளியிற் சென்றான். அப்போது பழுதுபார்ப்பதற்காக வாங்கிச் சென்ற அந்நகரத்து அரசியின் காற்சிலம்புகளில் ஒன் றைப் பறிகொடுத்து அரசிக்கு என்னசொல்வதென்று ஏங்கிய பொற்கொல்லன் ஒருவன் கோவலன் எதிரில் வந்தான். அவனிடம் கோவலன் தன் கையிலிருந்த தன் மனைவியின் சிலம்பைக் கொடுத்து அதைவிற்றுத் தரு மாறு வேண்டினன். அவன், அச்சிலம்பு அரசியின்

சிலம்பல்ல வென்பதை அறிந்தவனாயிருந்தும் அந்த அரசியின் சிலம்பு போன்றிருந்தமையினால் மனத்தில் துர்எண்ணங்கொண்டு அரசனிடம் சென்று சிலம்பை அரசனுக்குக்காட்டி, 'அரசரேறே! இச்சிலம்பு அரசியாருடைய சிலம்புகளில் ஒன்று; இதைப் பழுது பார்ப்பதற்காக அரசியார் என்னிடம் கொடுத்தார்கள். நான் இதை வீட்டில் வைத்திருந்த சமயம் பார்த்துக் கள்வனொருவன் கவர்ந்து சென்று விட்டான். கடைசியாக யான் அக்கள்வனைக்கண்டு பிடித்துவிட்டேன். அவன் இதோ அரண்மனைக்கு வெளியில் நின்றுகொண்டிருக்கிறான்' என்று கூறினான். அரசன் அவன் கூறுவதை ஆராயாமல் கோவலனைக் கொலைசெய்வித்தான். அதையறிந்த கண்ணகி கடுங்கோபங்கொண்டு அரசனவைக் களஞ் சென்று தன்கணவன் கள்வனல்லவென்பதை நிரூபித்தாள். அறியாமற்செய்த பிழைக்கு வருந்தி அரசன் அப்பொழுதே உயிர்விட்டான். அதே சமயத்தில் அரசியும் உயிர்துறந்தாள். பின்னர்க் கண்ணகி தன் கற்பின் திறத்தால் மதுரையை எரித்துவிட்டுச் சேரநாடடைந்து அங்குள்ள திருச்செங்குன்றமென்னும் மலைமீதேறி அங்கிருந்த ஒரு வேங்கை மரத்தின் கீழிருந்து தெய்வ உருவோடு விமானத்தில் தன்னெதிரிற்றோன்றிய தன்கணவனோடு விண்ணுலகடைந்தாள். இத்தகைய உத்தமிகள் பலபேர் காவிரிப்பூம்பட்டினத்திற் பிறந்து அப்பட்டினத்திற்குப் பெருமையளித்திருக்கின்றனர்.

# இரண்டாவது அத்தியாயம்

## செட்டிப்பிள்ளைகள்

ஒருநாள் காலை மணி ஆறிருக்கும். சூரியன் கீழ்த்திசையில் தன் ஆயிரங் கதிர்களையும் அழகுடன் பரப்பி உதயமாயினன். அப்போது பறவைகள் தத்தம் கூடுகளிலிருந்தும், மரக்கிளைகளிலிருந்தும் வெளிப்போந்து இன்பமாகக் கூவிக்களித்துக் கொண்டிருந்தன. உழவர்கள் தங்கள் புலங்களில் உழுது கொண்டிருந்தனர். குளிர்ந்த காற்று மெல்லவீசிய தோடும் காலநிலை சுகத்திற்கேற்றவாறிருந்தது.

அப்போது காவிரிப்பூம் பட்டினத்தில் காவிரியாற்றில் குளிக்குந்துறைக்கு அருகில் நான்கு வைசியகுல ஆண்மக்கள் ஆலமவிழுதினால் பல்விளக்கிக்கொண்டே தங்களுக்குள் பலவிஷயங்களைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது சாமபசிவம் என்பவர் மற்றவர்களைப் பார்த்து, 'அஃதோபாருங்கள்! நமது குலதிலகரான சிவநேசர் குளித்துவிட்டு எவ்வளவு நேரமாகச் சிவ பூசை செய்துகொண்டிருக்கின்றார்! ஆ! அவரது பக்தியே பக்தி!' என்று ஆச்சரியத்துடன் சொன்னார்.

அவர் சொன்னதைக் கேட்ட சிவசிதம்பரம் என்பவர் அவரைப்பார்த்து, 'சிவநேசருக்கென்ன? அவரைப்போல் கடவுள் பக்தியும், அடியார் பக்தியும்

உடையவர்கள் இக்காவிரிப்பூம் பட்டினத்தில இல்லை. எத்தனையோ பெயர் கடவுள் பக்தியிற் சிறந்தவர்களைப்போல் நடித்துக கொண்டிருககின்ற னர். மனததில் அவாகள் கொண்டிருக்கும் துா ரெண்ணங்களுககு அளவேகிடையாது. ஆனால் நமது சிவநேசரோ உள்ளும, புறமும ஒரேமாதிரியான வர். உண்மையில் அவர் கடவுளிடம சிறநத பகதி யுடையவராவா. அதனாலன்றோ அவர் நாளுக்கு நாள் செல்வத்திலும், புகழிலும் மேமபட்டு விளங்குகின றார்' என்று கூறினார்.

கூறியதும் சங்கரன் என்பவர் எலலோரையும் பார்த்து, 'கோயில் திருப்பணி செய்கிறவாகளுககும, கடவுளிடத்திலும, கடவுளின் அடியார்களிடத்திலும அன்பு செலுத்துகிறவாகளுககும தரித்திரம் வரு மென்று சிலர் சொல்லுகிறார்களல்லவா? சிவநேசா கோயில கட்டுவதும, தெய்வவழிபாடு, அடியார் வழி பாடு முதலியவைகளைச செய்வதுமே தங்கடமையாகக கொண்டிருக்கின்றார். அப்படி இருந்தும் அவ ருக்குமட்டும தரித்திரமென்ப தில்லாமல் மேன்மே லும் பொருள் பெருகிக்கொண்டே போகிறதே! அதை நினைக்கும்போது எனககு ஆச்சரியமாயிருக கிறது' என்று சொன்னார்.

அப்போது அங்கிருந்தவர்களில் ஒருவராகிய கண் ணப்பர் என்பவர் அவரைப்பார்த்து, 'நீ சொல்வது அறிவற்ற மனிதர்கள் சொல்வதைப் போலிருக கின்றது. உண்மையான அன்புடையவர்களைக் கடவுள் சோதனையின் பொருட்டுத் துன்பத்தை அநுபவிக்கச

செய்வாராயினும முடிவில் உலகமறிய அவாகளுக்கு வேண்டிய நன்மைகளைச செய்வார் உண்மையான அனபுடையவர்களுககு நிலையான துன்பம் வாராது. வநதாலும நீடிததிராது. அவாகள் செலவத்தில சிறந்து விளஙகாமற போகார. இக்காலத்தில் உண்மையன பிலலாதவாகள், அநதாஙகத்தில பரிசுத்தமான எண் ணமிலலாதவாகள், துரோகிகள் ஆகிய இவாகளெல் லாம பலர் தஙகளை மெச்சவேண்டுமென்னுங கருத் துடன் கோயில கட்டுவதும, குளம வெட்டுவதும, கடவுளை வணஙகுவதுமா யிருககின்றனா. அன்றி யும இவர்கள கோயில் கட்டுவதற்கும, குளம் வெட்டுவதறகும செலவழிககும திரவியஙகள் பெரும பாலும அநியாய வழிகளில சமபாதிததவைகளாக வேயிருககும. உண்மையறியாமல் சாதாரண சனஙகள் இவர்களைப் பகதிமான்களென்று கொண்டாடுகின்ற னா. கடவுளுககு உண்மை தெரியாதா? இவர் களுடைய அநதாஙகம இன்னதென்று விளங்காதா? ஆகையால அநியாயமுடைய இவாகள் கோயில் கட்டுவது முதலிய காரியங்களைச் செய்வது அவருக் குச சம்மதமாயிருககுமா? போலியாக இவாகள் பெருமை அடைவது அவருககுப பிடிககுமா? உண் மையான அன்புடையவாகளுககும, இவர்களுக்கும் பேதம தெரிய வேண்டாமா? கடவுள உண்மையான அன்புடையவாகளுககுத துனபம வநதால அவா களைத தடுத்தாட கொள்வதைபபோல இவர்களையும ஆட்கொள்ளாமல் இவர்களைத் துன்பத்திற்காளாக்கு கின்றார்! உண்மையன்புடையவாகள் கோயில் கட்டா

விடினும் குளம வெட்டாவிடினும் கடவுள் தண்டிப்பதில்லை. அவர்களுக்கு நன்மையைச் செய்வார். அன்பில்லாதவர்கள், ஒழுக்கங்கெட்டவர்கள், ஆயிரங் கோயில்களைக் கட்டினாலும் கடவுள் அவர்களைத் தண்டிக்காமல் விடமாட்டார். இந்த உண்மையை அறியாமல் நாம் கோயில் கட்டினால், கடவுள் பக்திபுடையவர்களாயிருந்தால் தரித்திரம் வந்துவிடுமென்பது அறியாமையே யாகும். உண்மையான அன்புடையவர்கள் எதைச்செய்தாலும் செய்யாவிட்டாலும் கடவுள் அவர்களிடம் பட்சமே பாராட்டுவார். அன்பில்லாதவர்கள் எதைச்செய்யினுந் துன்பந்தான் விளையும். இதுதான் இரகசியம். சிவநேசரோ உண்மையான அன்புடையவர். ஆகையால் அவருக்கு எல்லா நன்மைகளும் மேன்மேலும பெருகிக்கொண்டேயிருக்கின்றன. அதனால் நாம ஆச்சரியப்படவேண்டியதில்லை' என்று வாய் ஓயாமற் சொல்லி முடித்தார்.

அப்போது சிவசிதம்பரம் எல்லோரையும் நோக்கி, 'சிவநேசருக்கு எல்லாச் செல்வங்களும் பொருந்தியிருக்கிறதென்று சொல்ல முடியுமா? மக்களைப் பெறுதவர்கள் எவ்வளவு சிறப்புடையவர்களாயிருப்பினும பிரயோசனமில்லையே. சிவநேசருகருச் செலவத்தைக கொடுத்த கடவுள், குழந்தைகளைக் கொடுக்கவில்லையே. ஆகையால் சிவநேசர் எவ்வளவு செல்வமுடையவராயினும் என்ன பிரயோசனம்' என்றார்.

அப்போது எல்லோரும் அவரைப்பார்த்து நகைத்தனர். பின்னர் சாம்பசிவம் என்பவர் அவரை நோக்கி, 'நீர் சென்ற நான்கு வருடகாலமாக ஈழ நாட்டுக்குச்

சென்றிருந்தமையால் உமக்கு இங்கு நடந்த விஷயங்களொன்றுமே தெரியவில்லைபோலும். நீர் ஈழ நாட்டுக்குச் சென்ற மறுவருடத்தில் சிவநேசருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து சுகமாய் வளர்ந்து வருகிறது. அதுவும் உமக்குத் தெரியாதுபோலும்" என்று கூறினார்.

அதைக்கேட்ட சிவசிதம்பரம் அவரைப்பார்த்து, 'எனக்கு, நான் இங்கு இல்லாத காலத்தில நடந்த விஷயங்களொன்றும தெரியாதென்று நினைக்கவேண்டாம. ஆனல் சிவநேசருக்குப் பெண் குழந்தை பிறந்த விஷயமட்டும இதுவரையில் தெரியாது' என்றார்.

என்றதும் கண்ணப்பர் மற்றவர்களைப்பார்த்து, 'சிவநேசர் எல்லாவகையிலுமே அதிர்ஷ்டசாலியானவர். அவருடையமனைவி ஞானகலாமபையாரைபபார்த்தீர்களா? மகா உத்தமி. கணவன் சொல்லைக கடவாதவா. அந்த அம்மாள் பெய்யென்று சொன்னமாத்திரத்தில் மழை பெய்யும். கற்பில் அருந்ததியும அநத அமமாளுககு நிகராகமாட்டாரென்று சொல்லலாம. சிவநேசர் பூர்வத்தில் மிக்க புண்ணியம் செய்தவராகவே யிருகக வேண்டும்' என்றார்.

'அதோ சிவநேசர் பூசை முடித்துவிட்டுப் போகின்றார். வாருங்கள் நாமுஞசென்று குளித்துவிட்டுப் போகலாம். பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. ஈழநாட்டுக்குச் சந்தனககட்டைகளைக் கப்பலில ஏற்றியனுப்பவேண்டும்' என்று சொன்னார் சிவசிதம்பரம்.

பிறகு எல்லோரும் எழுந்து குளிககச் சென்றனர்.

# மூன்றாவது அத்தியாயம்

## மைந்தனில்லா மனக்குறை

முன் அத்தியாயத்தில் நடந்த சம்பவங்களுக்குப் பிறகு இரண்டு வருடங்கள் ஓடி மறைந்தன.

ஒரு தினம் காலை பத்து மணிக்கு ஞானகலாம்பையார் வீட்டு வேலைகளை ஒழுங்குபெறச் செய்து விட்டுச் சிறிது நேரம் தமது செல்வச்சிறுமியோடு கொஞ்சிக்குலாவிக்கொண்டிருந்தார். ஆயினும் அவர் மனத்தில் ஏதோ கவலை குடிகொண்டிருப்பதாகத் தெரிந்தது. பிறகு அவ்வம்மையார் தமது பெண்மகவைத் தரையில் இரத்தினக்கம்பளத்தின் மீது விளையாட விட்டுத் தாம் ஓலைச்சுவடியில் எழுதப்பட்டிருந்த திருவாசகத்தைக் கையில் எடுத்து,

" இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
  தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
  நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
  திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை அன்றியொன் றில்லை
  யாருன்னை அறியகிற் பாரே "

என்பது போன்ற உள்ளத்தை உருக்கும் பல திருப்பாசுரங்களை வாய்விட்டுப் பாடினார். பின்னர், 'முப்புர மெரித்த முக்கண்ணா! அரவாபரணா!

ஆதிமூர்த்தி! உன்னையே கதியென்று நம்பிய எங்கள் மனக்குறையைப் போக்காயோ? மக்களில்லையென்று வருந்திய எங்களுக்கு ஓர் பெண் மகவையளித்தாய். பெண் மகவையளித்ததனால் பெருமகிழ்வுற்றோமானாலும், நாங்கள் இனி விரும்புவது ஆண் மகவன்றோ? இறைவ, எங்கள் விருப்பத்தை ஈடேற்ற வேண்டியது உன் கடமையன்றோ?" என்று வாய் விட்டுச் சொன்னார்.

இவ்வாறு ஞானகலாம்பையார் வருந்திக்கொண்டிருக்கையில் வெளியிற் சென்றிருந்த அவ்வம்மையாரின் கணவராகிய சிவநேசர் வீட்டிற்கு வந்தார். அவரைக் கண்டவுடன் அவ்வம்மையார் சட்டென்று எழுந்து அவர் வெளியிற் சென்று வந்த களைதீர அவருக்கு உபசாரம் செய்தார்.

அப்போது சிவநேசர் தம் மனைவியாரைப்பார்த்து, 'பெண்ணே, என்றுமில்லா வண்ணம் இன்று உன் முகம் வாடியிருப்பானேன்? கற்புடைய பெண்கள் எக்காரணங்கொண்டும் தங்கள் கணவர்களின்முன் முகத்திற் களங்கந் தோன்றுமாறு நிற்பது அழகாமோ?' என்று கேட்டார்.

அதற்கு அம்மையார் அவரைப்பார்த்து, 'சுவாமி! அடியாள் இதுகாறும் இவ்வாறிருந்ததுமுண்டோ? இன்று என்னையுமறியாமல் என் மனத்தில் சிறிது வருத்தம் தோன்றியது. அவ்வருத்தமே என் முகவாட்டத்திற்குக் காரணமாகும்' என்று சொன்னார்.

மனைவியார் சொல்லியவைகளைக் கேட்ட சிவநேசர் அவரைப்பார்த்து, 'பெண்ணே, உன்மனத்தில்

ஏற்பட்டுள்ள கவலை என்ன? சிவனடிகளே தொண்டு பூண்டொழுகும் நமக்கு என்னகவலை வரப்போகின் றது? அப்படி வந்தாலும் இறைவன் கருணை என் றெண்ணி யிருக்கவேண்டுமேயன்றி நாம செய்யத தககது யாதுளது? நாம அநுபவிககும் இன்பமும் துன்பமும, நன்மையும தீமையும கடவுளுக்குத் தெரி யாதோ? தெரியும. அவா யாவையும அறிவார். ஆகையால் இன்பம் வந்தபோது சந்தோஷிப்பதும், துன்பம் வந்தபோது துக்கித்தலுங்கூடாது. எல்லாம இறைவன் செயலென்றே யெண்ணி யிருக்கவேண்டும. போகட்டும். உன் மனககுறைககுக காரணம என்ன?" என்று கேட்டார்.

இவ்வாறு தங்கணவனுர் கூறிய வார்த்தைகளைக் கேட்டவுடன் அமமையார் சிறிது வெட்கித் தங்கண வரை நோககி, 'சுவாமீ! பல்விதச் செல்வங்களை யும் நமத்களிதத இறைவன் ஆண் மகவொன்றை அளிககவில்லையே யெனனும கவலையே எனககுப் பெரிதாயிருககின்றது. அககவலையே என் முகவாட் டதிற்குக காரணம' எனறு சொன்னுர்.

சொன்னதும சிவநேசர், 'பேதாய்! இதற்கோ நீ வருந்துவது? மககளுக்குச் செய்யவேண்டுவனவற்றை அவ்வவற்றுக்கேற்ற காலம் வரும்போதல்லவோ அன் னையும பிதாவும செய்வார்கள். சகல உயிர்களுக்கும அன்னையும பிதாவுமாக விருககும் பரமேசுவரர் நமககு வேண்டுவனவற்றை யெல்லாம காலம வரும போதலலவோ செய்வார். நமது குறைகளை அவா அறியமாட்டாரா? அறிவாா. நமது குறைகளைப்

போக்க அவர் திருவுளங்கொள்கின்றவரையில நாம் காத்துக்கொண்டிருக்கவேண்டும். அடுத்து முயன்ரு லும் ஆகுநாளன்றி எவையுமாகா. இவைகளையெல்லாம் அறிந்திருந்தும் நீ இவ்வாறு வருந்துவது என்! உன் கவலையை விட்டொழி. வேண்டுவார் வேண்டுவன வற்றை அருளவல்ல கடவுள் உன கவலையைப் போக்குவார்' என்று கூறினார்.

அதுகேட்ட ஞானகலாம்பையார் மனந்தேறி யிருந்தார்.

## நான்காவது அத்தியாயம்

### திருவெண்காடர் திருவவதாரம்

ஆண்மகவொன்றை அருளவேண்டுமென்று ஞான கலாம்பையாரும், அவர் கணவனும் இறைவனை நோக்கி வேண்டினர்; ஆயிரக்கணக்கான அடியவர்களுக்குத் தினமும் திருவமுது படைத்து வந்தனர்; பல தீர்த்தங்களுக்குச் சென்று மூழ்கி ஸ்தலங்கள்தோறும் சென்று இறைவனை ஆராதித்தனர்; ஏழைகளைக் காப்பாற்றினர், சத்திரஞ் சாவடிகளை நியமித்தனர்; கோயில்களில் தனியாகப் பல உற்சவங்களையும், பூஜை முதலியவைகளையும் செய்து வந்தனர்; ஆலயங்களில் நெய்விளக்கேற்றுதல் முதலிய பணிகளைச் செய்வாராயினர்; அருமறை யோதிய பெரியோர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்தனர்; தாய் தந்தையற்ற குழந்தைகளைக் காப்பாற்றினர்; அநாதைகளுக்கு ஆதரவளித்தனர்; பொருளில்லாதவர்களுக்கு வேண்டும் பொருளையளித்தனர்; இன்னும் எத்தனையோ நற்காரியங்களைச் செய்துவந்தனர்.

என்னே இறைவனின் சோதனை! ஒருவேளை உண்டால் மறுவேளை உண்பதற்கு ஆகாரமில்லாத ஏழைகளுக்குக் கடவுள் எத்தனையோ குழந்தைகளைக் கொடுக்கின்றார். செல்வம் நிறைந்தவர்களுக்கோ அவ்வாறு கொடுப்பதில்லை. இஃது உலகில் என்றும் பெருவழக்காயிருந்துவருகிறது. தனவந்தர்கள் தங்களுக்கு மக்கள் இல்லையேயென்று வருந்தும்போது

'என் இந்தனைக குழநதைகள் பிறககவேண்டும ?' என்று எண்ணுமபடி ஏழைகளுக்குப் பலகுழநதைகள் பிறககின்றன. இதற்குக காரணம இன்னதென்று எவரேயறிவார? ஆனால், சிலா சில காரணங்களைக கூற முனவருவா. அககாரணங்களெலலாம ஆராய்ந்து பாாககுங்கால பொருததமற்றவைகளெனத தோன்றும எனபது திண்ணம. நிற்க.

உணமை யன்புடையார் வேண்டுவனவற்றை வேண்டுமவாறே அளிப்பவனாகிய சிவபெருமான் இறுதியாக ஞானகலாமபையாரின் மனககருததை நிறைவேற்றத திருவுளங்கொண்டாா. எமபெருமான் திருவுளங் கொண்டால ஆகாதகாரியமும உண்டோ ?

இறைவன் திருவுளங்கொண்ட காலமுதல் ஞான கலாமபையாா திருவயிற்றில கருப்பந்தோன்றி வளாந்துவருவதாயிற்று. அதனையறிநத சுற்றத்தா ரும மற்றவாகளும் பிறககுங் குழநதை ஆண்குழந் தையாயிருககவேண்டுமென்று இறைவனை வேண்டினா. ஞானகலாமபையாரும, அவரது கணவனாரும, அவாகளின் நெருங்கிய உறவினாகளும பலநற் கனவுகள கண்டனா. காவிரிபபூமபட்டினமுற்றும ஒருவகை உணாசசி தோன்றியது. எலலோர் மனததிலும இன்பம பெருகியது. இதனால அனைவரும அடைநத ஆனநதத்திற்கோர் அளவேயிலலை. இததகைய நன்னிமிததங்களால பிறககுங் குழநதை சிறபபுடையதாகவே யிருககுமென்று அனைவருந் தீர்மானிததனர். கருப்பம வளருங்காலததில் செய்ய வேண்டியவைகளை யெல்லாம முறைப்படி செய்து

வந்தனா. மாதங்கள் பல ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று ஒன்பது மாதங்களாயின. அக்காலையில் அகதிகளுக்கும், மற்றும் வேண்டுவோர்க்கும் சிவநேசர் பொன்னையும் மணியையும் அள்ளியள்ளிக் கொடுத்தார்; ஏழைகளுக்கு வயிறார உண்ணும்படி மூன்று நாட்கள்வரை ஓயாது உயர்ந்த உணவளித்தார்; தேவாலயங்களில் பலவித பூஜை நைவேத்தியங்களைச் செய்து வைத்தார்; இன்னும் எவ்வளவோ நற்கருமங்களைச் செய்தார். மெல்ல மெல்ல நாட்கள் பல சென்றன. பத்தாவது மாதமும் பிறந்தது. இறைவன் தரிசனத்தை எதிர்நோக்கி நிற்கும் யோகியைப்போல் சிவநேசர் குழந்தை பிறக்கும் சமயத்தை எதிர்நோக்கியிருந்தார். குழந்தை பிறக்குங்காலத்தில் தாய்க்குச் செய்யவேண்டியவைகளைப்பற்றிச் சிவநேசரின் வீட்டில் உள்ளார் பேசிக்கொண்டிருந்தனர். புத்திரியின் மகப்பேற்றைக் கவனிப்பதற்காக ஞானகலாம்பையாரின் தாயாரும், அவரைச் சேர்ந்தவர்களும் சிவநேசரின் வீட்டில்வந்து தங்கியிருந்தனர்.

ஒருதினம், 'இன்று குழந்தை பிறக்கு'மென்று எல்லோரும் சொல்லும் வண்ணம் ஞானகலாம்பையாரின் தேகநிலை மாறுபட்டுத் தோன்றியது. உடனே மருத்துவமகளிர் முதலியோர் வந்து சேர்ந்தனர். எல்லோரும் எண்ணியபடியே நல்ல திதி வார யோகம் முதலியனவமைந்த நேரத்தில் ஞானகலாம்பையார் உலகெலாம் உய்யுமாறு ஒரு சற்புத்திரனைப் பெற்றார். பிறந்த குழந்தை ஆண்மகவென்றவுடன் அம்மையார் அதுகாறும் தாம் தேகநோயினால் பட்ட

துன்பத்தை மறந்து இன்பமே ஓருருவானாற்போல் விளங்கினார்.

மைந்தன் பிறந்தானென்னும் செய்தியைக் கேட்ட வுடன் சிவநேசர் சொல்லொணு வானந்தமடைந்து காவிரியில் நீராடித் தமது இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தித்துத் திருமாளிகையை யடைந்து நான் மறையுணர்ந்த பெரியாரையும், சோதிடர்களையும் வரவழைத்துச் சாதகங்கணிக்கச்செய்து பின்னர் அவர் களுக்கு ஏராளமான வெகுமதிகளைக் கொடுத்து அனுப்பினார். ஆலயங்களில் தனியாகப் பல உற்ச வங்களைச் செய்யுமாறு வேண்டும் பொருள் கொடுத் தார். ஆயிரக்கணக்கான ஏழைகள் மனங்களிக்கப் பலவித தானதருமங்களைச் செய்தார். குழந்தை பிறந்ததன் ஞாபகார்த்தமாகப் பொது மக்களுக் கென்று பல குளங்களையும், கிணறுகளையும் வெட்டச் செய்தார். குழந்தை பிறந்தது முதல் பத்து நாள் வரையில் எண்ணெய் விழா முதலானவைகள் மிகச் சிறப்பாக நடந்தேறின. பதினோராம் நாள் குழந் தையின் அன்னையும் பிதாவும் குளித்துப் பின்னர்த் தேடக்கிடைக்காத செல்வமாகிய குழந்தையை நீராட்டி அதற்குச் செய்வனசெய்து பொன்னாற் செய்யப்பட்ட தொட்டிலிலிட்டுப் பல பெரியாரின் இஷ்டப்படி குழந்தைக்குத் திருவெண்காடர் என்று பெயரிட்டனர்.

அதுமுதற்கொண்டு தெய்வவருளால் தோன்றிய அக்குழந்தை, பெற்றோரும் மற்றோரும் கண்டு களிக் கும் வண்ணம் சிரித்து விளையாடி வளர்பிறைபோல்

வளா ந்துவருவ தாயிற்று. அக்குழநதையின் முகத் ைதககண்ட அறிவாளரனைவரும், ' இககுழநதை பிற் காலத்தில் எல்லோருங் கண்டு வணஙகததக்க உயா நிலை யடையும் ' என்றுகூறிச செலவாராயினர்.

ஞானகலாமபையாரோ தமது செல்வககுமாரரைப் பாலூட்டிச் சீராட்டி ா எறுமபு அணுகாவண்ணம கண்ணை இமைகாபபதுபோல காததுவந்தார். இவ் வாறுகக குழநதை மிகச் செலவததுடன் வளர்ந்து ஐந்து வயதுடையதாயிற்று. அதுவரையில் சிவ நேசர் தமது அருமைககுமாரரின் தேனினுமினிய இன் சொற்களைக்கேட்டு மகிழ்நதிருநதார்.

## ஐந்தாவது அத்தியாயம்

### மாய வாழ்வு

'திருநீலகண்டரே! எங்கு இவ்வளவு அவசரமாகப் போகின்றீர்? உமது தமக்கை ஞானகலாம்பையாரா குழந்தையைப் பார்க்கவோ? என்ன ஐயா, ஒரு நாளில் எத்தனை முறைதான் நீர் அக்குழந்தையைப் போய்ப் பார்த்துக்கொண்டிருப்பீர்? வாரும், கொஞ்சம் வெற்றிலைப் போட்டுக் கொள்ளலாம். நானும் உம்மோடு வருகிறேன். அக்குழந்தையைப் பார்த்து நாளாயிற்று. அது என் கண்ணெதிரே நிற்பதுபோல் தோன்றுகிறது' என்றார் பஞ்சாட்சரம் என்பவர்.

தமது நண்பராகிய பஞ்சாட்சரம் என்பவர் கூறிய வார்த்தைகளைக் கேட்டவுடன் திருநீலகண்டர் அவர் எதிரிற் சென்று நின்றார். அவர் வாய்திறக்கவில்லை. அவருடைய முகம் வாடியிருந்தது.

அதைக்கண்ட பஞ்சாட்சரம் அவரைப்பார்த்து, 'திருநீலகண்டரே! என்ன சமாச்சாரம்? ஏன் உமது முகம் இவ்வாறு வாடியிருக்கின்றது? காரணம் என்ன? உமது முகவாட்டத்தைக் கண்டதும் என்மனம் பதறுகின்றது. விஷயமென்ன?' என்று கேட்டார்.

கேட்டதும் திருநீலகண்டர், 'நண்பரே! என மைத்துனர் சிவநேசர் இறக்குந்தருணத்திலிருக்கின்றனர். அதை இங்கொருவர்க்கு அறிவித்து விட்டுச் செல்கின்றேன். இனி நிற்பது கூடாது. நீர் என்னோடு வருவதாயின் வருக' என்று கண்கலக்கத்துடன் கூறினார்.

இவ்விஷயத்தைக் கேட்ட பஞ்சாட்சரம் என்பவர் பொருக்கென எழுந்து, 'ஐயோ, இஃதென்ன! இடியிடித்தாற் போலிருக்கின்றதே! குழந்தை பிறக்கவில்லை யென்று வருந்திய அவருக்குக் குழந்தை பிறந்த பின் இக்கதியோ நேர்ந்தது! ஆ! என்ன கொடுமை! கடவுளின் சோதனையோ? குலக்கொழுந்தாகிய அவருக்கு இதற்குள் இறுதிக்காலம் வந்ததோ' என்று கூறிக்கொண்டே தமது நண்பராகிய திருநீலகண்டரோடு சிவநேசரின் வீட்டை நோக்கி நடந்தார்.

அப்போது திருநீலகண்டர் தேம்பித்தேம்பியழுது கொண்டே போனார். அவரது வருத்தத்தைக் கண்ட பஞ்சாட்சரம், 'அன்பரே! எல்லாம் சிவன் செயலேயன்றி நம் செயலாலாவதொன்றுமில்லை. பிறந்தவர் இறப்பதும், இறந்தவர் பிறப்பதும் என்றும் இயல்பே. எனக்கும் வருத்தமாகத்தானிருக்கிறது. சிவநேசரைப் பிரிவதென்றால் யார்தான் வருந்தமாட்டார்கள்? ஆயினும் என் செய்வது? எனக்கு அவர் இறப்பாரென்று தோன்றவில்லை, நீர் வருந்தவேண்டாம். தைரியமாயிரும்' என்று தேறுதல் கூறினார்.

அதற்குத் திருநீலகண்டர் வருந்திய சிந்தையுடன்

அவரைபபார்த்து, 'கண்பார்வை வேண்டாமென்று சொல்லும குருடன் எவனேனும உண்டோ? சிவ நேசா பிழைததெழுநதிருபபாராயின் எலலோருககும சநதோஷநதான். ஐயோ அவர் இறநதால குழந்தை திருவெண்காடன் பெரியவனான பிறகு, 'என் தநதை எங்கே?' எனறு கேட்டால் என்னசொலவோம. அறியாச சிறு குழநதையாகிய அவனைவிட்டுச சிவ நேசா இறககத துணிவாரா? எலலாவறறையும வெறுதத ஞானிகளுககும மககள்மேலகொண்ட ஆசை நீங்காதே. என மைத்துனர் சிவநேசா மட்டும எவ்வாறு அவவாசையினறி இறக்ககககூடும? அநதோ என செய்வேன்?' எனறு சொலலி வருநதினார்.

'திருநீலகண்டரே! நீா எல்லாமறிந்தவரா யிருந்தும இவ்வாறு வருநதலாமோ? அவரவா வினையளவுககு அவரவா வருவாா. "ஆவாரை யாரே அழிபபா? அதுவன்றிச சாவாரை யாரே தவிாபபர்?" நமமாலாவது ஒன்றுமிலலை. ஊழ்வினைபபடியே யாவும நடககும' எனறு தேறுதல கூறினார் பஞசாட்சரம

இவ்வாறு இவாகளிருவரும பேசிககொண்டே சிவ நேசரின் மாளிகையை யடைந்தனர். அப்போது அமமாளிகை முறறும, கடலபொங்கி ஆரவாரிபபதைப போல் 'ஓ' வென்னும பெருஞசபதத்தாலும, அழுகுரலோசையாலும் நிரமபியிருந்தது. அதைககண்ட திரு நீலகண்டர், 'ஐயோ கெட்டேன்' என்று சொல்லி அலறிககொண்டே வீட்டிற்குள் ஓடினார். அங்கே செம்பஞ்சாலான படுககை யொன்றின்மீது சிவநேசர் பிரேதமாகக கிடந்தார். குழநதை திருவெண்காடர்

அவர் அருகில் இருந்து எல்லோரும் வருந்துவதைக் கண்டு என்னவோவென்று ஏங்கியிருந்தார். அம் மாளிகையிலிருந்தார் பட்ட துன்பத்தை உள்ளவாறே விளக்குவது சாத்தியமன்று.

சிவநேசரின் மனைவியாராகிய ஞானகலாம்பையார் பட்ட துன்பத்திற்கோர் அளவேயில்லை. அவர் தமது கணவனாரின் பிரேதத்தின்மீது விழுந்து புரண்டழு தார். 'என்னிறைவா! எனதுருயிரே! வணிகர் குல மணியே! வெள்விடையோன் திருவடிக்கே தொண்டு பூண்டொழுகிய என நல்லவரே! இப்பாழுலகில் என்னைவிட்டு எங்குச்சென்றீர்? பொன்னுடு சென் றீரோ? எந்நாளும் இருப்பதாகிய கைலாயத்தைக் கருதிப் போயினீரோ? அருமருந்தன்ன குழந்தை யாகிய திருவெண்காடனை மறந்தீரோ? அவன் மலர் முகம் உமக்கு வெறுப்புற்றதோ? அன்றி விதிதான் இவ்வாறிருந்ததோ? இனி இவ்வுலகில் நான் எவ்வாறு உயிர் வாழ்வேன்? பாவியாகிய நான் உம்மோடு வரக் கூடாதென்று எண்ணியோ, " நீ என்னோடு இறக்கத் துணியாதே. குழந்தை திருவெண்காடனைக் காப் பாற்றி உயிர்வாழ்ந்திரு. அவன் உலகம் போற்ற வாழப்போகிறுன் " என்று கூறிச்சென்றீர்? உமது வார்த்தையை மீறுவதற்கஞ்சியே நான் உயிர்வாழ்கின் றேன். குழந்தையின் பொருட்டே பாரமாகிய இவ் வுடலை நான் இனியும் சுமக்கவேண்டியவளாகின்றேன். உம்மை இழந்த எனக்கு இவ்வுலகம் அந்தகாரமாகத் தோன்றுகிறது. கணவனை இழந்து பெண்கள் உயிர் வாழ்வது எதற்காக? கணவனைப் பிரிந்து உயிர்வாழும்

பெண்களை கண்களை யிழந்து பைத்தியம் பிடித்தவர் களுக்குச் சமானமாவார்களென்று சொல்லலாம். ஆ! அந்தோ கெட்டேன். ஆ, கணவரே! என்னை விட்டு நீங்கினீரோ? எவ்வாறுய்வேன்? எவ்வகையிலும் சிறந்த தங்களை நான் கணமேனும் மறந்திருக்கமுடியுமோ? ஆ, கொடியேன். கெட்டேன்—கெட்டேன். இனபமாகத் தங்களோடு வாழ்ந்துகொண்டிருந்த தங்கணவர் இறப்பத் தாங்களும் இறவாது, நஞ்சு பல மூழ்கி வாழும் மக்களைப்போல யானும் இருக்கவேண்டியவளாயினேன். அந்தோ இஃது அநியாயம்! ஆ, என் அருமைக் கணவரே, என் செய்வேன்?

"கொடியே னவைகண் ணகீலே னுயிர்கோள்
முடியா நமனே முறையோ முறையோ
விடியா விருள்வா யெனைவீ சினையோ
அடியே னுயிரோ யருணு யகனே",

என்று இன்னும் பலவாறு ஞானகலாம்பையார் சொல்லிப் புலம்பினார். அவர் புலம்புவதைக் காணச் சகியாது துன்புற்ற எனையோர் அவருக்குத் தேறுதல் கூறி ஒருவாறு அவரது துன்பத்தைப் போக்கினர்.

பிறகு அறிவுடையார் பலர் ஒன்றுகூடி குழந்தையாகிய திருவெண்காட்டரைக்கொண்டு செய்ய வேண்டிய கிரியைகளைச்செய்து பிரேதத்தைத்தகனம் செய்தனர். நாட்கள் பலவாயின.

தமது குழந்தையின் முகத்தைக்கண்டு ஒருவாறு தமது கணவரின் பிரிவை மறந்திருந்த ஞானகலாம்பையார் குழந்தைக்குக் கல்வி கற்பதற்குரிய காலம் வந்தமையினால் தமது சகோதரர் முதலிய பல உறவி

ணர்களின் முன்னிலையில் செய்வன செய்து குழந்தையை உயர்ந்தவோர் ஆசிரியரிடத்தில் கல்வி பயில விடுத்தார். கல்வி சம்பந்தமாக அவ்வாசிரியர் திருவெண்காடர் விஷயத்தில் அதிக ஊக்கஞ் செலுத்தியும் ('தந்தையொடு கல்விபோம்') என்னும் வாக்கியத்திற்கு இலக்காகாது அவரைத் தப்பச்செய்தார்.

## ஆருவது அத்தியாயம்

### திருவெண்காடரின் கல்வித்திறம்

காவிரிப்பூம பட்டினத்தின் இராஜவீதியின் ஒரு புறம திருவெண்காடர் கல்விபயிலும கலவிச்சாலை யிருநதது. அக்கல்விச்சாலையின் ஆசிரியா உததம குணம நிறைந்த சத்திய சீலா.

ஒரு நாள் அககல்விச்சாலையில வழககமபோல் அநேகஞ் சிறுவர்கள் குழுமியிருநதனர். அவர்களி லோா சிறுவன் ஒரு மூலையில் உட்காாந்துகொண்டு உபாததியாயர் தனக்குச சொல்லிக கொடுத்திருந்த பாடததைப் படிததுககொண்டிருநதான். சில சிறு வாகள கல்விச்சாலையாயிறறே யென்று கவனியாமல் மரியாதையின்றி ஆடிப்பாடிக்கொண்டிருநதனர். சில சிறுவர்கள் சமயததிற்கு வேண்டாத வீணவமபுகளைப் பேசிககொண்டிருநதனா. நிற்க.

அப்போது சதாசிவனென்னும் பெயரினையுடைய மாணவன் தன் கூட்டாளிகளோடு ஒரு புறமாகவமர் ந்து பேசிக்கொண்டிருந்தான். அவர்களில் சங்கர லிங்கம் என்பவன் மற்றவர்களைப்பார்தது, ' அடே, இங்கே கவனியுங்களடா. நேற்றையுதினம நமக்கு உபாத்தியாயர் சொல்லிக்கொடுத்த பாடங்களை இன்றைக்கு நீங்கள் படித்துக்கொண்டு வந்தீர்களா ?' என்று கேட்டான்.

உடனே விஜயன் எனபவன் மற்றவாகளைப்பார்தது, 'என்னவோ, பாடமோ கீடமோ, எனககு ஒன்றுந தெரியாது. உபாததியாயா நேற்றுச் சொலலியது எனககு ஒன்றும் விளங்கவில்லை. அதனால் எனககு ஒன்றுந் தெரியாது' என்றான்.

என்றதும அமபலவாணனெனபவன் அவனைப பாாததது, 'என்ன சொன்னாய்? உபாததியாயா சொன்னது உனககு விளங்க விலலையா? உபாத்தியாயா தமிழ்ப பாஷையிலதானே சொன்னார்? நீ மூடன். உனக்கு அவா எபபடிச சொன்னாலும ஒன்றும விளங்காது. உனககுத தெரியாவிட்டால் உபாததியாயர் மீது பழி சுமததுகிறாயே. உபாததியாயர் சொன்னது எங்களுககு மட்டும விளஙகியதே. உனககு ஏன் விளங்கவில்லை? (உன் புததி அவ்வளவு உலக்கைக் கொழுநதா யிருககிறதாகத தெரிகிறது) என்றான்.

அதைக் கேட்டவுடன் விஜயன் கோபங்கொண்டு அவனைபபாாத்து, 'அடே! போதும நிறுததது. மட்டும் புத்திசாலியோ? நேற்றையதினம கடற்கரையில் என்னவோ வேடிககை பார்ககவெண்ணி வயிறு நோகிறது என்று உபாத்தியாயரிடம பொய் சொலலிப்போய்விட்டாயே! அஃது எனககுத்தெரியாதோ? நான்கு நாட்களுக்கு முன் பாடந்தெரியாமையால் "வயிற்று நோய்; பள்ளிக்கு வர முடியாது. மன்னிக்கவேண்டும்" என்று உபாததியாயருககுச சொலலுமபடி என்னிடமதானே சொல்லியனுப்பினாய்? நீ யோககியனைப்போல் பேசுகிறாயே' என்றான்.

இவ்வாறு விஜயன் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த மாணவர்களில் ஒருவனான சாம்பசிவன் விஜயனைப்பார்த்து, 'அம்பலவாணன் பொய் சொன்னானென்று சொல்கிறாயே. பொய் என்று தெரிந்திருந்தும் அதை ஏன் நீ உபாத்தியாயரிடம் வந்து சொன்னாய்? நீ அவ்வாறு சொன்னதனால் நீயுங் குற்றஞ் செய்தவனேயாவாய்' என்று சொன்னான்.

அப்போது சதாசிவன் மற்றவர்களைப் பார்த்து, 'அடே, நீங்கள் வீணாகப் பேசவேண்டாம். நான் சொல்வதைக் கேளுங்கள். நமது உபாத்தியாயர் என்னவோ பொதுவாக எல்லோருக்கும் பாடம் நன்றாகச் சொல்லிக் கொடுப்பதில்லை' என்றான்.

அதுவரையில் அவர்கள் அவ்வாறு பேசியதை விநோதமாகக் கவனித்திருந்த திருவெண்காடர் அவர்களுக்கு முன்வந்து, 'நண்பர்களே, நீங்கள் இவ்வாறு கல்விச்சாலையில் வீண் வம்பு பேசிக்கொண்டிருப்பது நன்றாயில்லை. உண்மையை அறியாமல் நீங்கள் பேசுவது பாவமாகும். நான் இவ்வாறு சொல்வதற்காக நீங்கள் என்னைக் கோபித்துக் கொள்ளவேண்டாம். நான் உண்மையைப் பேசுகிறேன். நமக்கு உபாத்தியாயர் சொல்கிறதையே திருப்பிச் சொல்லத் தெரியாது உபாத்தியாயர் நன்றாகப் பாடம் சொல்லவில்லையென்று சோம்பேறித்தனமுடைய மாணவன் சொல்வானேயன்றி சுறுசுறுப்புடையவன் சொல்லமாட்டான். இந்த உபாத்தியாயருக்கு ஒன்றுந் தெரியாது; அந்த உபாத்தியாயருக்கு எல்லாந்தெரியுமென

றிவவாறெல்லாம நமபிற சிலா சொலல நான கேட டிருககிறேன. இவ்வாறு கூறுவது பொருநதுமா? உபாத்தியாயர்களின திறமையை அளவிடககூடிய சகதி நமககிருககுமானால நமக்கு இங்கு என்ன வேலை? உபாததியாயாகளின கலவித்திறததை அளகக முற் படும மாணவன் மூடனாவான. உபாததியாயா எல்லாாககும ஒரேவிதமாகததான கலவியைக கறபிக கின்றார். ஆனால விஷயததைச சில பிள்ளைகள ஒரு காதில வாங்கி மறறொருகாதின வழியாக வெளியே விட்டுவிடுகின்றனர். இபபடிச செய்வதற்காகவே தங்களுக்கு இரண்டுகாதுகள இருககின்றனவென்று அவாகள் எண்ணிககொண்டிருககின்றனாபோலும்! நமது கல்விசசாலையில் வேறுசில மாணவர்கள் தாங்கள் பணககாரர்களா யிருபபதால் வருந்திப படிப்பது அநாவசியம என்று கருதுகிறாகளெனபது எனககுத் தெரியும. அநதோ அவ்வாறு எணணுவது மிகவும் அறியாமையாகும. பாடுபட்டுப பொருள்தேடவும், தன அறிவை வளாததுககொள்ளவும ஒரு ஏழை வருநதிப் படிபபதேபோல், தன்னிடமிருககும பொருளைக் காபபாற்றும வகையறியவும, அறிவை வளர்க்கவும தனவநதனும படிககவேண்டும. கல்வி யில்லாத தனவநதனிடம இருக்கும பொருள் குரங்கின கைப்பூமாலைபோலாகும. நமது கலாசாலையில் இன்னும சில மாணவர்கள், "கல்வி கற்க நேரமில்லை. வீட்டிற் குபபோனால் வேறு வேலைகளேற்பட்டுவிடுகின்றன" என்று கூறுகின்றனர். அவர்கள் சொல்வது சிறிதும் பொருந்தாது. "மனமுண்டானால வழியுண்டாகும"

படிக்கவேண்டுமென்னும் உறுதியான எண்ணம் இருக்குமானால் எப்படியும் படித்துவிடலாம். சுறுசுறுப்பில்லாதவர்களே படிக்கநேரமில்லை என்பார்கள். நண்பர்களே நாம் நமது ஆசிரியரை அவமதியாது அவர் சொற்படி நடப்போமானால் விருத்தியடைவோம். ஆசிரியர் தந்தைக்குச் சமானமென்று பெரியோர் சொல்கின்றனர். ஆகையால் தந்தைக்குக் கீழ்ப்படிவதைப்போலவே ஆசிரியருக்குங் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். தந்தைக்கு அடங்காதவன் கெடுவதைப்போலவே ஆசிரியருக்கு அடங்காதவனும் கெட்டுத் தெய்வகோபத்திற்கும் ஆளாவான். நாம் எப்படியாவது கல்வியைச் சிரமப்பட்டுக் கற்றுக் கொள்ளவேண்டும். கல்லாத ஒருவனைக் குருடனென்னலாம். அவனுக்குக் கண்களிருந்தும் பிரயோசனமில்லை. உலகத்தில் கல்வியைவிடச் சிறந்த பொருள் வேறில்லை. கல்வியைவிட உயிர்க்குத் துணையாவது மனிதர்களுக்கு வேறு இல்லை. எல்லோரும் நம்மைக் கைவிட்டகாலத்தும் நாம் கற்கும் கல்வி நமக்குத் துணையாயிருந்து உதவிசெய்யும். நமக்குத் துணையாயிருக்கும் மனிதர்களும், வேறு பலபொருள்களும் பல காரணங்களால் அழிதல் கூடும். (நாம் கற்கும் கல்வி வெள்ளத்தாலழியாது; வெந்தணலால் வேகாது; அதைப் பலம்பொருந்திய அரசர்களாலும் நம்மிடமிருந்து அபகரித்துக்கொண்டுபோக முடியாது; துஷ்டர்களால் அழிக்கமுடியாது; செலவிட்டாலும் குறையாது: தாயாதிகள் பங்கிட்டுக்கொள்ள முடியாது;) இன்னும் கல்வியின் பெருமை இத்தகைய

தென்று எவராலும் கூறமுடியாது—' என்று கூறித் திருவெண்காடர் மறுபடியும் தமது நண்பர்களை நோக்கி, 'சிநேகிதர்களே! இத்தகைய கல்வியை நாம் நமது ஆசிரியரிடம் ஒழுங்குடன் நடந்து வருந்திக் கற்கவேண்டும். நிலமானது உழுகிறவர்கள் படும் பாட்டுக்குத் தக்க பலனைத் தரும். மாணவர்களும் தாங்கள் எவ்வளவு வருந்திக் கற்கின்றார்களோ அவ்வளவுக்குக் கல்வியைப்பெறுவார்கள். உபாத்தியாயர்களிடம் குற்றங்காண முற்படக்கூடாது. அப்படி ஏதேனும் அவர்களிடம் குற்றங்காணப்படுமாயினும் அன்னம் நீரைப்போக்கிப் பாலையே உட்கொள்வதைப் போல நாம் குற்றம்போக்கிக் குணத்தையே கண்டு மகிழவேண்டும். பன்றியானது வடிகட்டும்போது மதுவைவிட்டு அதில் காணப்படும் ஏனைய முதலியவைகளைப் பிடித்துக்கொள்வதுபோல நாம் ஆசிரியரிடம் காணப்படும் நன்மைகளைவிட்டுத் தீமைகளைக் கவனிப்பதிலேயே கருத்தாயிருக்கக்கூடாது. தீமைகளைக் கவனிப்பதிலேயே கருத்தாயுள்ளவன் ஒரு போதும் உருப்படமாட்டான். நண்பர்களே, இனியும் நான் உங்களுக்கு என்ன சொல்லப்போகிறேன். இதுவரையில் நான் சொல்லியவைகளில் குற்றமிருந்தால் மன்னிக்கவேண்டும். நானும் உங்கள் நண்பனாகையால் இவ்வாறு சொல்லவேண்டுவது என் கடமையென்று கருதிச்சொன்னேன். உபாத்தியாயர் வருமுன் நாம் நமது பாடங்களைப் படிப்போம் வாருங்கள்.' என்று கூறினார்.

திருவெண்காடர் சொல்லிய விஷயங்களைக் கேட்ட

அவரது தோழர்கள் உள்ளபடியே மகிழ்வடைந்து அவரைக கொண்டாடினார்கள்.

திருவெண்காடா சொலலியவைகள் யாவும உண்மையே. அவா சொலலியவைகளை இககாலதது மாணவாகள கவனிபபாரகளா? இககாலததில் கலாசாலைகளில படிககும மாணவாகளின கதி பரிதாபததிற்கிடமாயிருககிறது. இவாகளுககுக கலாசாலையில் உளள உபாததியாயாகளிடம உண்மையில அன்பும மதிபபும உண்டோ எனறு எண்ணுங்கால் இலலை என்றே தோனறுகிறது. ஆசிரியா எபபடிபபட்டவாகளாயினும சரியே. அவர்களிடம ஒழுஙகாக நடககாத மாணவன் உலகததில் சிறபபடைவதில்லை. இது பயமுறுததுதலான வாாததையன்று. அநுபவத்தில் நாமசொல்வது உண்மையெனறு தெரிந்து கொளளலாம. நிற்க.

பினனும சிறிது நேரததிறகுள திருவெண்காடர் இருககும கலவிசசாலையின ஆசிரியராகிய தாமோதரனா கல்விசசாலைககு வநது தமது ஆசனத்தமாநதாா. பிறகு அவா அநேக மாணவாகளை யழைதது அவரவாகளுடைய பாடததைககேட்டார்.

பினனர் அவா திருவெண்காடரையும, அவருடைய நண்பர்களாகிய சதாசிவன், சாமபசிவன், விஜயன், அமபலவாணன, சஙகரலிங்கன் முதலியவாகளையும வரவழைதது, 'நேறறையதினம நான் உங்களுக்குச் சொல்லிககொடுதத விஷயததைப படிததுவந்திர்களா?' என்று கேட்டார்.

உடனே திருவெண்காடர் எல்லோரினும்

முன்வந்து 'படித்துவந்தேன்' என்றார். மற்றவர்கள் ஏதும் சொல்லாமல் மௌனமாயிருந்தார்கள்.

பிறகு ஆசிரியர் தாமோதரனார் மௌனமாயிருப்பவர்களைப் பார்த்து, 'ஏன் மௌனமாயிருக்கின்றீர்கள்? உங்களுக்குப் பாடம் வராதோ?' என்று கேட்டார்.

அதற்கவர்கள், 'பாடம் முற்றிலும் வராது. நாளைக்கு —இல்லை. வீட்டிற்குப்போகுமுன் படித்து ஒப்பித்துப் போகிறோம்' என்றார்கள்.

'நல்லது, இப்படியே நின்று படியுங்கள்' என்று கூறிவிட்டு ஆசிரியர் திருவெண்காடரைநோக்கி, 'திருவெண்காட, நீ உலகெலா முய்ய அவதரித்த ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த "கண்காட்டுநுதலானு" மென்னுந் திருப்பதிகத்தைச் சொல்வாயாக' என்றனர். உடனே திருவெண்காடர்,

"கண்காட்டு நுதலானுங்
கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும்
பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும்
பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும்
விடைகாட்டுங் கொடியானே"

என்று இன்னிசையுடன் பாடிமுடித்தார்.

## திருவெண்காடரின் கல்வித்திறம்

பின்னும் அவ்வாசிரியர் பலகேள்விகளைக் கேட்க, திருவெண்காடர் அக்கேள்விகளுக்கெல்லாம் ஏற்ற வாறு விடை சொல்லிவந்து ஆசிரியர் அருளைப் பெற்றார்.

# ஏழாவது அத்தியாயம்

## வெறுப்புற்ற மனம்

திருவெண்காடர் ஆசிரியரிடத்திற் சகல கலைகளையும் நன்குகக் கற்றுத்தேர்ந்து குருதட்சணைகொடுத்த பின்னர்த் தமது குடும்பக் காரியத்தைக் கவனித்து வரலானார். அளவற்ற ஐஸ்வர்யங்களை அவர் ஆண்டனுபவித்தார். இப்பருவத்திலேயே அவருக்கு இவ்வுலகத்தின்மீது வெறுப்பேற்பட்டது. உலகத்திற் காணப்படும் எப்பொருளிடத்தும் அவர் ஆவல் கொள்ளவில்லை. 'நாம் யார்? எதற்காக இவ்வுலகில் பிறந்தோம்? இனி எங்குப்போகப்போகிறோம்? மனிதர்கள் பிறப்பதும் இறப்பதுமாயிருந்தால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய முடிவுதானென்ன? இவ்வளவு பெரிய உலகமும் இதிற்காணப்படும் பொருளும் எக்காரணத்திற்காகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன? காரணமின்றிக் காரியமில்லையே. மனிதன் எங்கிருந்து வந்தான்? இனி யெங்குப்போகப்போகிறான்? அவன் கதியென்ன?' என்பனபோன்ற விஷயங்களைப்பற்றி அவர் அடிக்கடி சிந்தித்துப்பார்ப்பதுண்டு. திருவெண்காடர் பதினாறுபிராயம் சரியாக முற்றப்பெறுதற்கு முன்னரே இவ்வாறு சிந்திக்க முயன்றது அவருடைய பண்டை வினையினற்பயன் போலும்! அவர் தான தருமத்திலும் வியாபாரத்திலும் சிறந்து விளங்கினார். அவர் பெயர் நாடெங்கும் பரவியது. அவரது கல்விப

பெருக்கையும், செல்வ மிகுதியையும், நற்குணப் பொலிவையும் கண்ட அனைவரும் அவர் பெயரைச் சொல்ல வாய்வராமல் அவர் பட்டினத்திருந்தமையால் அவரைப் பட்டினத்தார் என்று கௌரவமாக அழைக்கத் தலைப்பட்டனர். காலஞ் செல்லச் செல்ல அப்பெயரே அவரது இயற்பெயர்போலாயிற்று. அவர் இளவயதுடையவரா யிருந்தமையால் அநேகர் அவரைப் பட்டினத்துப் பிள்ளையென்றும், பட்டினத்துப் பிள்ளையாரென்றும் அழைத்துவரலாயினர். இனி யாமும் அவருக்கு அப்பெயரிட்டே உலக வழக்கத்திலுள்ள அவர் சரித்திரத்தைக் கூறுவாம்.

பட்டினத்தார் கல்வித்திறத்தைக் கண்ட அநேகர் அவரிடஞ் சென்று கடவுள் சம்பந்தமாகப் பேசி வருவர். தம்மிடம் வருவோருக்கெல்லாம் பட்டினத்தார் ஆடம்பரமின்றிக் கடவுள் சம்பந்தமாக அநேக விஷயங்களைக் கூறுவர்.

ஒருநாள் அவர் தனித்துப் பொழுதுபோய் நான்கு நாழிகையான பிறகு தமது மாளிகையின் நிலாமணி முற்றத்தில் நிலவு வெளிச்சத்தில் செம்பஞ்சாலான பஞ்சணை இடப்பெற்ற அமளியில் உட்கார்ந்த வண்ணம் தமக்குமுன் ஆகாயத்தில் தோன்றும் முழுச் சந்திரனைக் கவனித்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் மனத்தில் பல எண்ணங்கள் கடலில் எழும் அலைகளைப்போல ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தன.

ஆ, என்னே! உலகவாழ்வு! இச்சந்திரன் அழிந்தழிந்து தோன்றுவதுபோலவே மானிடர்களும்

மடிந்து மடிந்து தோன்றிக்கொண்டிருக்கின்றனர். ஓயாது இப்படியே சலித்துக்கொண்டிருந்தால் எப்பொழுதுதான் மனிதனுடைய ஆன்மா சுகமடைவது? அரவாபரணா! அண்ணாமலை! நான் கடைத்தேற நீதான் எனக்கொரு மார்க்கஞ் சொல்லவேண்டும். காலன்வருமுன்னே நான் கடைத்தேற அருளல்வேண்டும். இனி அழியும் என் தேகத்தைப் போற்றி வளர்க்க நான் உடன்படேன். இத்தேகம் மிகக் கேவலமானது. இஃது எனக்குச் சொந்தமன்று.

எரியெனக் கென்னும் புழுவோ
    வெனக்கென்னு மிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ
    வெனக்கென்னுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும்புன் னாயெனக்
    கென்னுமிந் நாறுடலைப்
பிரியமு டன்வளர்த் தேனித
    னாலென்ன பேறெனக்கே?

என்று கூறிச் சிந்தைவருந்தினார். இவ்வாறு அவர் அருஞ்செல்வம் விழையும் தரித்திரனைப்போல் தினமும் பலவாறு எண்ணி எண்ணி ஏங்கியபடியால் அவரது தேகம் நாளுக்கு நாள் மெலியலாயிற்று.

அதைக்கண்ட அவரது அன்னையார் அவரை நோக்கி, 'அப்பா, உன் உடல் ஏன் இவ்வாறு நாளுக்குநாள் இளைக்கின்றது? உனக்கேற்பட்ட கவலை என்ன? உன்கவலையை நீ என்னிடம் சொல்ல வேண்டும். சொல்லாமல் இவ்வாறு வருந்த

வேண்டாம். உனக்கு நேர்ந்த கஷ்டமென்ன? என்று கேட்டார்.

அன்னையார் கேட்ட கேள்விக்குப் பட்டினத்துப் பிள்ளையார் யாதொருபதிலுங் கூறாது சிந்தையைச் சிவனபாற்செலுத்தி மௌனமாயிருந்தார். தம் உள்ளக் கருத்தைத் தமது தாயாரிடஞ்சொன்னால் அவர்கள் என்ன நினைப்பார்களோ என்று எண்ணி அஞ்சினார். அதுவே அவர் மௌனமாயிருந்ததற்குக் காரணம்.

பின்னர்த் தாயார் தமது அருமந்த மகனைப்பார்த்து, 'கண்மணீ! என் வீணே ஆலோசித்துக் கொண்டிருக்கின்றாய்? நேரமாகிறது. வா போஜனத்திற்கு' என்று கூறியழைத்தார்.

அதற்குப் பிள்ளையார் அவரைப்பார்த்து, 'அம்மணீ! இன்றைக்குப் போஜனம் எனக்கு அவசியமாகத் தோன்றவில்லை. மறுவேளை பார்த்துக்கொள்ளுகிறேன். மன்னிக்கவேண்டும் என்று கூறித் தமது ஆலோசனையில் மனத்தைச் செலுத்தலானார்.

# எட்டாவது அத்தியாயம்

## இறைவன் அருள்

ஆகாரம் வேண்டாமென்று கூறிய பிள்ளையார் சிவனருள் பெறுவதற்கு மார்க்கமென்ன வென்னும் சிந்தனையுடன் அன்றிரவு கண் துயின்றார்.

தம்மிடத்து மெய்யன்புள்ள மக்கள் விரும்புவதை அளிக்கவல்ல சிவபிரான் பட்டினத்தாருக்குற்ற மனக் குறையை அகற்றத் திருவுளங்கொண்டு அன்றிரவு அவர் கனவிற்றோன்றித் தமது திருக்கரத்தால் அவருடைய உடலைத் தடவிக்கொடுத்து அவரைப் பார்த்து, 'அன்பனே, நீ ஏன் இவ்வாறு உடலிளைத் தனை?' என்று கேட்டார்.

கேட்டதும் பட்டினத்தார், 'எம்பெருமானே! மாதொருபாகமுடையாய்! என்னை யாட்கொண்ட தேவே! என்னையும் ஒரு பொருட்டாக வெண்ணி இங்கு எழுந்தருளினீரோ? எளியேன் தவம் சிறந்ததோ? இனி எனக்கொரு கவலையுமுண்டோ? யான் இனி உய்ந்தேன்! உய்ந்தேன்! உம்மையன்றி எனக்கு யார் கதி? தேவ, தேவ! என்னை யாட்கொள்வாய், எம்பெருமானே! மாதொருபாகமுடையாய்! என்னுடைய உடல் பொருள் ஆவி முதலியவைகளை நீ ஏற்றுக்கொண்டு உன்னுடைய உடல் பொருள் ஆவி முதலியவைகளை எனக்குக் கொடுத்தருளல் வேண்டும்' என்று கூறி எம்பெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்.

உடனே சிவபெருமான் அவரை நோக்கி, 'அன்பனே, இனி உனக்கொரு குறையும் வாராது. எழுந்திரு' என்று கூறி அவரைக் களிப்பித்தார்.

பின்னும் பிள்ளையார் சிவபெருமானை நோக்கி, 'என்னையாட்கொண்ட தேவே, இவ்வுலகத்தில் மக்களைப் பின்னும் பின்னும் பாசவயப்படுத்துவது நிலையற்ற செல்வமேயன்றோ? அச்செல்வத்தை யான் வேண்டேன். என்னிடமிருக்கும் செல்வப் பொருளைத் தேவரீர் அகற்றி என்னை வறியனாக்குதல் எனக்கு விருப்பம்' என்று கூறினர்.

அதுகேட்ட சிவபெருமான், 'மைந்தனே, அப்பொருள் உன்வசமே யிருக்கட்டும். நீ அவைகளைக் கொண்டு எனது அடியார்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வாயாக' என்று கூறினர்.

பின்னர்ப் பிள்ளையார் தம்மை ஆட்கொண்ட இறைவனை நோக்கி, 'மலைமகள் தலைவ, அடியேன் உம்மைப் பூசித்துப் பேறுபெற விரும்புகிறேன். எவ்விடத்தில் எவ்வாறு பூசிப்பதென்பதைப்பற்றி அடியேனுக்கு அருள் புரியவேண்டும்' என்றனர்.

உடனே சிவபெருமான் அடியவரை நோக்கி, 'குழந்தாய், நாளைய தினம் திருவோண நட்சத்திரம் கலந்த சோமவாரப் பிரதோஷமானபடியால், நீ என்னுடைய தலங்களில் ஒன்றாகிய திருவெண்காட்டுக்குச் சென்று அங்கு எம்மையும் பிராட்டியாரையும் பூசித்து அடியவர்களுக்கு அன்னமிட்டுப் பின்னும் பலவித தான தருமங்களைச்செய்து காத்திரு. அப்பொழுது நான்மறையோதி மனப்பக்குவப்பட்ட

அந்தணர் ஒருவர் உனமுன் தோன்றி நீ என்னை எவவாறு பூசிபபதென்பதைப்பற்றி உணர்த்துவார். நீ அவர் சொலகிறபடி என்னைப பூசித்து அழியாத பேரின்பத்தைத அடைவாயாக' என்று கூறித் திருவெண்ணீறணிந்து போனர்.

இவ்வளவும நடந்தபின் பட்டினத்தார் திடுக்கிட்டு விழித்தார். தாம கணடது கனவென்றுணர்ந்தார். 'ஆ, இறைவனே, யாவும உண்மையென்றல்லவோ நான் எண்ணிககொண்டிருந்தேன். நான் கண்டவை யாவும் மாயமாயினவே. நான் நனவில் எண்ணியவைகள கனவில் தோன்றினவோ? அன்றி நான கண்ட கனவு உண்மைதானே? உண்மைதான், அதிற் சந்தேகமில்லை. கடவுள இவவளவுதூரம எனமேல கிருபைவைத்தது என் புண்ணியவசமேயாகும. இனி எனககென்ன குறை? இனி எனககென்ன தாழ்வு? எம்பெருமானே என கனவில தோனறினுரென்ருல் எனக்கினி வேண்டியது எனன விருக்கின்றது?

விட்டே னுலகம் விரும்பே
னிருவினை வீணருடன்
கிட்டே னவருரை. கேட்டுமி
ரேன்மெய் கெடாதநிலை
தொட்டேன் சுகதுக்க மற்றுவிட்
டேன்றெல்லை நான்மறைக்கு
மெட்டே னெனும்பர மென்னிடத்
தேவந்திங் கெய்தியதே

என்று கூறி மகிழ்ந்தார்.

அவர் உணவுகொள்ளாமல்நித்திரைபோயினமையால

'குழந்தைக்கென்னவோ' என்று கவலை கொண்ட தாயார் அவர் அருகே சயனித்திருந்தார். அவ்வம்மையார் தமது அருமைக் குமாரர் திடுக்கிட்டெழுந்து பேசியதை யறிந்து அவரைப்பார்த்து, 'மகனே, என்ன சமாசாரம்? நீ ஏன் சட்டென்று நித்திரை நீங்கி யெழுந்து இவ்வாறு வருந்துகின்றாய்? நீ கனவுகண்டனையோ? நீ கனவில் கண்டதென்ன?' என்று கேட்டார்.

கேட்டதும் பிள்ளையார் அவரைப் பார்த்து, 'அம்மா, கடவுள் என்னையாட்கொள்ளத் திருவுளங் கொண்டார்' என்றுகூறித் தாம் கனவிற் கண்ட விஷயங்களை விவரமாகச் சொன்னார்.

அதுகேட்ட அவரது அன்னையார், 'மகனே, கடவுள் உன்மீது கிருபை கூர்ந்திருக்கின்றார் என்பதிற் றடையில்லை. நீ செய்ய விரும்புகிற சிவபூஜை சாமானியமானதன்று. அது மிகவும் அருமையானது. வேதாகமங்களே சிவபெருமானின் மகிமையை அறியாமல் மயங்கும்போது சிறு குழந்தையாகிய நீ அறிவதெங்ஙனம்? சிவபூசையோ பக்தி, வைராக்கியம், அறிவு, ஆசாரம் முதலியவைகளில் ஒன்று குறைந்தாலும் நிறைவேறாது. சிவபூசை செய்வதன்முன் பஞ்சாட்சர ஜபத்தாற் சித்த சுத்தி செய்திருக்கவேண்டும். இப்பஞ்சாட்சரமே சைவ சமய மந்திரங்கட்கெல்லாம் தலைமைவாய்ந்தது. அத்தகைய பஞ்சாட்சர மந்திரத்தைச் ஜபிக்க முனிவர்களும் நடுங்குவார்கள். நீயோ சிறு குழந்தை. என்ன செய்வாய்? திருமஞ்சனம் நிவேதனம் முதலியன

சுந்தமாகத் தேடிப்பெறுவது அருமை. ஆகையால் நீ இன்னும் வயதேறிய பிறகு சிவபூஜைசெய்ய முற்படுவதே நலமாகும' என்று கூறினா.

அதைககேட்ட பிள்ளையாா அவரை நோக்கி, 'அம்மா, கடவுளை வணங்குவதற்குக காலநியதி கிடையாது. நான நீஙகள் பெற்ற பிள்ளைதானே, உங்களுககுத் தெரியாத விஷயமோ எனககுத தெரியபபோகிறது? எத்தனையோ அடியவாகள என்னிலும இளமபருவததே இறைவனை ஆராதிததுப பேரின்பத்தை யடைந்திருககின்றனரே. அமமா, நான் ஏன் அவ்வாறு இறைவனை ஆராதிதது இனபப பேறடையக்கூடாது? சிவபூசை சிறிது தவறினும முற்றுபபெறுமெனறு தாஙகள கூறியது உண்மையே. ஆனால் உண்மை அன்புடன அப்பூசையை எபபடிச் செய்தாலும நன்மை உணடாகும. கடவுள ஆடம பரமான அபிஷேக முதலிய உறசவாதிகளால கட்டுப படககூடியவரன்று. உண்மையான அன்பொன் றுக்கே அவர் கட்டுபபடுவாா. தாதையொடு குளக கரையடைநத வேதியச சிறுவராகிய ஞானசமபநதர் முற்றாத இளமபருவத்தே வளர்பசிவருத்த அம்மே அபபாவெனறு அழைதது ஞானபபாலுண்டு இன்ப நிலை அடைநததைத தாங்கள் அறியாதவாக ளலலவே! அமமா, "யாம காணவலலேம" என்று காவதமேதாடு தேடுவாாககுப புலப்படாத சிவ பெருமான்,

> பக்தி யடியவர் பச்சிலை யிடினும்
> முக்தி கொடுத்து முன்னின் றருளுவர்.

அன்போடு செய்கின்ற பூசை எப்படிப்பட்டதாயினும் அப்பூசையைச் செய்கிறவனுக்குக் கடவுள் அனுக்கிரகம் செய்தே தீர்வார். நீங்களோ கடவுள் பூசை செய்வது கடினமென்கிறீர்கள். கடினமன்று என்பது அடியேனது அபிப்பிராயம். வல்லானொருவன் தன் கையிற் கற்கொண்டு ஆகாயத்தில் வெகுதூரம் எறியினும், மாட்டானொருவன் சிறிது தூரமே எறியினும் அவ்வாறு எறியப்பட்ட கற்களிரண்டும் முடிவில் தரையில் தானேவந்து விழவேண்டும்! அதுபோன்றே உண்மையன்புடன் செய்கின்ற சிவபூசையானது எப்படிப்பட்டதாயினும் நன்மையே யளிக்கும். ஆகையால் நான் நாளையே எம்பெருமான் கட்டளையிட்டவண்ணம் திருவெண்காடு செல்ல விரும்புகின்றேன். தாங்கள் எனக்கு அங்குச்செல்ல அநுமதி கொடுப்பதோடு, தாங்களும் என்னோடு அங்கு வருதல் வேண்டும்' என்று வேண்டினார்.

தம் மைந்தரின் அறிவு முதிர்ச்சியைக்கண்ட ஞானகலாம்பையார் அவர் விருப்பத்திற்கிணங்கினார்.

# ஒன்பதாவது அத்தியாயம்

## குருதரிசனம்—உபதேசம்

மறுநாள் பொழுது விடிந்தது. ஞானகலாம்பையார் வழக்கம்போல குளித்து ஜபதபங்களைச் செய்து முடித்தார். தமது அருமைத் திருக்குமாரர் திருவெண்காட்டிற்குப் போகவேண்டுமென்று தம்மிடம் சொல்லியதைப்பற்றிச் சிந்தித்தார். அதுவிஷயமாக அறிவிற் சிறந்த பெரியோர்களிடம் ஆலோசிக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது.

உடனே அவ்வம்மையார் உண்மையறிவும் உயர்ந்த நோக்கமும் உடைய சிலரை வரவழைத்துத் தமது குமாரர் திருவெண்காடு சென்று சுவேதாரண்யப் பெருமானை வணங்க விரும்புவதையும், அவர் கனவிற் கண்டவிஷயத்தையும் அவர்களிடம் விவரமாகக்கூறி முடிவில் 'உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டார்.

அதற்கு அப்பெரியார்களில் ஒருவர் அவ்வம்மையாரைப்பார்த்து, 'அம்மணீ! தங்கள் திருக்குமாரர் சாமானியரென்று எங்களுக்குத் தோன்றவில்லை. அவர் எல்லோரினும் மேம்பட்ட அறிவினையுடையவர். அவரைப்போன்ற உண்மை அறிவினை உடையவர்களைக் காண்பதரிது. கடவுள் அவருக்குக் கருணை செய்வார் என்பது திண்ணம். ஆகையால் நீங்கள்

தங்கள் குமாரரின் இஷ்டப்படி அவரைத் திருவெண்காட்டிற்குப் போகுமாறு செய்வதே நலமென்று எங்களுக்குத் தோன்றுகிறது' என்றார்.

என்றதும் ஞானகலாம்பையார் அவரைப் பார்த்து, 'பெரியீர்! என்குமாரன் திருவெண்காடு செல்வதற்கும், குருவை யடைந்து தீட்சை பெற்றுச் சிவபூசை செய்வதற்கும் ஏற்ற வயதுடையவனல்லவே என்று நான் கவலைப்படுகிறேன்' என்றார்.

என்றதும் அப்பெரியார் ஞானகலாம்பையாரை நோக்கி, 'அம்மணீ, தங்கள் குமாரர் வயதாற் சிறியவரேயன்றி, அறிவால் பெரியவராவர். அன்றியும் சிவபூசை செய்வதற்கு வயதைக் கவனிக்கலாமோ! எந்த வயதிலும் எந்தக் காலத்தும் இறைவனை வழிபடலாம்' என்றார்.

உடனே அம்மையார் அவரைநோக்கி, 'மெய்யன்புடையீர்! என்செல்வன இவ்விளம் பருவத்திலேயே இவ்வாறு இறைவனிடம் அன்பு பூண்டொழுக ஆரம்பிப்பானாயின், பிறகு அவன் இல்லறத்தை விரும்புவானோ? இல்லறத்தை விரும்பாது போவானாயின் எங்கள் குலம் எவ்வாறு விளங்கும்?' என்று கேட்டார்.

அதற்கு அப்பெரியார், 'அம்மணீ, தங்கள் திருக்குமாரர் இல்லறத்தை விரும்ப மாட்டாரென்று நீங்கள் நினைக்க வேண்டாம். இல்லறத்திலிருந்தே அதற்கு மேற்படியாகிய துறவறத்தை அடைய வேண்டுமென்பது அவருக்குத் தெரியும். அவர் யாவையும் உணர்ந்தவர்' என்றார்.

அதுகேட்ட ஞானகலாம்பையார் அவரைப் பார்த்து, 'என்ன சொன்னீர்கள்? துறவறமா? என் மகன் துறவறத்தை அடைவானு? அப்படியா நீங்கள் நினைக்கின்றீர்கள்?' என்றுகேட்டார்.

கேட்டதும் அப்பெரியார், 'உங்கள் குமாரர் துறவறத்தை அடைவார் என்று நான் கூறவில்லை. நீங்கள் "அவன் இல்லறத்தை விரும்புவானு" என்று கேட்டமையால் அவர் இல்லறத்தை விரும்பாது துறவறத்தைநாடிச் செல்வாரென்பது உங்கள் கருத்தாயிருக்க வேண்டுமென்று எண்ணி நான் அவ்வாறு கூறினேன்' என்று சொன்னூர்.

அதற்கு அவ்வம்மையார், 'என்னவோ, நீங்களெல்லாம் இருக்கும்போது எனக்கென்ன குறைவந்தது. அவனுடைய நன்மையில் நீங்களே கண்ணுங்கருத் துமாயிருத்தல் வேண்டும். அவன் இறைவனை வழி பட்டு இல்லறத்தானுய் வாழ வேண்டு மென்பதே என்னுடைய இஷ்டமாகும்' என்று கூறினூர்.

'உங்கள் இஷ்டப்படியேயாவும் நிறைவேறும்' என்றூர் அப்பெரியார்.

அப்போது ஞானகலாம்பையாரின் திருக்குமாரரா கிய பட்டினத்துப்பிள்ளையார் அங்குவந்து, ஆங்கிருந்த பெரியாரையும், தம் தாயாரையும் வணங்கி அவர்கள் விருப்பப்படி அங்கோர்பால் அமர்ந்தனர்.

உடனே அங்கிருந்த பெரியார்களில் வேறு ஒருவர் பட்டினத்துப் பிள்ளையாரைப்பார்த்து, 'திருவெண்காடரே! உங்களுடைய விருப்பத்தை உங்கள்

அனையார் சொல்லக் கேட்டோம். இவ்விளம் வயதில இறைவன் உங்கள்பால இவ்வளவு கருணை கொண்டது உங்களுடைய நல் வினையின் பயனே யாகும. நீங்கள் கனவிற் கண்டபடி திருவெண்காடு செலவதற்கு நாஙகள் பெரிதும சமமதிககின்றோம. கடவுளை வணங்குவதே நாம பிறந்ததனலாய பயன்' என்று சொனனார்.

அவவார்த்தையைக் கேட்ட பட்டினததார் அவரையும பிற பெரியோரையும பார்த்து, 'எல்லாம் உஙகள் கிருபையினலதான்—ஆசீர்வாதத்தினலதான்' என்று கூறி மறுபடியும் அவர்களை நோககி, 'பெரியீர்! நான இன்றையதினம திருவெண்காட்டிற்குப போக என் தாயார் எனககு அனுமதி கொடுததுவிட்டார்கள். நானும என் தாயாரும தனித்துப் போவதில எனக்கு உண்டாகும திருபதியைவிட நீங்களும் எங்களோடு வருவீர்களாயின் எங்களுககு அதிக திருப்தியுண் டாகும. நீங்கள் தடைசொல்லாமல் எங்களோடு வரவேண்டும' என்றார்.

அதற்கு அபபெரியோர்கள் அவரைப் பார்த்து, 'திருவெண்காடரே! கரும்பு வேண்டாமென்று சொல கிறவர்களும உண்டோ? நாங்களும திருவெண்காட் டிலுள்ள சுவேதாரண்ய மூர்ததியைத் தரிசிக்க விரும் புகிறோம். ஆகையால் நாங்கள் உமமுடைய இஷ்டப்படி உமமோடு திருவெண்காடு வருகின்றோம்' என்று கூறினர்.

'ஆம். அப்படியானல் நாம் இப்போதே புறப் பட்டுத் திருவெண்காட்டுக்குப் போதல்வேண்டும்.

எனக்கு எப்போது திருவெண்காடு சென்று இறைவனை வழிபடுவது என்னும் கவலையே பெரிதாயிருக்கின்றது' என்றார் பட்டினத்துப் பிள்ளையார்.

'அவ்வாறே செல்வோம். புறப்படுங்கள்' என்றனர் அப்பெரியோர்.

உடனே பட்டினத்தார் தமது அருமைத் தாயாரை நோக்கி, 'அம்மணீ! நான் வேண்டியவைகளைச் சித்தம் செய்கிறேன். நீங்கள் அவைகளோடு முன்னதாகத் திருவெண்காட்டிற்குச் செல்லுங்கள். நான் இப்பெரியாரோடும், வேறுசில அடியார்களோடும் கால் நடையாகத் திருவெண்காடு வந்து சேருகிறேன். நீங்கள் பல்லக்கிற் சென்று நமது சத்திரத்தில் தங்கியிருங்கள்' என்றார்.

அவ்வார்த்தையைக் கேட்ட அங்கிருந்த பெரியோர் ஞானகலாம்பையாரைப் பார்த்து, 'அம்மணீ! தங்கள் குமாரர் கூறியது எங்களுக்கும் சம்மதே நீங்கள் ஏவலாட்களுடன் முன்னுற் செல்வதுதான் தகுதி' என்றனர்

அதற்கு அவ்வம்மையார் ஒருவாறு சம்மதித்தார்கள். சில நாழிகைக்குப்பிறகு ஞானகலாம்பையார் அநேக ஆட்களுடனும், வேண்டிய திரவியங்களுடனும், மகேஸ்வரபூஜைக்கு வேண்டிய பொருள்களுடனும் திருவெண்காட்டை நோக்கிப்போனார்.

அவர்சென்ற இரண்டொரு நாழிகைக்குப் பிறகு பட்டினத்தார் அநேக அடியார்களுடனும், தம்மையறிந்த பெரியார்களுடனும் சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டு பாதசாரியாகத் திருவெண்காட்டை

நோக்கிப் பிரயாணமானூர். அப்போது பல நன்னிமித்தங்கள் உண்டாயின.

திருவெண்காட்டை அடைந்தவுடன் பட்டினத்தார் தம்மைச் சேர்ந்தவர்களுடன் காவிரிநதியின் சங்கமுகத்துறையில் முழுகி வெண்ணீறணிந்து பயபக்தி விசுவாசத்துடன் சங்கமேச்சுரரை வணங்கிப் பின்னர் தானதருமங்களைச் செய்தார். அதனால் மனத்தூய்மை உடையாரெல்லோரும அவரை வாழ்த்தினார்கள்.

பிறகு பட்டினத்தார், சைவவேதியா முதலாயினோர் தம்மைப் புடைசூழச் சுவேதாரண்யப் பெருமானின் ஆலயத்திற்குட்சென்று தமது காரியத்திற்கு யாதொரு விக்கினமும நேரிடாதவண்ணம விக்கினேச்வரரை வணங்கிச சுவாமியையும் அம்மையாரையும தரிசித்து இறைவன் கனவில இட்ட கட்டளைப்படி சற்குருவின் வரவை நோக்கி அடியவர்களுடன் சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டு அங்கோரிடத்தில் அமர்ந்திருந்தார.

கனவில கடவுள் உரைத்தது பொய்த்துப்போமா? கடவுளின் கருணையுடையோருக்கு என்ன குறை உண்டாகப்போகிறது! நன்மையே உண்டாகும். நிற்க.

இவ்வாறு பட்டினத்துப் பிள்ளையார் வெகுநேரம் குருவின் வருகையை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருந்தார். தம்மை உலகமாகிய சாகரத்தினின்றும் கரை சேர்க்கக்கூடிய வள்ளலைக காணவேண்டுமென்பதே அவருடைய பேரவாவாயிருந்தது.

அப்போது அழுகெலாந்திரண்டு ஒருருவானாற்

போன்ற ஒரு உத்தமவேதியர், வெண்ணீறும் உருத்தி ராக்கமும் காவி வஸ்திரமும் தரித்தவர், 'திருவெண் காடர் எங்கே, திருவெண்காடர் எங்கே இருக்கின்றார்?' என்று கேட்டுக்கொண்டே ஆலயத்தினுள் நுழைந்தார். அவருடைய தேகப்பொலிவும் முக வசீகரமும் எல்லோர் மனத்தையும் கவர்ந்துவிட்டது.

அவர் திருவெண்காடர் எங்கேயென்று விசாரித்ததும் அங்கிருந்த அறிவிற்சிறந்த பெரியோர் அவரை அணுகி, 'சுவாமி? நீங்கள் என் திருவெண்காடரைத் தேடுகிறீர்கள்? அவரிடத்தில் உங்களுக்கு ஆக வேண்டிய காரியம் யாது? தாங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்?' என்று ஆவலுடனும் அன்புடனும் பல கேள்விகளைக் கேட்டனர்.

அப்போது வந்தவராகிய பிராமணர் அவர்களை யாதது, 'பெரியீர், நீங்கள் அறியாததொன்று மில்லை. நான் திருவெண்காடனைக் கண்டவுடன், வந்தகாரியம் இன்னதென்று சொல்லாமலே உங்களுக்கு விளங்கும்' என்றார்.

அவ்வேதியர் இவ்வாறு கூறியவுடன் அங்கிருந்த பெரியோர் அவரைத் திருவெண்காடர் இருந்த இடத்திற்கு அழைத்துச்சென்றனர். அங்குத் திருவெண் காடர் சிவபூஜைக்கு வேண்டிய சாமக்கிரியைகளைச் சேகரித்துக் கொண்டிருந்தார். வந்த வேதியர் குறிப்பால் அவரே திருவெண்காடராயிருக்கக்கூடு மென்றுணர்ந்து அவரைப்பார்த்து, 'வெண்காட, உன்னைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பத்தினால் நான் இங்குவந்தேன். உன் எண்ண முழுவதையும்

எனக்குத் தெரிவி. உன்கருத்து நிறைவேறுங் காலம் வந்தது' என்று கூறினார்.

அவ்வேதியரையும், அவர் கூறிய விஷயங்களையும் கவனித்துப் பட்டினத்துப் பிள்ளையார், அவரே தமக்குச் சிவபெருமான் கனவில் கூறிய குருமூர்த்தி என்பதைத் தமது அதிதீவிர புத்தியின் திறமையினால் அறிந்து கொண்டு அவரைப்பார்த்து, 'எம்பெருமானே! என்னை யாட்கொள்ள ஈண்டெழுந்தருளிய தேவே! நான் பூர்வ புண்ணிய வசத்தினால் உங்களைக் காணப் பெற்றேன் போலும்! நான் செய்த தவம் பலித்தது. என்மீது கிருபைகொண்டு இவ்வளவு தூரம் எழுந்தருளிய தங்கள் பெருங்கருணையை எவ்வாறு புகழ்வேன்? எளியேன் தங்களுக்குச் செய்யக்கூடியது யாதுளது? யான் நன்மையடைந்தேன். என்னைச் சேர்ந்தவர்களும் நன்மையடைவார்கள். இனி நீங்கள் என்னையும் என்னுடைமையையும் அங்கீகரித்துக் கொண்டு எளியேனை எவ்வாறு செய்யத் திருவுளமோ அவ்வாறு செய்க. நான் கண்ட கனவு பலித்ததே. இதைவிட நான் அடையக்கூடிய பேறு வேறு யாதுளது?' என்று பலவாறு கூறித் துதித்தார்.

பட்டினத்தாரின் தேகம் பூரித்தது. அவர் மனத்தில் தோன்றிய சந்தோஷத்திற்கு அளவேயில்லை. அவர் இன்ப சாகரத்தில் மூழ்கியவரைப்போலானார்.

தம்மைப்பார்த்துப் பட்டினத்தார் பலவாறு கூறியதைக்கேட்ட வேதியர் மகிழ்ச்சியடைந்து அவரைப்பார்த்து, 'திருவெண்காட, நான் வெளியூர் வாசி. நேற்றிரவு இவ்வூரின் ஒருபுறம் நித்திரைசெய்து

கொண்டிருந்தேன். அப்பொழுது சைவ வேதிய ரொருவர் என் கனவிற்றோன்றி, " பிராமணரே, நீர் நாளைய தினம் காலையில் எழுந்து பூஜை முடித்துக் கொண்டு நான் கொடுக்கும் இந்தச் சம்புடத்தை எடுத்துக்கொண்டு இவ்வூரிலுள்ள சுவேதாரண்ய க்ஷேத்திரத்திற்குச் செல்வீராக. அங்குத் திருவெண் காடனென்னும் பெயரினையுடைய சிறுவன் ஒருவன் வந்திருப்பான். அவனோடு அறிஞர் பலரும் இருப்பர். அவனுக்குச் சிவதீட்சைசெய்து பஞ்சாட்சரத்தை உபதேசித்து அவனிடம் நான் இப்போது உம்மிடம் கொடுத்த சம்புடத்தைக் கொடுப்பீராக. இச் சம்புடத்தினுள் திருவெண்காடன் பூர்வத்தில் பூசை செய்த சிவலிங்கமிருக்கின்றது. இதை ஒருவராலும் திறக்கமுடியாது. ஆனால் திருவெண்காடனுடைய கைபட்டால் இது திறந்துகொள்ளும். நீ அவனுக்குச் சிவபூசை செய்யவேண்டிய வழியைச் சொல்லிக் கொடுத்து அவனுடனே ஒருமண்டலம் இருப்பாயாக" என்றார். உடனே நான் அவரைப்பார்த்து, 'தேவரீர் யாரோ தெரியவில்லையே' என்றேன். அதற்கவர் என்னை நோக்கி, " என்னை யார் என்று நான் சொல்வது? 'நான்தான் எல்லாம்; எல்லாமும் நானே' என்று என்னை அறிந்தவர்கள் சொல்வார்கள். நான் எங்கும் இருப்பேன். ஆனால் திருவிடைமருதூரில் அகலாதிருப்பேன் " என்றுகூறி மறைந்தார். உடனே நான் திடுக்கிட்டு விழித்துப்பார்த்தேன். என் அருகில் பட்டுத்துணியில் சுற்றப்பட்டு இச்சம்புடம் இருந்தது. என் கனவில் தோன்றியவர் சிவபெருமானே என்று

நான் தீர்மானிக்கேன். நான் அடைந்த ஆனந்தத் திறகு அளவேயில்லை. அதற்குமேல் நித்திரை பிடியாமல விழித்துக்கொண்டிருந்து, பொழுது விடிந்தவுடன் ஸ்நானஞ்செய்து பூஜை முதலியவைகளை முடித்துக்கொண்டு உன்னைககாண இங்கு வந்தேன்' என்றுகூறி அவவேதியா மறுபடியும் திருவெண் காடரை நோக்கி, 'திருவெண்காட, நான் உன்னால் எவராலும காண்பதற்கரிய சிவபெருமானுடன் சமபாஷிக்கும பாக்கியத்தைப் பெற்றேன். சிவ பெருமானுடைய அருளைப் பெறுவதற்குக் காரணமா யிருக்கும் உன்னுடைய புண்ணியமே சிறந்தது. நீ எதிர்காலத்தில் எல்லோரும தொழுதற்குந் சிறப்பைப யடைவாய்' என்று கூறினார்.

பின்னா அவ்வேதியர் அடியவர்கள் புடைசூழ திருவெண்காடரைக காவிரி நதிக்கு அழைத்துச் சென்று, ஸ்நானம செய்வித்து, விபூதி, உருத்திராககம் அணிவித்து, சிவதீட்சைசெய்து, பின்னும ஸ்நானம் செய்வித்துச் சிவசந்நிதானத்திற்கு அழைத்துச் சென்று பஞ்சாட்சர மந்திரத்தையும உபதேசித் தருளினார்.

பிறகு அவ்வேதியா தமமிடமிருந்த சமபுடத்தை அங்கு இருந்த உயர்ந்ததோர் ஆசனத்தில் வைத்து வணங்கி அதன் பெருமையையும் திருவெண்காடரின் தவத்தின் திறத்தையும அனைவருக்குந் தெரிவிக்கக் கருதி அங்கிருந்த வேதியர்களைப் பார்த்து, 'நீங்கள் ஒவ்வொருவராக வந்து இந்தச் சமபுடத்தை எடுத்துத் திறவுங்கள் பார்ப்போம' என்றனர்.

அவர் கட்டளைப்படியே வேதியர்கள் ஒவ்வொருவ ராக முன்வந்து அச்சமபுடத்தைத் தங்களா லான வரையில் திறக்க முயன்றனர். அவர்களால் திறக்க முடியவில்லை. அதுகண்ட அவர்கள் தெய்வத் திருவருளுக்கு வியந்து மௌனமாயிருந்தனர்.

அதைக்கண்ட குருமூர்த்தியாகிய வேதியர் பட்டி னத்துப் பிள்ளையாரைப்பார்த்து, 'திருவெண்காட, நீ சென்று அச்சமபுடத்தைக் கையிலெடுத்துத் திறப் பாயாக' என்றனர்.

குருமூர்த்தியின் ஆணையைச் சிரமேற்கொண்ட பட்டினத்தார் குருமூர்த்தியை வணங்கி, பின்னர்ச் சிவபெருமானையும், உமாதேவியாரையும் துதித்துச் சமபுடத்தை வலமவந்து வணங்கி அதைக் கையி லெடுத்தார். அவ்வளவில் அச்சம்புடம் திறந்து கொண்டது.

அதற்குள் அப்போதுதான் பூசிக்கப் பெற்றவை போன்ற கண்களைக் கவரத்தக்கந்த வேலைப்பாடமைந்த சிவலிங்கமூர்த்தி யொன்றும், விநாயகமூர்த்தியொன் றும் இருந்தன. அவைகளைக்கண்ட அனைவரும் பட்டினத்தாரின் அன்புக்கு வியந்து அவரைக் கொண்டாடிச் சிவபெருமானைத் துதித்தனர்.

அப்போது குருமணியாகிய வேதியர் பட்டினத் தாரைப் பார்த்து, 'திருவெண்காட, இன்று உத்தம தினமாதலின் இன்றே நீ சிவபூசைசெய்யத் தொடங்க வேண்டும். அவ்வாறு நீ சிவபூசைசெய்யத் தொடங்கு முன் இந்த க்ஷேத்திரத்திலுள்ள சிவபெருமானையும், உமாதேவியாரையும் பூசிக்கக்கடவாய். இவர்களைப்

பூசிப்பதற்கு முன் சிவனடியார்களைப் பூசிப்பதே சிறப்புடையதாம். சிவனிலும் சிவனடியாரே சிறந்தவர்கள் என்பது உண்மை' என்று சொன்னார்.

பட்டினத்துப் பிள்ளையார் தமது ஆசிரியர் கட்டளையை மனமகிழ்ச்சியுடன் சிரமேற் கரங்குவித்து ஏற்றுக்கொண்டார்.

# பத்தாவது அத்தியாயம்

## தெய்வபூசை—திருவருள்

தெய்வ அருள்பெற்ற திருவெண்காடர் தமது குருவின் கட்டளைப்படி நீராடி நித்தியகருமம் முடித்து ஸ்ரீ சுவேதாரண்ய பெருமானுக்கும், மகாதேவியாருக்கும் மகா அபிஷேகம் முதலியவைகளைச் செய்ய முற்பட்டார். அதற்காக வேண்டிய பொருள்களை யெல்லாம் சேகரஞ்செய்தார். பல்லாயிரக்கணக்காக ஆதிசைவ வேதியர்களை வரவழைத்துத் தேவார பாராயணம் செய்யச்செய்தார். ஆயிரம் கலசம் வைத்து அர்ச்சித்தார். அபிஷேகத்திற்காக சுகந்தத்தைலம், நெய், பஞ்சகவ்யம், பஞ்சாமிர்தம், பழஞ்சாறு, இளநீர், பால், தயிர், தேன், கலவைச்சாந்தம், பனிநீர் முதலியவைகளைச் சேகரித்து அபிஷேகத்தை நடத்தி வைத்தார். பிறகு சுவாமிக்கும் அம்மையாருக்கும் பட்டுப் பரிவட்டமும், முத்து, பவளம், மாணிக்க முதலிய மணிகளாலமைந்த ஆபரணங்களும், முல்லை, மல்லிகை, செவ்வந்தி, மரு, கொன்றை, தும்பை, வில்வ முதலியவற்றால் ஆனமாலைகளும் அணிவித்து, வாசனைப் பொருள்களைப் பூசுவித்தார். பின்னர் பலவகைச் சித்திரான்னங்களையும், பழவகைகளையும் வைத்து நைவேத்தியம் செய்தார். ஆடல், பாடல், வாத்தியம் முதலியவைகளில் யாதொரு குறைவும் இல்லாதபடி நடத்தினர்.

இவ்வாறு செய்யுமுன்னரே ஆயிரக்கணக்கான சிவனடியார்களுக்குத் திருவடி பூசைசெய்து தேவாமிர்தத்தினும் இனியதென்று சொல்லத்தகுந்த அறுசுவை யுண்டி யளித்து உண்ணுமாறு அவர்களை உபசரித்து மகிழ்ந்தார். அவர்கள் உண்டபின் அவர்களுக்கு வேண்டியவைகளை யாவையும் கொடுத்தார்.

பின்னர் திருவெண்காடர் கைகாலலம்பித் தமது ஆசிரியரை அங்கோர் பீடத்தின்மீது எழுந்தருளச் செய்து, அவரைப்பூசித்து அவரருள்பெற்றுச் சம்புடத்தில் இருக்கும் சிவலிங்கத்தையும், விநாயக மூர்த்தியையும் பூசித்து மகிழ்ந்தார். அப்போது ஆகாயத்தில், 'திருவெண்காடடைய, எல்லாக் கலைஞானமும் உனக்கு உண்டாகும்' என்று ஓர் அசரீரி சொல்லிற்று.

அதைக்கேட்ட பட்டினத்துப்பிள்ளையாரும், ஏனையோரும் கடவுளின் அருளை வியந்து ஆனந்தக் கண்ணீர் பெருக அவரைத் துதித்தனர்.

பூஜை முடிந்தவுடன் பட்டினத்தார் சிவலிங்கத்தையும், விநாயகமூர்த்தியையும் சம்புடத்திற்குள் வைத்துத் தமது குருவை வணங்கித் தாயை நமஸ்கரித்துப் பெரியோர்களைக் கும்பிட்டு அனைவருடனும் இருந்து சிவப்பிரசாதத்தை உண்டு பஞ்சாட்சரத்தைச் செபித்து இன்புற்றிருந்தார். மெல்லமெல்லப் பகற்பொழுது குறுகி இரவாயது.

அப்போது பட்டினத்துப் பிள்ளையார் தமது தாயாரை நோக்கி, 'அம்மா, இதுவரையில் நாம் அரன் பூசைசெய்து களித்தோம். இனி நாளைமுதல்

பத்துத்தினமவரையில் சிவனடியார்களுக்கு உணவ ளிக்க நான விரும்புகிறேன். அதற்கு வேண்டிய அளவு பொருள் கொடுத்தருளவேண்டும்' என்று வேண்டினார்.

அவர் சொல்லியவைகளைக் கேட்ட ஞான கலாமபையார் அவரைப்பார்த்து, ' கண்மணி, திரு வெண்காடா, இதுவரையில் நம்மிடமிருந்த ரொக்கப் பணத்தைச் செலவழித்து வந்தோம். இனிக் கையில் பணமில்லை. நிலம் வீடு ஆபரணம் முதலியவைகளே யிருக்கின்றன. அவைகளை விற்றே செலவு செய்யவேண்டும் வேறு வழியில்லை ' என்று கூறினார்.

அதுவரையில் பணக்கஷ்டம் இன்னதென்பதை அறியாத பட்டினத்துப் பிள்ளையார், ' இனி என் செய்வது ? பணம் இல்லையென்று தேவாரபாராயணம் செய்தவர்களை வெறுங்கையோடு அனுப்பிவிடுகிறதா ? ஆசிரியருக்குக் காணிக்கை கொடுக்கவேண்டாமா ? என் செய்வேன்? அடியார்களுக்கு நாளைமுதல் எவ்வாறு அமுதளிப்பது ? எனக்கு ஏராளமான சொத்துக்க ளிருக்கின்றன. அவைகள் நாளைக்கே உதவக்கூடுமா ? அவைகளை அவசரத்தில் விற்பது எப்படி ? கையில் இருக்கும் பணம் குறைவதைத் தாயாரும் சொல்லாமல் இருந்துவிட்டார்கள். எங்குப் போவது ? யாரைக்கேட்பது ?' என்றெண்ணி வருந்தினார்.

இப்பகத்சிரோன்மணிக்கு ஏற்பட்ட வருத்தம் நீடிக்குமா ? ஒருபோதும் நீடியாது. இறைவன் இவர் குறையைத் தீர்க்காமல் இருந்துவிடுவாரா ? கடவுள் இவர் கவலையைத் தீர்ப்பாரென்பது திண்ணம்.

அன்றிரவு பட்டினத்துப் பிள்ளையார், 'பணமில்லையே' என்னும் கவலையுடன் தரையிற்படுத்து வருந்திக் கொண்டிருந்தார். சிறிதுநேரமாயிற்று. விழித்துக் கொண்டிருந்த அவர் எப்படியோ தம்மை மறந்து நித்திரைக்குள்ளானார். மைந்தனின் மனக்கவலையைக் கண்டு ஞானகலாம்பையார் தாமும் வருந்தி மைந்த னருகே நித்திரை போயினர். காலம் சிறிது சிறிதாகச் சென்று பொழுது விடியுந்தருணமாயிற்று.

அப்போது அடியார்க்கெளியராகிய சிவபெருமான் ஓர் ஆதிசைவரைப்போல பட்டினத்தாரின் கனவிற் றோன்றி, 'அப்பா, திருவெண்காடா, நீ உன்கவலையை விட்டொழி. நீ கவலைப்பட்டால் என் மனந்தாளாது. அடியவர்களின் பொருட்டன்றோ நீ வருந்துகின்றாய்! நீ உன் மனையில் நவரத்தினங்கள் குப்பல் குப்பலாகக் கிடக்கக் காணலாம். அவைகளை எடுத்து நீ உன் இஷ்டம்போல செலவு செய்யலாம்' என்று கூறி மறைந்தார். மறைந்ததும் பட்டினத்தார் வந்தவர் சிவபெருமானென்பதை யுணர்ந்து, 'என்னை இங்கு இவ்வாறு கைவிட்டுப்போதல் நீதியோ? என்னை யாட்கொண்டதேவே' என்று வாய்விட்டுக்கூறி விழித்துக்கொண்டு கண்ட கனவைத் தமது தாயாருக்கு உணர்த்தி ஆனந்தப்பட்டார்.

பொழுது விடிந்தது! காவிரிப்பூம் பட்டினத்தில் பட்டினத்தாரின் திருமாளிகையில் காவல் புரிந் திருந்தோர் ஓடிவந்து ஞானகலாம்பையாரின் காலில் விழுந்து வணங்கி, 'அம்மணீ! தாங்கள் பூட்டிவிட்டு வந்த வீட்டிற்குள் திடீரென்று இரவு பின்னேரத்தில்

ஒரு சோதியுண்டாயிருக்கிறது. அச்சோதி இன்னும் மறையக்காணோம். அச்சோதிக்குக் காரணம் இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை' என்று கூறினார்.

அவர்கள் கூறியவைகளைக் கேட்ட பட்டினத்தாரும், ஞானகலாமையாரும் இறைவன் கருணைக்கு மகிழ்ந்தனர். பிறகு அவர்கள் காலைக்கடனை முடித்துக்கொண்டு காவிரிப்பூம் பட்டினத்திற்குச் சென்று திருக்காப்பிடப் பெற்றிருந்த தங்கள் மனையின் கதவைத்திறந்து உட்சென்றனர். அவ்வளவே!

அம்மாளிகையின் உள்ளே எங்கெங்கும் கால் வைத்தற்கு இடமின்றிப் பொற்காசுகளும், நவரத்தினங்களும் நிறைந்திருந்தன. அவைகளைக்காணக் கண் கூசி ஞானகலாமையார், 'இவைகள் சிவனருளால் கிடைத்தனவாகையால் முதலில் இவைகளுக்குத் தூபதீப நைவேத்தியங்கள் செய்தே பிறகு இவைகளைத் தொடவேண்டும் என்றெண்ணி, எண்ணியபடியே செய்தார்.

பிறகு அவ்வம்மையார் தம் திருக்குமாரரைப் பார்த்து, 'மகனே, இச்செல்வமனைத்தும் சிவன் தந்ததாகையால் இதைப் பண்டிகளிலேற்றித் திருவெண்காட்டிற்குக் கொண்டுபோய் வைத்து உன் இஷ்டம்போல் செலவிடுவாயாக' என்றனர்.

தாயாரின் கட்டளைப்படியே பட்டினத்தார் அச்செல்வமனைத்தையும் பல பண்டிகளிலேற்றித் திருவெண்காட்டிற்குக் கொண்டுபோய் ஓரிடத்தில் பத்திரமாக வைத்துப் பின்னர் அவைகளைக்கொண்டு ஆசிரியருக்குக் காணிக்கையும், தேவாரபாராயணம்

செய்வோருக்கு வெகுமதியும், அடியவர்களுக்கு சமாராதனையும் விசேஷமாக நடத்தி வந்தார்.

சில நாட்கள் சென்றன. எவ்வளவோ தான தருமங்களைச் செய்தும் சிவனருளால் கிடைத்த திரவியம் பாதிக்குமேல் செலவழியவில்லை. பின்னர்ப் பட்டினத்தார் தம் ஆசிரியர் கட்டளைப்படி மிகுந்துள்ள திரவியத்தோடு காவிரிப்பூம் பட்டினம் சென்று தமது மாளிகையில் தங்கிச் சிவனடியார் முதலியவர்களுக்கு வேண்டிய தானதருமங்களைச்செய்து வந்ததோடு, தமது குலத்திற்குரிய வியாபாரத்தையும் நடத்திவந்தார்.

நாட்கள் பல சென்றன. பட்டினத்தாருக்கு உபதேசஞ்செய்த ஆசிரியர் ஒருதினம் அவரைப் பார்த்து, 'திருவெண்காடா, நான் உன்பால் வந்து வெகுகாலமாயிற்று. பரதேசியாகிய நான் இறைவன் கட்டளையினால் இவ்வளவுகாலம் இங்குத் தங்கியிருந்தேன். இன்றேல் இவ்வளவு நாட்கள் இங்குத் தாமதித்திருக்கமாட்டேன். இறைவன் எனக்குக் குறிப்பிட்ட காலம் கடந்துவிட்டது. இனி நான் இங்கிருக்க முடியாது. போகவேண்டும்' என்று கூறினார்.

அவர் வார்த்தைகளைக் கேட்ட பட்டினத்தார் திடுக்கிட்டவராய் அவரைப் பார்த்து, 'சுவாமீ! தங்களைப் பிரிந்து நான் எவ்வாறு இன்பத்துடன் வாழ்வேன்? உங்களைப்பிரிய என் மனம் சம்மதிக்கவில்லை. நீங்கள் எங்கும் போகவேண்டாம். இவ்விடத்திலேயே யிருங்கள்' என்று கூறினார்.

உடனே அவ்வாசிரியா அவரைப் பார்த்து, 'திருவெண்காட, நீ என்பால பேரன்புடையவ னென்பது எனககுத தெரியும. ஆயினும் சிவபெருமான் எனனை உன்னோடு ஒரு மண்டலமே இருக்குமபடி கட்டளை யிட்டிருககின்றா. ஒரு மண்டலம கழிந துவிட்டது. இனி நான் இங்கிருககலாமா? சிவ பெருமான் எனககு அவவாறு கட்டளை யிட்டதற்குக காரணம ஏதாவது இருககககூடும. நான் சென்று வருகிறேன. எனககு உததிரவுகொடு' என்றா.

பலவாறு வருநதிக கடைசியாகப பட்டினததாா அவருக்குப் போக உத்தரவளித்தாா.

அபபோது ஆசிரியர் அவரைபபாாதது, 'திரு வெண்காட, நீ எப்போதும சாது சங்கபபழக்க முடையவனயிருபபாயாக' என்று கூறினா.

'திருவுளக கருததுப்படியே ஆருக' என்றா பட்டினத்தார்.

கடைசியாக ஆசிரியா பட்டினத்தாரை அன்புடன நோககி, 'திருவெண்காட, கடைசியாக நான் சொலவதைக்கேள். உன் அன்னையாா விரும்பும போது நீ திருமணம செய்துகொண்டு இல்லறத தானயிருந்து வரலவேண்டும' என்றார்.

அவ்வார்ததைதயைக்கேட்ட பட்டினத்தார் திடுக் கிட்டு அவரைபபார்த்து, 'தேவரீர் இப்படியோ கட்டளையிடவேண்டும! சமுசாரசாகரத்தில் இறங்கி விட்டால் கரை ஏறமுடியுமா? சுவாமீ, என்மீது கருணையுடனே இவவாறு கூறுகின்றீர்கள்?' என்று கேட்டார்.

உடனே குருநாதர் அவரைப்பார்த்து, 'திரு வெண்காட, உன்மீது கருணையுடன்தான் இவ்வாறு கூறுகிறேன். நீ என் வார்த்தையைத் தள்ளாதே. நான் சொல்லுகிறபடி நீ நடந்துகொள்ளுவாயானல் உனக்குச் சுகமுண்டாகும' என்று இவ்வாறு பல விஷயங்களைச் சொன்னர்.

என்செய்வார் பட்டினத்தார்! கடைசியாகக் குருநாதரின் கட்டளைபபடி நடப்பதாக ஒப்புக் கொண்டார். அதன்பிறகு குருநாதர் அவரிடம் உததரவு பெற்றுக்கொண்டு தமது மனமபோன இடத்திற்குச சென்றுர்.

# பதினொன்றாவது அத்தியாயம்

## ஊர்விஷயம்—மணப்பேச்சு

முன் அத்தியாயத்திற் கூறிய சமபவங்கள் நடந்து சில மாதங்களாயின.

ஒரு நாள் பிற்பகலில் காவிரிப்பூம பட்டினதது வைசியர் வீதியில் இருநத பல வீடுகளில ஒன்றான ஓர் மாடிவீட்டின் முன்புரத்து 'ஹாலில்' சில வைசிய குல ஸ்திரீகள் உட்கார்நது ஊா கதைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

அபபோது ஜகதாமபாள் என்பவள மற்ற ஸ்திரீகளைப்பாாதது, 'என்னடி, நீங்கள் வீண் கதைகளைப் பேசிக்கொண்டிருக்கின்றீாகள் நாளையதினம காலையில் நடைபெறப்போகும சிவநேசரின் குமாரன் திருவெண்காடனுடைய கலியாணததிற்கு யாா யாா போகப்போகிறீர்கள்?' என்று கேட்டாள்.

கேட்டதும, 'திருவெண்காடனுககா கலியாணம்? நான் நேற்றுத்தான் ஊரில் இருநது வந்தேன். எனக்கு ஒரு சமாசாரமும தெரியாதே! கலியாணப் பெண் யார்?' என்று கேட்டாள் கமலாமபாள் என்னும் பெயரினையுடைய ஒரு ஸ்திரீ.

அதைக்கேட்ட ஹதயநாயகி என்னும் ஸ்திரீ, 'பெண் யாா என்று கேட்கின்றாய்? சிவசிதம்பரஞ் செட்டியாா பெண் சிவகலை என்பவள்தான்

கலியாணப்பெண், என் ? பொருத்தந்தானே ?' என்று கேட்டாள்.

அப்போது மூலையில் உட்கார்ந்துகொண்டிருந்த முத்துலட்சுமி மிடுக்காக கிளம்பித் தையநாயகியைப் பார்த்து, 'பொருத்தமில்லாமலென்ன ? திருவெண் காடனுக்கு ஏற்றவள்தான் சிவகலை, சிவகலைக்கு ஏற்றவன்தான் திருவெண்காடன்' என்று சொன்னாள்.

'என், மாயாண்டி செட்டியார் பெண் மரகதத்தைக் கேட்டார்களே, அவ்விஷயம் எப்படியாயிற்று ?' என்று கேட்டாள் பார்வதி என்னுமோர் பெண்மணி.

உடனே குணவதி என்னும் பெரியாளையுடைய ஸ்திரீ அவளைப்பார்த்து, 'கேட்டது உண்மைதான். "பையன் ஒரு மாதிரியாயிருக்கிறான். எப்போதும் விபூதியைப்பூசிக்கொண்டு 'சிவம், சச்சிதானந்தம், சிவயோகம்' என்று சொல்லிக்கொண்டிருக்கிறான். அவன் நிலைமை எப்படியாகுமோ ; அவனுக்கு என் பெண்ணை எப்படிக் கொடுப்பது" என்று மாயாண்டி செட்டியார் கூறினாராம். அதற்குமேல் அவர் பெண்ணை ஞானகலாம்பையார் கேட்கவில்லையென்று தெரிகிறது' என்று கூறினாள்.

கூறியதும் தனபாக்கியம் என்பவள், 'திருவெண் காடனுடைய ஜாதகத்தைப் பார்த்ததில் அவன் பெருந்துறவி யாவானென்று தெரிந்ததாம். அதனால் மாயாண்டி செட்டியார் தன் பெண்ணைக் கொடுக்க மறுத்துவிட்டாராம் ?' என்றாள்.

உடனே கோகிலம் என்பவள், 'அந்தப்பெண் திருவெண்காடனுக்குக் கிடைக்காமற்போனதே

நலமாயிற்று. அதுகெட்டதே, மூதேவி. அந்தப்பெண் எல்லாவகையிலும் திருவெண்காடனுடைய குணத்திற்கு நேர் மாறான குணமுடையது. அப்பெண்ணினுடைய தளுக்கும் குலுக்கும் குடித்தனத்துக்குச் சரிப்படுமா? சிவபெருமானே திருவெண்காடனுக்குப் பக்கத்துணையிருந்து அந்தப்பெண்ணை ஒதுக்கி விட்டார்' என்று கூறினாள்.

'இந்த இலட்சணத்துக்குத்தானா மாயாண்டிச் செட்டியார் இவ்வளவு பிகு செய்தார்?' என்று கேட்டாள் கமலாம்பாள்.

உடனே மங்களம் என்பவள், 'இது தெரியாதா உனக்கு! சரக்கு நல்லதாயிருந்தால் எப்படிப் போயினும் விற்றுப்போகும்; கெட்ட சரக்கைப் பிகுவாகப் பேசித்தானே விற்கவேண்டும்' என்று சொன்னாள்.

'நீங்கள் பேசுவது வீண்கதை. மறுமகன் பரதேசியாகப்போய்விட்டால் என்ன செய்கிறது என்றெண்ணியே மாயாண்டி செட்டியார் மௌனமாயிருந்துவிட்டார்' என்றாள் ஜகதாம்பாள்.

'அதெல்லாம் வீண்கதை. ஜாதகப்படி எல்லாம் நடந்து விடுகின்றதா? குன்றத்தூர் சபாபதிசெட்டியாரின் பெண் சிவகாமியை எவன் கலியாணம் செய்து கொள்ளுகிறானோ அவன் உடனே மரணமடைந்து விடுவானென்று அப்பெண்ணின் ஜாதகத்தைப் பார்த்தவர்களெல்லாம் சொன்னார்கள். அதனால் அப்பெண் வெகுநாள் வரையில் கேட்பாரில்லாமலேயிருந்தனள். கடைசியாக அப்பெண்ணின் தகப்பனார் ஏராளமான பொருளைக் கொடுத்து அப்பெண்ணை ஓர் ஏழைக்கு

மணம் செய்து கொடுத்தார். சிவகாமியின் ஜாதகப்படி அவள் கணவன் இறந்து விட்டானா? இல்லை. சிவகாமிக்குக் கலியாணம் நடந்து பத்து வருடங்களுக்கு மேலாயிற்று. இரண்டு ஆண்குழந்தைகளுக்கும், ஒரு பெண்குழந்தைக்கும் தாயாயிருக்கின்றாள். அவள் கணவனோ மாமனார் கொடுத்த திரவியத்தை முதலாகவைத்து வியாபாரம் செய்து திரவியத்தை மேன்மேலும் குவித்துக் கொண்டிருக்கின்றான். சிவகாமியின் ஜாதகப்படி தீமையுண்டாகவில்லையே?' என்றாள் சிவகங்கை என்பவள்.

'அப்படிச் சொல்லக் கூடாது. ஜாதகத்தைத் தூஷிப்பது பாவம். சிவகாமியின ஜாதகத்தைக் குறித்தவர்கள் சரியாகக் கவனித்துக் குறித்திருக்க மாட்டார்கள். இக்காலத்தில் பெரும்பாலும் குழந்தை பிறந்த நேரத்தை யறிந்து ஜாதகம் குறிப்பதே கிடையாது. குழந்தை பிறப்பது ஒரு நேரம்; ஜாதகம் குறிப்பது வேறு ஒரு நேரமாயிருக்கின்றது. அதனால் ஜாதகத்தின்படி பலன் நடைபெறுகிறதில்லை, சில ஜாதகம் சரியாகக் குறிக்கப் பட்டிருந்தாலும் பின்னர். அதைப்பார்த்துப் பலன் சொல்லு கிறவர்களிற் சிலர் ஒன்று மறியாதவர்களாயிருந்தால் தங்கள் வாயில் வந்தபடி உளறி விடுகிறார்கள். அவர்கள் உளறியபடி பலன் நடைபெற வில்லை என்று சொல்லலாமா? ஜாதகம் கணிப்பது என்னும் முறை என்னவோ சரியானதுதான். ஆனால் அந்த முறையைச் சரியானபடி தெரிந்தவர்கள் குறைந்து விட்டனர். அதனால் நாம் ஜாதகமே

பொய்யென்று தூஷிக்கத் துணிந்து விட்டோம்' என்று கூறினள் கலாவதி என்னுமோர் பெண்மணி.

உடனே குணவதி எல்லோரையும் பார்த்து, 'கலாவதி சொல்லியதுதான் மிகவும் சரி. திருவெண்காடனுடைய ஜாதகம் தவறாகக் குறிக்கப்பட்டிருக்குமாயின் நல்லதுதான். அவன் பரதேசியாக மாட்டான்' என்று சொன்னாள்.

சொன்னதும், 'வெட்கக்கேடுதான். சிவநேசரோ கொக்கோ, அவரா திருவெண்காடனுடைய ஜாதகத்தைத் தவறாகக் குறித்திருப்பார்? ஒருபோதும் அப்படியிராது. அவர் சரியாகவே குறித்துவைத்திருப்பார்' என்று கூறினாள் கலாவதி.

'மாயாண்டி செட்டியார் ஒரு பைத்தியக்காரர். திருவெண்காடனைப்போல் ஒரு மருமகன் தேசமெங்கும் தேடினாலும் கிடைக்கமாட்டான். அப்படிப்பட்ட மருமகன் பரதேசியானால்தானென்ன, குறைவா? கௌரவந்தானே? உலகாயதத்தில் மூழ்கிக்கிடக்கும் மாமிசபிண்டங்களுக்கு உண்மைத் துறவிகளின் பெருமை தெரியுமோ?' என்றாள் ஜகதாம்பாள்.

அப்போது குணவதி அவளைப்பார்த்து, 'ஜகதம், வாய்ப்பேச்சுக்கென்ன, எல்லோரும் இலேசாகப் பேசிவிடலாம். உன் பெண் மயிலாம்பாளைத் திருவெண்காடனுக்குக் கேட்டால் நீ கொடுப்பாயா?' என்று கேட்டாள்.

'பேஷாய்க் கொடுப்பேன்! ஆனால் என் பெண்ணை அவர்கள் கேட்பார்களா? அவர்களுடைய

அந்தஸ்தென்ன, கௌரவமென்ன? பேஷ் அவர்களோடு சம்பந்தம் செய்துகொள்ள நான் கனவிலும் நினைக்கலாமா? வெட்கக்கேடுதான்' என்றாள் ஜகதாம்பாள்.

'சிவசிதம்பரம் செட்டியாரும், அவர் மனைவி சிவகாமி அம்மையாரும் ஜகதம்பாளைப்போல் துணிந்தவர்கள் தாம். ஒரு வகையில் அவர்கள் புண்ணியம் செய்தவர்களென்றே சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் சிவனருள் பெற்றவன் மருமகனாகக் கிடைப்பானா?' என்று கூறி ஜகதாம்பாள் மறுபடியும் எல்லோரையும் பார்த்து, 'நல்லது, வீண்கதை பேசுவானேன். நாளையதினம் நாம் எல்லோரும் திருவெண்காடனின் கலியாணத்திற்குப் போவோமா? என்று கேட்டாள்.

'ஆகா, போகலாம், எல்லோருக்குந்தான் கலியாணத்திற்கு வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது' என்று அனைவரும் ஒரே முகமாகக் கூறினர்.

பிறகு அவர்கள் சம்பாஷணை வேறு வழியிற் சென்றது.

## பன்னிரண்டாவது அத்தியாயம்

### திருமணம்

ஊரார் எல்லோரும் தங்கள் தங்களின் வீட்டிற் கலியாணம் நடப்பதுபோல் தத்தம் வீடுகளை அலங்கரித்திருந்தனர். காவிரிப்பூம் பட்டினமுற்றும மங்கள ஓசையே நிறைந்திருந்தது. ஆடவரும, பெண்டிரும் அலங்காரத்துடன் அணியணியாகத் திருவெண்காடரின் திருமணத்தைக் கண்டுகளிக்க சிவசிதம்பரம் செட்டியாரின் மாளிகையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

சிவசிதம்பரம் செட்டியாரின் மாளிகை அதி சுந்தரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மங்கள வாத்தியங்கள் சப்தமேகங்களும கூடியகாலததில் இடியிடிப்பதுபோல் குமுறின, எங்கும் வாழை கமுகு தென்னை முதலியவைகளால் விதம விதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது, பலவகைப் புஷ்பங்களால் கலியாணமண்டபத்தை இந்திரவிமானம் போல் சுந்தரமாக அலங்கரிததனர். வாசனைத்திரவியங்கள் நாலாப்பக்கங்களிலும் வாரிவாரி இறைக்கப பட்டிருந்தமையால், நறுமணம், ஏவலாட்கள் வீசிறுவதாலுண்டாகும் காற்றோடு கலந்து ' கம, கம '

வென்று பரிமளித்தது. அடிக்கடி விசிறிகளைப் பன்னீரால் நனைத்து விசிறினார்கள்.

கலியாணமண்டபத்தில் அனைவரும் வந்து கூடினர். திருவெண்காடர் குளித்துத் திருவெண்ணீறணிந்து பூசை முடித்துச் சங்கமேசுவரரையும், சாயாவனப் பெருமானையும், திருவெண்காட்டீசரையும் வணங்கித் திருவிடைமருதூர்ப் பெருமானை மனத்தால் தியானித்துச் சிவிகையிலேறிப் பல பெரியோர்கள் புடைசூழச் சிவசிதம்பரஞ் செட்டியாரின் வீட்டருகிற் சென்றவுடன் சிவிகைவிட்டிறங்கிப் பாதசாரியாகச் சென்றார். அப்போது மங்கிலியப்பெண்கள் ஆலத்தி சுற்றித் திருஷ்டி கழித்தார்கள். திருவெண்காடர் வலது காலை முன்வைத்துச் சிவசிதம்பரம் செட்டியாரின் வீட்டிற்குட் சென்றவுடன் மங்கள வாத்தியங்களின் ஓசையும், வாழ்த்தொலிகளும் கடலோசைபோல் கிளம்பின. வீட்டிற்குட் சென்ற திருவெண்காடரைப் பெரியோர்கள் அழைத்துச் சென்று மணப்பந்தலில் உட்காரவைத்தனர். முற்கனவே பன்னீர் கலந்த வெந்நீரில் ஸ்நானம் செய்வித்துப் பட்டுடுத்திப் பலவகை ஆபரணம் அணிவித்து அந்தப்புரத்தில் உட்காரவைத்திருந்த சிவசிதம்பரஞ் செட்டியாரின் குமாரத்தியாகிய சிவகலையம்மையாரைக் கற்புடைய மங்கையர்கள் அழைத்துவந்து திருவெண்காடரின் வலப்பக்கத்தில் உட்காரவைத்தனர். விதிப்படி அர்ச்சிக்கப்பட்ட நீரைக்கொண்டு திருவெண்காடர் பாதபூசைசெய்து முடித்தார். பின்னர்ச் சிவசிதம்பரஞ் செட்டியார்

தமது அருமந்த புத்திரியின் கரத்தைத் திருவெண்காடரின் கரத்திலவைத்து, 'திருவெண் காடரே, என் அருந்தவப்பயனாயுதித்த என் புத்திரியை உமக்கு எல்லோருங்காண அளிக் கின்றேன். நீர் இத்திருமகளை உமது கண்ணேபோல கருதி நடப்பீராக' என்று கூறித் தாரைநீர் வார்த்தார். உடனே மங்கிலியப்பெண்கள் வாழ்த்துக்கூறினர். பெரியோர் ஆசீர்வதித்தனர். பிறகு மணவினைக் குரியவைகளைச் சைவவேதியர் செய்துமுடித்துப் பல்லோராலும் ஆசீர்வதிக்கப்பெற்ற மாங்கல்யத்தைத் திருவெண்காடர் கையில் கொடுத்தார். அவர் பெரியோர்களின் ஆசீர்வாதம் பெற்று அவர்கள் வாழ்த்தி ஆசீர்வதிக்க மங்களவாத்தியங்கள் சமுத்திரகோஷம்போல சப்திக்கச் சிவகலை யம்மையாருக்கு மாங்கல்யதாரணம் செய்தார். பின்னர் அம்மி மிதித்தல் அருந்ததிக்காட்டல் முதலியவைகளெல்லாம் முறைப்படி நிறைவேறின. தம்பதிகள் இருவரும் பெரியோரை வணங்கி ஆசீர்வாதம் பெற்றனர்.

சிவசிதம்பரனு செட்டியார் விவாகசம்பந்தமான மற்றெல்லாக் காரியங்களையும் மிகச்சிறப்பாகவே நிறைவேற்றினர்.

ஏழைகட்கும் மற்றும் வேண்டுவார்க்கும் பலவித தானதருமங்கள் செய்யப்பட்டன. அந்தணர் களுக்கும், உறவினர்களுக்கும், ஏழைகட்கும் அறுசுவையோடு கூடிய உண்டி வித்தியாசமின்றி அளிக்கப்பட்டது. இவ்வாறாக ஐந்து நாட்கள்வரை

விவாக மகோற்சவத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

பிறகு விவாகத்திற்கு வந்திருந்தவர்க ளெல்லோரும தம்பதிகளை ஆசீர்வதித்துத் தத்தம இருப்பிடங் களுக்குச் சென்றனர்.

பின்னர் திருவெண்காடர் சகலவரிசைகளும சூழ்ந்துவரத் தமது மனைவியாரோடு தமது மாளிகையை அடைந்து தெய்வ பூசை செய்து, அடியார்களை மகிழ் வித்து, உறவினர்களைப் போற்றித் தாயாரை வணங்கி இல்லறத்தை இனிது நடத்தி வரலானார்.

நாட்கள் பல சென்றன. திருவெண்காடரின மனைவியாராகிய சிவகலையமமையாரின ஒழுக்கத்தைக் கண்டு ஞானகலாமபையாரும, மற்று முண்டான உறவினர்களும 'இவள தெய்வப்பெண்' என்று கூறினர். சிவகலையமமையார,

'கொழுநன் உண்டபின் தான்உணுங் கொள்கையும்
விழித்து யின்றபின் துஞ்சலும் மென்துயில்
எழுதன் முன்னம் எழுதலு மேயன்றே
பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே.'

'அன்பர் துஞ்சிடில் துஞ்சுதல் ஆங்கவர்
துன்பம் எய்திடில் தாழும்அத் துன்புறல்
இன்பம் உற்றிடில் இன்புற் றிருத்தலே
மன்பெ றுந்தவம் கற்புடை மாதர்க்கே.'

'கொழுநன் சொற்கட வாதுறை கொள்கையே
வழுவில் நல்லறம் வான்தவம் ஆற்றுதல்
தொழுது தெய்வம் பாயமலர் தூவுதல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கேன்பவே'

'எய்தும் இல்துறந்து ஏகலர் இல்லகல்
தையலார் முகங் காணினுந் தாம்புவர்;
மையல் காதலர் வந்தெவை யாயினும்
செய்திர் என்றலும் செய்தனம் என்பரால்.'

'இனிய கேள்வர் முனியின் எதிர்நின்று
துனிகொள் நெஞ்சொ டெதிர்மொழி சொல்கிலார்
அனைய கேள்வர் எறியினும் அன்போடும்
கனிவர் நெஞ்சகம் கற்புடை மாதரே.'

*என்னும் கற்பிலக் கணத்தினின்றும் சிறிதும் பிறழாது நடந்து தங்கணவரை வணங்கி வாழ்ந்து வந்தார்.*

# பதின்மூன்ருவது அத்தியாயம்

## சிவகலையம்மையார்

திருவெண்காடருக்கு விவாகம் நடந்து பல வருடங்களாயின. அதுவரையில் அவருக்குப் புத்திரனாவது புத்திரியாவது பிறக்கவில்லை. திருவெண்காடர் தாமரை இலையின் தண்ணீர்போல் ஒருபற்றுமின்றி இல்லறத்தில் இருந்தாராயினும் மகவில்லாத குறைவினால் மனைவியார் வருந்துவதைக் கண்டு, அவர் வருத்தத்தை நிவர்த்திக்கும் பொருட்டு மகவை யடையவேண்டுமென்று விரும்பினர். அவர் விருப்பம் முழுவதும் நிறைவேற்றிவந்த கடவுள் இவ்விஷயத்தில் மட்டும் அவர் விருப்பத்தை வெகுகாலம் வரையில் நிறை வேற்றவில்லை. மகவையளித்தால் திருவெண்காடர் பின்னும் குடும்பவலையிற் சிக்கி மீளமுடியாது தவிப்பார் எனக்கருதி இறைவன் அவருக்குச் சந்ததியை உண்டாக்கவில்லை போலும்.

ஒரு நாள் சிவகலையம்மையார் தம் கணவனரை சமயமறிந்து வணங்கி அவரைப்பார்த்து, 'சுவாமி, என் மனத்தில் நெடுநாளாக ஒரு குறை உண்டாயிருக்கின்றது. அதைத் தாங்களும் இதுகாறும் அறிந்திருக்கலாம். "மனைக்கு அழகு தம் மக்கள்" எனப் பெரியோர் கூறியிருக்கின்றனரே, ஒரு மகவேனும் யான் அடையப் பாக்கியம் செய்யவில்லையோ? ஆண் மகவு இல்லாதவர்களுக்கு

மோட்சம் கிடையாதென்று கூறப்பட்டிருக்கிறதே. இதற்கு என் செய்வது?' என்று கேட்டார்.

அதற்குத் திருவெண்காடர் புன்சிரிப்புற்றுத் தம் மனைவியைப்பார்த்து, 'பெண்மணி! சுவடிகளில எழுதியுள்ள விஷயங்களெல்லாம் உண்மை யாகுமோ? மனிதர்களெல்லோரும் எப்படி உண்மை மனிதர் களாகமாட்டார்களோ அப்படியே சுவடிகளிலெழுதி வைக்கப்பட்டிருககும் விஷயங்களெல்லாம் உண்மை விஷயங்களாகமாட்டா. சுவடிகளில் உண்மையான விஷயங்களும் உண்டு: பொய்யான விஷயங்களும் உண்டு. பொய்யான விஷயங்களும் இருக்குமோ எனில், இருக்கும். சுவடிகளில் அநேகவிஷயங்களை அநேகர் தங்களுடைய நன்மைக்காகவே எழுதிவைத திருக்கின்றனர். அதைப்போலவே புத்திரரில்லாதவர் களுக்கு மோட்சம கிடையாதென்று புராணச் சுவடி களில் சிலர் எழுதி வைத்திருககின்றனர். சுயநலம பிடித்த சிலர் தங்கள் நன்மையைக் கருதி இவ்வாறு எழுதிவைத்திருக்கின்றனர். எவ்விதச் சுயநலங்கருதி இவ்வாறு எழுதிவைத்திருக்கின்றார்க ளென்பது அறிவாளர்களுக்குச சொலலாமலே தெரியும். புத்திரன் இல்லாதவாகளுக்கு மோட்சங் கிடையாதென்று கூறுவது முழுவதும பொய். அவரவர்கள் செய்த புண்ணியமே அவரவர்களை மோட்சத்திற்கனுப்புமே யன்றிப் புததிரன் மோட்சத்திற் கனுப்பமாட்டான். விவாகம இன்னதென்பதையே அறியாத கண்ணப்பர் போன்ற பக்திமான்கள் புத்திரனைப்பெற்றோ மோட்ச மடைந்தனர்! பெண்ணே, புத்திரனிருந்தால்தான்

மோட்சமடையலாம் என்னுங்கருத்தை இன்றோடு விட்டுவிடு' என்று கூறினார்.

உடனே சிவகலையம்மையார் அவரைபபார்த்து, 'சுவாமி, தாங்கள் சொல்வதை நான் சிரமேற் கொள்ளுகிறேன். பிள்ளைகளால மோட்சமடைகிறோ மென்பதில்லை யாளுலும பிள்ளைகள் மனைககு அழகைக் கொடுக்கின்றார்கள். அன்றியும்,

"படைப்புப் பல படைத்துப் பலரோடுண்ணு
முடைப் பெருஞ் செல்வராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
மயக் குறு மக்களை யில்லோர்
பயக்குற விலர் தாம் வாழுநாளே"

என்னும வாக்கியததைத் தாங்கள் அறியாதவர்க ளன்றே! ஆகையால் நாம் சிவபெருமானை நோக்கி' நமக்கோர் ஆண்மகனை யளிக்கவேண்டுமெனப் பிரார்த் திக்கவேண்டும். சுவாமி' தாங்கள் அடியாள் பிரார்த் தனையை ஆதரிப்பீர்களென்று நம்புகிறேன்' என்றார்.

அவ்வார்த்தையைக கேட்ட திருவெண்காடர் அவ்வமமையாரைப பார்தது, 'பெண்ணே, தம அன்பர்களுக்கு வேண்டியவற்றை அறிநது கடவுள் தாமேசெய்வார். "இதுவேண்டும், அதுவேண்டும" என்று நாம் அவரைக்கேட்பது முறையன்று. அவருககு விருப்ப முண்டானல் அவர் உன்னுடையகுறையை நீக்குவார். என்னு லாவது யாதொன்றுமில்லை' என்று கூறிப்

பின்னும் அவா தம் மனைவியாரைப் பார்த்து, 'பெண்ணே, நான் கூறுவதைக்கேள். எவன் ஒருவன் இவ்வுலகத்தில் பிரஜாவிருத்தி செய்யாமல் இருக்கின்றானோ அவனே பாக்கியசாலியாவான். நாம் இவ்வுலகத்தில் பிறந்து அடைந்த நன்மை யென்ன? நரகமாகிய இவ்வுலகத்தில் நாம் கஷ்டப படுவது போதாதென்றோ மக்களைப்பெற்று அவா களையுங் கஷ்டப்படச் செய்யவேண்டும்? அது மட்டுமோ? கவனித்துப்பார. மக்களால் நாம அடையக்கூடிய நன்மையொன்றுமில்லை. மக்களைப் பெறும்போதும துன்பம, வளர்க்கும்போதும துன்பம், அம்மக்கள் நோயடைந்தால துன்பம், காலாகாலத்தில் அவர்களுக்கு நாம் செய்யவேண்டிய விஷயங்களைச் செய்யும்போதும் துன்பம். விதி வசத்தால் அவர்கள் எமன் கையில் சிக்கிக்கொள்ளு வார்களானல் அளவில் துன்பம், மக்களால் என்றைக்குந் துன்பமேயன்றி இன்பங் கிடையாது. போகட்டும். உன் விருப்பத்திற்கு இடையூறாக நான் நிற்கமாட்டேன். சிவபெருமான் உன் விருப் பத்தை நிறைவேற்றுவாளுக' என்று சொன்னார்.

---

# பதிநான்காவது அத்தியாயம்

## தெய்வக்குழந்தை

முன் அத்தியாயத்தில் கூறிய சம்பவம் நடந்தபோது திருவிடைமருதூரில் சிவபக்தி அடியார் பக்தியிற் சிறந்த ஆதிசைவப் பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் **சிவசருமர்** என்பது. அவர் உண்மை நூற்களைக் கற்றுத் தெளிந்த கல்விமான். அவர் தம் மனைவியாராகிய **சுசீலையம்மை**யாரோடு இல்லற தருமத்தை இனிது நடாத்தித் திருவிடைமருதூரில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் சிவ பெருமானைக் காலந்தவறாது சிறப்பாகப் பூசித்து வரும் இயல்பினையுடையவர். அவர் தம்மிடமிருந்த செல்வங்களையெல்லாம் சிவார்ச்சனையின் பொருட்டும், சிவனடியார்க்கு மகேச்சுவரபூசை செய்வித்தற் பொருட்டும் செலவிட்டு வந்தார். நாளடைவில் கடவுள் சோதனையினால் அவருடைய செல்வம் குறைந்து அவர் வறியரானார். கடவுள் தம் உண்மை அடியவராகிய சிவசருமருக்கு வறுமை வரச்செய்வானேன்? சிவசருமரின் நன்மையின் பொருட்டேயாகும். நிற்க.

தமக்குத் தரித்திரம் நேர்ந்தகாலத்தும் சிவசருமர் மனந்தளராமல் உள்ளதைக்கொண்டு திருவிடை மருதூர்ப் பெருமானையும், தேவியாரையும் பூசித்து அடியவர்களுக்கு அன்னம் படைத்து வந்தார்.

ஒருநாள் சிவார்ச்சனைக்கு வேண்டியவைகளைச் சேகரிக்கப் பொருள் இல்லாமையினுல சிவசருமர் ஏங்கியிருந்தார்.

அவர் கவலையுற்றிருப்பதைக்கண்ட அவர் மனைவி யார் அவரை நோக்கி, 'சுவாமி, தேவரீர் திருமுகம வாடியிருப்பானேன் ?' என்று பரிவுடன் கேட்டார்.

சிவசருமர், 'பெண்ணே, இன்று சிவபூசைக்கு வேண்டிய பொருள்கள் இல்லாமையால் வருந்து கின்றேன்' என்றார்.

அவ்வார்த்தையைக்கேட்ட கற்பிற் சிறந்த அம் மாதரசியார் அவரை நோக்கி, 'தேவரீர் அதற்காக வருந்துதல் வேண்டாம். நான் குழந்தைகளின் பொருட்டுச் சில பொருள்கள் வைததிருக்கின்றேன். அவற்றைக்கொண்டு இன்று சிவபூசையை முடிததுக் கொள்ளுங்கள்' என்று அன்புடன் மொழிந்தார்.

உடனே சிவசருமர் மனமகிழ்ந்து மனைவியார் அப்பொருளைத தாப்பெற்றுக் கோயிலுக்குச் சென்று சிவபெருமானுக்கும், தேவியாருககும் பூஜை நைவேத்தியம் முதலியவைகளைச் செய்து, நிவேதனம் செய்த ஏராளமான சித்திரான்னம் முதலிய பலவேறு பிரசாதங்களுடன் அடியவர் பூசை' செய்யும் பொருட்டுத் தம்மாளிகையை நோக்கிச் சென்றார்.

அப்போது சிவபெருமான் ஒரு விருத்தரைப்போல் அவர் முன்வந்து, 'ஐயா, என் வயிறு பசிக்கின்றது. அப்பசியைப் போக்குவீரோ ?' என்று கேட்டார்.

'என் மனைக்கு வருவீராயின் போக்குவேன்' என்றார் சிவசருமர்.

'அதுகாறும் நான் பசி தாளமாட்டேன்' என்றார் அவ்விருத்தர்.

உடனே சிவசருமர் அவ்விடத்திற் றுனேதங்கி அவ்விருத்தர் பசிதீரத் தம்மிட மிருந்த நிவேதனம் செய்த பொங்கல் முதலியவைகளைக் கொடுத்தார். பலபேர் உண்ணக்கூடிய அவ்வளவு அதிகமான நிவேதனப் பொருள்களை யெல்லாம அவ்விருத்தர் ஒருவரே உண்டு மகிழ்ந்து திடீரென்று இந்திரஜாலக் காட்சியைப் போல் மறைந்தருளினர்.

அதைக்கண்ட சிவசருமர் விருதத்ர் சிவபெருமானே என்றுணர்ந்து, 'என்னையாட்கொண்ட பெருமானே, இதுஉன் திருவிளையாடலோ, கண்ணப்பனளித்த கறியமு துண்ட உனக்கு இன்று நான் படைத்த நிவேதனப் பொருள் இனிதாகத் தோன்றியதோ? பாவியேன் உம்மைக்கண்டும் பிடித்துக்கொள்ளாது விட்டு விட்டேனே! இனி என் செய்வேன்? இருக்கு மிடந்தேடி என்னை வந்து கண்டாயே. அது நான் செய்த பாக்கியமேயாகும். ஆ, ஆ, இன்றே நான் தன்யனுனேன் என்று கூறி மகிழ்ந்து கொண்டிருந்தார்.

அப்போது நேரமாயினமையின் அவரைத்தேடிக் கொண்டு வந்த அவருடைய உறவினர் ஒருவர் அவரைப்பார்த்து, 'இன்னும் இங்கு நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? தங்கள் மாளிகையில் சிவனடியார் சிலர் வந்து பசியோடு காத்துக் கொண்டிருக்கின்றனரே' என்றார்.

அதுகேட்ட சிவசருமர், 'அந்தோ இதற்கு

என்செய்வேன் ?" என்று எண்ணித் தமது மாளிகையை யடைந்தார்.

கணவனுரிடம் நிவேதனம் செய்யப்பட்ட திருவமுது முதலியன இல்லாமையைக் கண்ட சுசீலையம்மையார் அவரைப்பார்த்து, 'சுவாமி, நிவேதனப் பொருள்கள் எங்கே ?" என்று கேட்டார். உடனே சிவசருமர் நடந்தவற்றைக் கூறினுர்.

'இதுவும் இறைவன் திருவருள்' என்று மகிழ்ந்த சுசீலையம்மையார் தங்கணவரைப்பார்த்து, 'சுவாமி, நாமும் குழந்தைகளும் பசித்திருந்தாலும் இருக்கலாம். சிவனடியார் பசித்திருக்கப் பார்ப்பது கொடுமை யன்றோ! சமையலுக்கு வேண்டியவைகளொன்றும் வீட்டிலில்லை. வாங்குவதற்கோ கையில் பொருள் இல்லை. கடன் வாங்கி இக்காரியங்களைச் செய்வதும் உசிதமாகாது. என் கழுத்திலுள்ள திருமாங் கல்யத்தைக் கழற்றித் தருகிறேன். அதை விற்று அதனுல் வரும் பொருளைக் கொண்டு சமையலுக்கு வேண்டியவற்றை வாங்கி வாருங்கள்' என்று கூறித் தமது கழுத்திலிருந்த மாங்கல்யத்தைக் கழற்றிக் கொடுத்தார்.

சிவனடியாருக்குத் தொண்டு செய்வதையே பெரும் பேருகக் கருதிய சிவசருமர் மனைவியார் கொடுத்த மாங்கல்யத்தைப் பெற்று விரைவிற் சென்று விற்று வேண்டிய பொருள்களை வாங்கிக் கொண்டு மனைக்குத் திரும்பினுர்.

கணவனுர் கொண்டு வந்த பொருளில் அச்சமயத் திற்கு வேண்டியவற்றைக் கொண்டு அறுசுவையுண்டி

சமைத்துச் சுசீலேயம்மையார் கணவரோடிருந்து அடியவர்களின் பசிப்பிணியைப் போக்கினர்.

அன்றிரவு சுசீலேயம்மையாரும், அவர் கணவ ஞரும், மக்களும் உண்டு கண் துயின்றனர்.

மறுநாட்காலேயில் துயில் நீங்கி எழுந்து நித்தியக் கடனே முடித்துக்கொண்ட பின்னர்ச் சுசீலே யம்மையார் தங்கணவனேப் பார்த்து, 'நம் குறைகளே நாம் ஏன் சிவபெருமானிடம் சொல்லுதல் கூடாது? இன்றே சொல்லுங்கள்' என்ருர்.

அது கேட்ட சிவசருமர் அவ்வம்மையாரைப் பார்த்து, 'நம் குறை சிவபெருமானுக்குத தெரியா திருத்தல் நாம் சொல்லவேண்டும்? உன் பெண் புத்தி இருந்தவாறு வெகு நன்று. ஆயினும் உன் இஷ்டப்படி சொல்வோமென்ருலும் நிவேதனத்திற் குரிய பொருளின்றி எவ்வாறு ஆலயத்திற்குப் போவது?' என்று கேட்டார்.

உடனே அம்மையார் அவரைப்பார்த்து, 'சுவாமி, நேற்றையதினம் அடியவர்களுககாக வாங்கி வந்த உணவுப்பொருள்கள் மிகுந்திருக்கின்றன. தாங்கள் அவைகளேச் சுவாமி நிவேதனத்திற்காகக் கொண்டு செல்லலாம்' என்றனர்.

அதைக் கேட்ட சிவசருமர் ஆனந்த பரவசராய்த் தம் மனேவியை நோக்கி, 'பெண்ணே, நீ தருவதாகச் சொன்ன பொருள்களேக் கொண்டுவா. நான் இப்போதே ஆண்டவன் சந்நிதிக்குச் சென்று அவனே வழிபட்டு நமது குறையை அவனிடம் சொல்லி வருகிறேன்' என்ருர்.

உடனே சுசீலையம்மையார் நிவேதனத்திற்குரிய பொருள்களைக்கொண்டு வந்து கணவனார் முன்னே வைததார். சிவசருமர் அவைகளை எடுத்துக கொண்டு ஆலயத்தை யடைந்து அவைகளைப பரிசாரகர்களிடங் கொடுத்துச் சுவாமியின் நிவேதனத திற்காகச் சமையல் வேலையைச் செய்யுமாறு கூறி விட்டுத் தாம் சுவாமிக்கும் அம்மனுக்கும அபிஷேக அலங்கார முதலியவைகளைச் செய்ய முற்பட்டார். நான்கு நாழிகைப் பொழுதில் சித்திரான்னம முதலியன செய்தாயின. சிவசருமர் அவை களைச் சுவாமிக்கு நிவேதித்துத தமது வீட்டிற்கு அனுப்புமாறு பரிசாரகர்களிடம் கூறிவிட்டுத் தாம் ஓர் மூலையில் அமர்ந்து சுவாமியைத் தியானித்துக கொண்டிருந்தார்.

பரிசாரகர்கள் நிவேதனப்பொருளை மடைப்பள்ளியில் வைத்துவிட்டுத் தாங்கள் உச்சிக்கால ஸ்நானம்செய்யக குளத்திற்குச் சென்றனர். அப்போது சிவபெருமான் ஒரு விருத்தரைப்போல் சிவசருமர் முன்தோன்றி 'சிவசருமரே, நான் மெத்தப் பசித்திருக்கின்றேன். எனக்கு அமுதூட்ட வல்லீரோ?' என்று கேட்டார்.

'சுவாமி, அடியேனல் கூடியவரையில் தங்கள் பசியைப்போக்க முயற்சிக்கின்றேன் வாருங்கள்' என்று கூறி அவரை மடைப்பள்ளிக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த ஆகாரங்களை அவருக்குக்கொடுத்து உபசரித்தார். அம்முதியவர் அங்கிருந்த ஆகாரங் களில் சிறிதும் மீற்முமல் எல்லாவற்றையும் புசித்து

விட்டதைக் கண்ட சிவசருமர் சிவபெருமானே முதியவராக வந்திருக்கின்றானென் றறிந்துகொண்டு அவரிடம் பூஜைக்குப் பொருளில்லாக்குறையைச் சொல்ல நினைத்தார்.

அப்போது முதியவர் வேடத்துடன் நடித்துக் கொண்டிருந்த சிவபெருமான் சிவசருமரைப் பார்த்து, 'சிவசருமரே, உமது மாளிகையில் பல பெரியோர்கள் உணவின் பொருட்டுப் பசியோடு காததிருககின்றனர். நீ அங்குச்சென்று அவர்களுடைய பசியை ஆற்று வாயாக' என்று கூறி மறைந்தருளினார்.

அதைககண்ட சிவசருமர், 'ஆ, கெட்டேன். அரி பிரமாதியர்களும், நான்குவேதங்களும் தேடியுங் காணாத இறைவனைக் கண்டும கைவிட்டேனே, எமபெருமானே, இவ்வாறு எளியேன்முன் தோன்றித் தோன்றி எளியேனை ஆதரிக்காமல் விட்டுச்செல்லல் முறையோ?' என்று கூறி வருந்தினார்.

அப்போது குளிக்கச்சென்றிருந்த பரிசாரகர்கள் திரும்பிவந்து மடைப்பள்ளியிற் சேமித்துவைத்திருந்த திருவமுது முதலியவைகளைக் காணாதவர்களாய் அச்சுற்று, 'ஆ, இங்கிருந்த உணவு முதலியவைகளைக் கொண்டு சென்றவர்கள் யாரோ தெரியவில்லையே. சிவனடியார்கள் சிவசருமர் மாளிகையில் பசித்திருப் பார்களே. சிவசருமருக்கு என்ன சொல்வோம்' என்று ஒருவரோடொருவர் பேசிப்பயந்து கோயிலின் ஒருபுறமிருந்த சிவசருமரைக்கண்டு நடந்ததைத் தெரிவித்தனர். சிவசருமர் அவர்களிடம் நடந்தவை களைக் கூற விருப்பமில்லாதவராய் மெதுவாக

அவ்விடத்தை விட்டகன்று தமது மாளிகையை நோக்கிச் சென்றார்.

இவ்விஷயம் இவ்வாறிருக்கையில், முன்னே சிவசருமனை அவருடைய மாளிகைக்குச் செல்லுமாறு கட்டளையிட்ட சிவபெருமான் நான்கு வேதங்களும் பரிசாரர்களாகத் தம்மைத்தொடரத் தாம் சிவசருமரைப்போல் உருக்கொண்டு நிவேதனப் பொருள்களுடன் சிவசருமர் வீட்டையடைந்து சுசீலையம்மையாரைப்பார்த்து, 'பெண்ணே, இதோ பரிசாரர்கள் கொண்டுவந்துள்ள உணவுப்பொருள்கள் இருக்கின்றன. அவைகளை எடுத்து உள்ளே வை. அடியவர்களுக்கு உணவளிப்பதற்குத் தலைவாழை இலைகளைத் தயார்செய்து வைப்பாயாக. நான் இதோ வருகிறேன்' என்று கூறி வெளியிற் சென்று மறைந்தார்.

வந்தவர் தமது கணவனாரே யென்றெண்ணி சுசீலையம்மையார் பரிகலன் திருத்தியமைத்துத் தம் கணவனார் வருகையை ஒவ்வொரு நிமிடமும் எதிர் நோக்கிக் காத்திருந்தார்.

கோயிலில் இருந்து புறப்பட்ட சிவசருமர் வெகு நேரம் கழித்துத் தமது மாளிகையை யடைந்தார். அப்போது கற்பிற்சிறந்த அவர் மனைவியார் அவரைப் பார்த்து, 'இதோவருகிறேன் என்றுகூறிப் பிரசாதங்களைக் கொடுத்துச்சென்ற தாங்கள் இதுகாறும் எங்குச் சென்றிருந்தீர்கள்? அடியவர்கள் பசியோடு காத்திருக்கின்றனரே' என்று கூறினர்.

அவ்வார்த்தைகளைக்கேட்ட சிவசருமர் பெருவியப் பெய்தி வீட்டிற்குள் இருந்த நிவேதனப்பொருள்

கலைக்கண்டு மகிழ்ந்து, 'இது, சிவபெருமானின் திருக்கூத்தென்று சொன்னார். பின்னர் அவர் அத்திருவமுதை அடியவர்களுக்கிட்டு மிகுந்ததைத் தம் மனைவி மக்களோடு தாமும் உண்டு மகிழ்ந்தார். கற்புக்கரசியாராகிய சுசீலையம்மையார், 'இவ்வளவு செய்யும் சிவபெருமான் அடியவரை உபசரிப்பதற்காக நமக்குச் சிறிது பொருள் தரலாகாதோ' என்றெண்ணினார்.

அன்றிரவு சிவசருமர் கனவிலும், சுசீலையம்மையார் கனவிலும் சிவபெருமான் தோன்றி, 'அன்பர்களே, நாம் நாளையதினம் கோயிலின் சமீபத்திலுள்ள காருண்யாமிர்த தீர்த்தக்கரையின் கீழ்ப்புறமிருக்கும் வில்வமரத்தடியில் குழந்தை வடிவுடனிருப்போம். நீங்கள் எம்மை எடுத்துக்கொண்டுபோய்க் காவிரிப்பூம் பட்டினத்தில் மகவில்லாமல் வருந்திக்கொண்டிருக்குந் திருவெண்காடனிடம் அளித்து உங்களுக்கு வேண்டும பொருள்களைப் பெற்று எப்போதும்போல் அடியவர் பூஜையைச் செய்து மகிழுங்கள்' என்றார்.

சிவசருமர், 'நன்று சொன்னீர்கள். ஒருவராலும் அளத்தற்கரிய மகிமையுடைய தேவரீரையோ விற்றுப் பொருள் பெறுவது? இக்காரியஞ் செய்வதைவிட இறப்பதே மேலன்றோ!' என்று கூறி வருந்தினார்.

அதுகேட்ட சிவபெருமான் அவரைப்பார்த்து, 'என் அன்பனே, நீ மனம் வருந்தவேண்டாம். திருவெண்காடன் உன்னைப்போலவே என்னிடத்தில் பேரன்புடையவன். அவனைத்தடுத்தாட்கொள்ளவே யாம் அவனிடம் குழந்தை யுருக்கொண்டு செல்ல

விரும்புகிறோம். ஆகையினால் நாளையதினம் காருண்யாமிர்த தீர்த்தக்கரையிலுள்ள வில்வமரத்தடியில் குழந்தை யுருக்கொண்டிருக்கும் எம்மை எடுத்துக் கொண்டுபோய்த் திருவெண்காடன் பாலளித்து உனக்கு வேண்டிய செல்வத்தைப் பெற்றுக்கொள். திருவெண்காடனுக்கு நாம உண்மை ஞானத்தை உபதேசிக்கும்போது, உனக்கும் உன்னுடையகுடும்பத்தோடு முத்தியளிப்போம். இப்போது நாம் சொல்லிய படி செய்வாயாக,' என்று கட்டளையிட்டு மறைந்தருளினர். உடனே சிவசருமர் திடுககிட்டுக் கண் விழித்தார். நிற்க.

சிவசருமரைப் போலவே கனவு கண்டெழுந்த அவருடைய மனைவியார் தாம் கண்ட கனவைச் சிவசருமரிடம் சொன்னார். சிவசருமரும் தாம் கண்ட கனவைக்கூறி மகிழ்ந்து, பின்னர்ச் சிவபெருமானைக குழந்தையாகப்பெற்று விற்கநேர்ந்ததே என்றெண்ணி விசனித்தார்.

அப்போது அவர் மனைவியார் அவரைப்பார்த்து, 'சுவாமி! குழந்தை வடிவத்துடன் நம்மிடங் கிடைக்கப் போகும் சிவபெருமானை விற்பதற்கு நான் சிறிதும் உடன்படேன்' என்றார்.

அதற்குச் சிவசருமர், 'பெண்ணே! அவ்விதங் கூருதே. சிவபெருமானுடைய கட்டளையை நாம் மீறலாகாது. அவர் கட்டளையை மீறினால் அதனால் உண்டாகக்கூடிய பாவம் இத்தகையதென்பதை நீ அறியவில்லைபோலும். அவர் கட்டளையை மறுக்க வேதங்களும் அஞ்சுமே! அவ்வாறிருக்க நாம்மட்டும்

அவருடைய கட்டளையை எவ்வாறு மறுப்பது? நீ இங்கேயே நல்ல சிந்தனையுடன் இரு. நான் சென்று குழந்தையை எடுத்துக்கொண்டு வருகிறேன்' என்று கூறினார்.

அதுகேட்ட அவர் மனைவியார் அவரை நோக்கி, 'சுவாமி! சிவபெருமானுடைய கட்டளையை நாம் மீறி நடப்பது பாவமேயாகும் என்று நீங்கள் கூறிய வார்த்தையை நான் சிரமேற்கொள்ளுகின்றேன். ஆயினும் தயைசெய்து அடியாளையும தாங்கள் அக் குழந்தையைக் காணும இடத்திற்கு அழைத்துச் செல்லவேண்டும்' என்று கூறி இருகண்களிலும் ஆனந்த நீர் சொரிந்தார்.

சிவசருமர் சுசீலையம்மையாரின் கருததுக்கிணங்கி அவரைத் தம்முடன் அழைத்துச்சென்று ஆலயத்தி லுள்ள மருதவாணரையும், தேவியாரையும பணிநது பின்னர்க் காருண்யாமிர்த தீர்த்தககரையிலுள்ள வில்வ மாத்தடியிற் சென்றனா.

அங்கு ஒரு மலரணையின்மீது சிறு குழந்தையொன்று அழுதவண்ணம் படுத்துக்கொண்டிருந்தது. என்னே சிவபெருமானின் திருவிளையாடல்! அககுழந்தையின் அழகை உளளவாறு எழுத எவரால் முடியும்! நான்மறையும் தேடிககாணுத பெரும்பொருளாகிய சிவ பெருமானே குழந்தை வடிவுடன் வருவானுனல் அதன் பேரழகைச் சொல்லவும் வேண்டுமோ?

அக்குழந்தையைக்கண்ட சிவசருமர் காந்தங்கண்ட இரும்புபோல் விரைந்துசென்று அக்குழந்தையைக் கையிலெடுதது மார்போடணைத்து உச்சி மோந்து

ஆனந்த பரவசரானார். ஆனந்த மேலீட்டினால் அவருக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை. பிறகு அவர் அக்குழந்தையைத் தம் மனைவி கையிற் கொடுத்தார். அவ்வம்மையார் அக்குழந்தையைக் கையில் வாங்கி, 'சிவபெருமானே! செல்வனே! தேவதேவே! திருவிடைமருதூர! மூவாமுதல்வ! முக்கண்மூர்த்தி! உன் திருவிளையாடலின்பெருமையை யாரே புகழவல்லார்? நீ குழந்தை உருக்கொண்டு வரவும், உன்னை நான் என் கையினால் தொடவும் என்ன புண்ணியம் செய்தேனோ?" என்று பலவாறு சொல்லி மகிழ்ந்தார்.

பின்னர் அவர்கள் அக்குழந்தையின் அழகைக் கண்டு, விட்டுப்பிரிய மனம் இல்லாமல், அதைத் தங்களிடம் வைத்துக்கொள்ளத் தீர்மானித்தார்க ளாயினும், சிவபெருமானின் கட்டளைக்கு அஞ்சி அதைக் காவிரிப்பூம் பட்டினத்திற்குக் கொண்டு போய்த் திருவெண்காடரிடம் சேர்க்கத் தீர்மானித்தனர்.

அதனால் அவர்கள் அன்றே தங்கள் மக்களுடனும், தெய்வக்குழந்தையுடனும் காவிரிப்பூம் பட்டினத்தை நோக்கிப் பிரயாணமானார்கள்.

அவர்கள் காவிரிப்பூம் பட்டினத்தை யடைந்ததும, பசியினால் ஏற்பட்ட களைப்பு மேலீட்டினால் அங்கு ஓர் மாளிகையின் வெளிப்புறத்தில் தங்கினார்கள்.

## பதினைந்தாவது அத்தியாயம்

### தெய்வக்குழந்தையின் திருவிளையாடல்

முன் அத்தியாயத்தில் நடந்த சம்பவத்தன்று முதல் நாளிரவு பக்தியிற்சிறந்த திருவெண்காடர் என்னும் பெயரினையுடைய பட்டினத்துப் பிள்ளையார் மகனில்லாமையினால் தமது மனைவிக்கு ஏற்பட்ட மனக்குறையை நீக்குவான்வேண்டிக் குழந்தைக்காகச் சிவபெருமானிடம் குறையிரந்து கிடந்தார்.

அடியவர்கள் வேண்டுவதை அளிப்பதே தமது கடமையாக நினைத்துள்ள சிவபெருமான் பட்டினத்துப் பிள்ளையாரின் கனவில் தோன்றி, 'அன்பனே, நீ இனிமேல் புத்திரன் இல்லையேயென்று வருந்த வேண்டாம். இச்சென்மத்தில் உன்மனைவி கருவுற்றுப் புத்திரனைப் பெறக்கூடிய பாக்கியத்தைச் செய்யவில்லை. ஆயினும், நாம் உனக்குப் புத்திரனை அளிக்கின்றோம். நாளையதினம் உன் மாளிகையின் வெளியில் சிவசருமர் என்னும் ஆதிசைவப்பிராமணர் ஒருவர் தமது மனைவியோடுவந்து தங்குவார். அவருடைய மனைவி கையில் இளங்குழந்தை யொன்றிருக்கும். நீ அவர்களிடம் சென்று நீ இன்னாரென்பதை அவர்களுக்குத் தெரிவிப்பாயானால் அவர்கள் உன்னோடு வருவார்கள். அவர்களுக்கு வேண்டிய உபசாரணைகளை நீ செய்வாயாக. அப்படிச செய்வாயானால் அவர்கள்

அக்குழந்தையை உன்னிடங் கொடுப்பார்கள். நீ அக் குழந்தையை ஒரு துலையில்வைத்து அக்குழந்தையின் நிறைகொண்ட பொன்னை அவர்களிடங் கொடுத்து அவர்களை அனுப்பிவிடு. "பொன்கொடுத்துப் பிள்ளை யைப்பெறுவதோ?" என்றெண்ணவேண்டாம். அப் பிள்ளையே உனக்கு இம்மை மறுமைப் பயன்களை அளிக்கக்கூடியதாகும். எமது வார்த்தையைத் தள்ளாமல் நாம் சொன்னபடி செய்வாயாக' என்று கூறி மறைந்தருளினர். இவ்வாறே பட்டினத்துப் பிள்ளையாரின் மனைவியாராகிய சிவகலையம்மையாரும் கனவுகண்டு கண்விழித்தெழுந்து நடந்த விஷயத்தைத் தமது கணவனரிடம் சொன்னர். அவரும் அவ்வாறே தாம் கனவிற்கண்ட அதே விஷயத்தைத் தமது மனைவி யாரிடங் கூறி மகிழ்வுற்றார்.

மறுநாள் பகல் சிவபெருமான் கூறியபடி வேதியா ஒருவா அவர் மனைவியாரோடும் இளங்குழந்தை யொன்றோடும், தம மாளிகையின் வெளிப்புறத்தி லிருப்பதைப் பட்டினத்துப் பிள்ளையாரும் அவரது மனைவியாரும் கண்டனர். கண்டவுடன் அவர்களைச் சிவபெருமானாகவும் பார்வதி தேவியாராகவும் மதித்து அவர்களிடம் சென்று உபசாரங் கூறி அவர்களைக் குழந்தையுடன் மனைக்குள் அழைத்துச் சென்றனா

அவர்களே பட்டினத்துப் பிள்ளையாரும் அவரது மனைவியாருமாவா என்று அறிந்துகொண்ட சுசீலை யம்மையார் பட்டினத்துப் பிள்ளையாரின் மனைவி யாராகிய சிவகலையம்மையாரை நோக்கி, 'அம்மணீ! இந்தக்குழந்தை தெய்வ அருளால் கிடைத்தது.

இக்குழந்தையை உங்களிடம் சேர்த்துவிட வேண்டும் என்பது சிவபெருமானுடைய உத்தரவாகும். ஆகை யினால் இக்குழந்தையை நாங்கள் இங்கு கொண்டு வந்தோம். நீர் இம்மகனை வாங்கிக்கொண்டு உமது மகவேபோல போற்றிப் பாதுகாப்பீராக' என்று கூறிக்கொண்டே தம்மிடமிருந்த தெய்வக் குழந்தையைச் சிவகலையாரிடம் கொடுத்தார்.

அத்தெய்வக் குழந்தையைச் சிவகலையம்மையார் அன்புடன் பெற்று ஆனந்தமடைந்தார். அத்தெய்வக் குழந்தையைத் தொட்ட மாத்திரத்திலேயே அவ்வம்மையார் மனத்தில் தேவர்களும் அறியாத ஆனந்தம் தோன்றியது. அதை உணர்ந்த சிவ சருமரும், அவரது மனைவியாரும் பெருமகிழ் வடைந்தனர்.

இதுவரையில் மௌனமாயிருந்த பட்டினத்துப் பிள்ளையார் சிவசருமரைப் பார்த்து, 'ஐயரே! மருத வாணரின் திருவருளாலன்றோ நான் உம்மைப் பார்க்கப்பெற்றேன். உம்மைக் கண்டதே எனக்குப் பேரானந்தம். இஃது உம்முடைய மாளிகையேயா கும்'என்றுகூறி அவரை மேலும்மேலும் உபசரித்தார்.

அப்பொழுது சிவகலையம்மையார் சுசீலையம்மை யைப்பார்த்து, 'அம்மணீ! உங்கள் கட்டளைப்படியே இக்குழந்தையை நான் மிகவும் அன்போடு காப்பேன்; சந்தேகம் வேண்டாம். தெய்வ அருளால் கிடைத்த இக்குழந்தையைச் சாமான்யமாக எண்ணலாமோ? நாம்பெறும் குழந்தையினும் இதுவே சிறப்புடையது' என்று கூறி மகிழ்ந்தார்.

பிறகு, சிவகலையம்மையார் தம் கையிலிருந்த குழந்தையைப் பட்டினத்தாரிடம் கொடுக்க அவர் அக்குழந்தையை ஆனந்தத்துடன் பெற்று அதன் பேரழகைக் கண்டு களித்துக்கொண்டிருந்தார். பின்னர், அவர் அக்குழந்தையைத் தமது மனைவி யார்பால் கொடுத்துவிட்டுச் சிவசருமருக்கும், அவர் மனைவியாருக்கும் வேண்டிய உபசாரங்களைச செய்தார்; அவர்களுக்கு வேண்டிய ஆபரணம உடை முதலியவைகளை அளித்தார்: பின்னா அவருக்கும அவருடைய மனைவியாருக்கும விமரிசையாக விருந்து நடத்தினார். எல்லோரும உண்டுமகிழ்ந்து உல்லாசமாகப பேசிக்கொண் டிருந்தனர். இச்செய்தியை யறிந்த பட்டினததுப் பிள்ளையாரின் உறவினர்கள் தெய்வக்குழநதையைப் பார்ப்பதற்காக அவருடைய மாளிகையில் வநது குவிந்தனர்.

இத்தருணத்தில் பட்டினததுப் பிள்ளையாருக்கும, சிவசருமருக்கும் மட்டும் கேட்கும்படி, ‘ திருவெண் காடா, சிவசரும, நான் உங்களுக்கு இட்ட கட்டளையைச் சீக்கிரம் நிறைவேற்றுங்கள் ’ என்றோா அசரீரி சொல்லிற்று.

அவ்வார்ததைதயைக் கேட்ட சிவசருமரும, பட்டி னத்துப் பிள்ளையாரும் தெய்வத திருவருளுக்கு வியந்து சிவபெருமானைப் பலவாறு துதித்தனர்.

பின்னர்ப் பட்டினத்தாா புதியதொரு தராசு கொண்டுவரச்செய்து அத்தராசின் ஒருபுறம தெய்வக் குழந்தையைக் கிடத்தி மற்றொருபுறம பொன்னை

வாரிச்சொரிந்தார். எவ்வளவு பொன்னை வாரிவைத்தும் குழந்தையிருந்த தட்டு மேலெழும்பவில்லை. அதைக் கண்ட அனைவரும், 'இது தெய்வக் குழந்தையே, அதிற் சந்தேகமில்லை' என்று கூறினர்.

அதுபோழ்து சிவசருமர் சிவபெருமானை மனத்தில் தியானித்து, 'ஐயனே! என்னைப் பொன்னாசை பிடித்த பேயனென்றோ எண்ணிக்கொண்டீர்? இப்படியும் என்னைச் சோதிக்கலாமோ? இப்பொழுது இத்தராசிலுள்ள பொன்னே வெகுகாலம் வரையில் அடியவர்களைப் பூசிப்பதற்குப் போதுமானது. ஆகையால், தராசின் தட்டுகளிரண்டையும் சமமாக நிற்கச்செய்யவேண்டும்' என்று பிரார்த்தித்தார். அவ்வளவிலே தராசின் தட்டுகளிரண்டும் சமநிலைக்கு வந்தன. அதைக்கண்ட அனைவரும் சந்தோஷித்தனர். சிவசருமர், 'இப்பொன்னால் எனக்கு நன்மையுண்டாகுமோ? பொருள் கிடைத்ததனால் மதிமயங்கித் தீமை செய்வேனோ!' என்றெண்ணினார். அப்பொழுது, 'சிவசருமரே! இப்பொன்னை உம்மிடம் கொடுத்து உம்மை உலக மாய்கையில் சிக்கச்செய்ய வேண்டும் என்பது எமது கருத்தன்று. திருவெண் காடரின் செல்வமனைத்தும் நல்லவழியில் சேர்க்கப் பட்டவை. அவற்றைப் பெறுவதற்கு நீர் ஒருவரே உரியவராவீர். ஆதலால் நீர் அதைக்கொண்டு சென்று அடியவர்களை உபசரித்துக் கொண்டிரும். இன்று முதல் பதினாறாண்டு கழிந்தபின்னர் யாம் உம்மை உமது குடும்பத்தோடு ஆட்கொண்டருளுவோம்' என்று சிவபெருமான் அசரீரியாகக் கூறினார்.

அதைக்கேட்ட சிவசருமர் ஓசைவந்த திக்கை நோக்கிப் பன்முறைவணங்கிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்.

பிறகு, பட்டினத்துப் பிள்ளையார் சிவசருமருக்குக் கொடுத்தபொன்னையெல்லாம் தமதுஆட்கள்மூலமாகத் திருவிடைமருதூரிலுள்ள சிவசருமரின் மாளிகைக்கு முன்னதாக அனுப்பிவைத்தார். அன்றே சுபதினமா யிருந்தபடியால் பட்டினத்தார் தாம பெற்ற தெய்வக் குழந்தைக்குப் பெயரிடவேண்டுமெனக் கருதிப் பெரியோர்களையும் வேதியர்களையும் மற்றுமுள்ள வர்களையும் வரவழைத்தார். பிறகு செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் செய்து எப்பெயரிடுவ தென்று எல்லோரும சிந்தித்தனர். அப்பொழுது கடவுளருளால் எல்லோர மனத்திலும் 'மருதவாணன்' என்கிற பெயரே முன்வந்து நின்றது. அதனால், அப்பெயரையே அக்குழந்தைக் கிட்டு மகிழ்ந்தனர். எல்லோருக்கும் பட்டினத்தார் நல் விருந்தளித்து உபசரித்தார். பிறகு, சிவசருமரைத் தவிர அங்கு வந்திருந்தார் அனைவரும் பட்டினத்தாரிடம் உத்தரவு பெற்றுத் தத்தம் இருப்பிடத்தை நோக்கிச்சென்றனர்.

மறுநாள் சிவசருமரும், அவரதும் மனைவியாரும் அனைவரிடத்திலும் உத்தரவு பெற்றுக்கொண்டு திருவிடைமருதூரை நோக்கிச் சென்றனர். இரதமேறிச் சென்ற அவர்களோடு சிறிது தூரஞ் சென்று பட்டினத்தார் அவர்களை வழி கூட்டி யனுப்பிவிட்டுத் தாம் தமது மாளிகைக்கு வந்து சேர்ந்தார்.

தேரிற் சென்ற சிவசருமரும், அவரது மனைவியாரும் தெய்வக் குழந்தையைப் பிரிந்தமையினால் வருந்தித் தேரின் மீதே மூர்ச்சையாயினர். களை தெளிந்த போது அவர்கள் அத் தெய்வக குழந்தை தேரின் மீது விளையாடிக கொண்டிருக்கக கண்டு மனந்தேறி சந்தோஷித்தனர். தேர் சென்ற வேகததால் மீண்டும் உறக்கம் வரவே உறங்கினர். கண் விழித்துப பார்த்த பொழுது தேர் திருவிடை மருதூரில் தமது வீட்டு வாயலில் நிற்கக கண்டனா. தெய்வக குழகதையோ மாயமாய் மறைநது விட்டது. உண்மையை அறியாத சிவசருமர் தமது மனைவியைப் பார்த்து, 'பெண்ணே, நாம் தேரிற் கண்ட தெய்வக் குழந்தை தவறிக் கீழே விழுநது விட்டதோ அல்லது நாம் கண்டது கனவோ? ஒன்றுந் தெரிய வில்லையே. நான் எதற்கும காவரிப்பூம பட்டினஞ் சென்று அத தெய்வக் குழந்தை எவ்வாறிருககிற தென்று கண்டு வருகிறேன். செல்வம் நிரமப இருக்கின்றமையால் நீ வழககமபோல் முறை தவறாமல் அடியவர்களுக்கு அன்னம் படைத்துக் கொண்டிரு' என்றார்.

சுசீலையம்மையார் தமது கணவரை எப்படிப் பிரிவது என்று எண்ணி வருந்தினர்.

அப்போது காவிரிப்பூம பட்டினத்திலிருநது சிவபெருமான் மாய்கையினால் பொதிவண்டி யொன்று திருவிடைமருதூருக்கு வந்தது. சாதாரண மனிதனைப் போல் அவ்வண்டியில் வந்த சிவகணநாதர் ஒருவர் சிவசருமர் மாளிகைக்குட் சென்று பட்டினத்துப் பிள்ளையார் கொடுததாக ஓர் ஓலைச்சுருளையும்,

கவுளிகை யொன்றையும் சிவசருமரிடங் கொடுத்து விட்டுச் சரேரென்று வெளியிற் போந்து தம் இச்சை வழியே சென்றனர்.

கணநாதர் தம்மிடங் கொடுத்த ஓலைச் சுருளைச் சிவசருமர் பிரித்துப்பார்த்தார். அதில் குழந்தை சுகமாகத் தமது மாளிகையில் இருப்பதாகவும், அதன் உருவத்தைப் படமாக எழுதி யனுப்பி யிருக்கின்ற தாகவும் பட்டினத்துப் பிள்ளையாரால் வரையப் பட்டிருந்தது. உடனே சிவசருமர் கவளிகையைப் பிரித்துப் பார்ததார். அதற்குள் இருந்த படத்தில் தெய்வக குழந்தையின் திருவுருவப்படம இருந்தது. படமா அது! உண்மையில் ஒரு குழநதை அதில் உட்கார்ந்து கொண்டிருப்பது போலிருந்தது. சிவசருமர் ஓலையில் வரையப்பட்டிருந்த விஷயத்தைத் தமது மனைவிக்குக கூறித் தெய்வக் குழந்தையின் திருவுருவம் வரைந்த படத்தையுங் காட்டினர். சுசீலையம்மையார் அப்படத்திலுள்ள குழந்தையின் உருவத்தைக கண்டு களித்தார்.

# பதினோராவது அத்தியாயம்

## மருதவாணரின் கல்வித்திறம்

காவிரிப்பூம் பட்டினத்தில் பட்டினத்துப் பிள்ளையாரின் திருமாளிகையில் தெய்வக் குழந்தையாகிய மருதவாணர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவாராயினர். அவர் விளையாட்டுப் பருவதனை யடைந்த பின் தம்முடைய தோழர்களோடு சேர்ந்துகொண்டு அவர்கள் களிக்கும் வண்ணம் பல அற்புத காரியங்களைச் செய்தார். ஒவ்வொருவரிடமும அவருக்கு அதிக அன்பு உண்டு. அவர் துன்பப்படும் வாலிபனுக்குத் தேறுதல் கூறுவார்; நோயுற்றவனிடம் அன்பாயிருப்பார். இவ்வாறு அவர் எல்லோருககும் நல்லவராக நடந்து வந்தார்.

ஒரு நாள் அவர் நண்பர்களோடு கடற் கரையில் விளையாடிக் கொண்டிருக்கையில் சிறுவர்கள் எல்லோரும் ஓர் படகிலேறிக்கொண்டு சிறிது தூரம் செல்லலாமென்றனர். அவ்வாறே மருதவாணர் உட்பட எல்லாச் சிறுவர்களும் ஒரு படகிலேறிக் கடலிற் சிறிது தூரம் சென்றனர். அப்பொழுது தண்ணீரைக் கிழித்துக்கொண்டு ஓர் மீன் வேகமாக அவர்களை நோக்கி வந்தது. அது கண்ட சிறுவர்கள், 'ஐயோ! அதோ யானையைப்போல் வரும் மீனைப்பார்த்தால் பயமாயிருக்கிறதே. அது

நம்மை விழுங்கவே வருகிறது. இதற்கென்ன செய்வோம்?" என்று ஏங்கிப் பரிதவித்தனர். இவ்வாறு இவர்கள் பயந்துகொண்டிருக்கும் பொழுதே அம் மீன் அவர்கள் இருந்த தோணியைக் குறுகி தோணியின் ஓரத்திலிருந்த ஒரு சிறுவனைப்பற்றி விழுங்கிவிட்டது. அதைக் கண்ட மற்றப்பிள்ளைகள் எல்லோரும், 'ஐயோ' இனி என்ன செய்வோம்? நாம மறுபடியும நமது தாய்தந்தையரைப் பார்ப் போமா? இக்கதிக்கு ஆளாகவோ இங்கு வந்தோம்? மருதவாணன் இப்பொழுதுதான் ஐந்துவயது நிரம்பப் பெற்றான். அவனை நாம் விளையாட்டாக நம்முடன் அழைத்துவந்தோம. அவனைப் பிரிந்து பட்டினததார் உயிர் தரிப்பாரா? ஐயோ! நம்மையும் இந்தமீன் விழுங்கவருகிறதே' என்று கூறிப் பயந்து மூர்ச்சித்துப் படகில் விழுந்துவிட்டனர். இக்காட்சிகளை யெல்லாம புன்சிரிப்புடன் கவனித்துக் கொண்டிருந்த தெய்வக் குழந்தையாகிய மருதவாணர் விரைந்துசென்று தமது காலால் வாயைத்திறந்துகொண்டு படகை நோக்கிய மீனின் தலையில் உதைத்தார். அவ்வுதையின்வேகத்தைத் தாங்கமுடியாமல் அம்மீன் அப்பொழுதே இறந்தது. அப்பொழுது அதன் தேகத்தினின்றும் ஒருவன் தோன்றி மருதவாணரைப்பார்த்து, "தேவ தேவனே! திருவிடை மருதூரா! இச்சிறுவர்கள் உன்னை இன்னு ரென்று அறியாவிடினும் நான் அறிவேன். நான் கந்தருவன், என்பெயர் மணிக்கிரீவன் என்பது. நான் ஒருநாள் உல்லாசமாக உலாவிக் கொண்டிருக்கையில் சித்துமுனிவர் என்னும் மகரிஷியை ஒரு காட்டகத்தே

கண்டு என் அழகின் பெருமையைப் புகழ்ந்து கூறி அவர் உருவத்தின் அமைப்பைப்பற்றி இகழ்ந்து பேசினேன். உடனே அவர்கோபித்து மீனுகும்படி எனக்குச் சாபம்கொடுத்தார். அப்பொழுது நான் அவரைப்பார்த்து, "சுவாமி, அடியேன் அறியாமற் செய்தபிழையைப பொறுத்தல்வேண்டும். நான் தங்கள் சாபததை ஏற்றுக்கொள்ளத தயாராயிருக் கிறேன். ஆனால் என்னுடைய முடிவு என்ன ? தயை செய்து எளியேன்மீது கிருபை கொண்டருளல் வேண்டும" என்று வேண்டினேன் அபபொழுது அவர் என்னைப்பாாதது, " திருவிடைமருதூரில் திருக கோயில் கொண்டெழுநதருளி யிருககும சிவபெரு மான் ஒரு காரணம பற்றிக் காவிரிபபூம படடினத்தில் குழநதை யுருக்கொண்டு வளர்ந்துவருவார். அப்பொழுது அவர் பாதம்பட்[illegible] பழைய உருவைப் பெறுவாய்" என்றுகூறினர். பிறகு அவர் சாபத்தைப் பெற்று நான் இதுகாறும் அடைந்த துன்பத்திற் கோர் அளவேயில்லை. இன்றோடு எல்லாதுன்பங்களும் ஒழிந்தன ' என்று கூறித்துதித்[illegible].

பிறகு, மருதவாணர் அவன்[illegible] இரக்கங்கொண்டு அவனை அவனுடைய பழைய நிலைமைக்குப் போகுமாறு [illegible]னுப்பிவிட்டுப் படகில் மூர்ச்சை யடைந்[illegible] கி[illegible]கும் சிறுவர்களை உற்று நோக்கினர். அவ்வள[illegible]விலே அச்சிறுவர்களெல்லாரும் மூர்ச்சை தெளிந்து முன்போல் எழுந்தனர். சற்றுநேரத்திற்குள் அவர்கள் நடந்த விஷயங்களை யெல்லாம் தெரிந்து சிறுவராகிய மருதவாணரைத் தெய்வமெனத்தெளிந்து

அவரைப்பார்த்து, 'நம்முடன் வந்த ஓர் சிறுவனை அம்மீன் விழுங்கியதே. அதற்கென்ன செய்வோம்? அவன் அடைந்த கதியைக் கேட்டால் அவனுடைய தாய் தந்தையர்கள் எப்பாடு படுவார்களோ' என்று கூறினர்.

அப்பொழுது மருதவாணர் இறந்த மீனின் தேகத்தைச் சுட்டிக்காட்டி, 'அதோ பாருங்கள்' என்று சொன்னார்.

உடனே எல்லாச் சிறுவர்களும் இறந்த மீனின் தேகத்தைக் கவனித்தனர். அப்பொழுது அம்மீன் வயிற்றுக்குட் சென்ற சிறுவன் அதன் வயிற்றில் இருந்து விலையுயர்ந்த மணிகளை வாரிக்கொண்டு வருவதைக்கண்டு மகிழ்ந்தனர். பின்னர், அவர்கள் மருதவாணரைப் பார்த்து, 'நாங்களும் அவனைப் போலவே விலையுயர்ந்த மணிகளை அடைய விரும்புகிறோம்' என்றனர். அவர்களுக்கும் அவ்வாறே உயர்ந்த இரத்தினங்கள் கிடைக்கும்படி மருதவாணர் கிருபை செய்தார். சிறுவர்கள் தங்களுக்குக் கிடைத்த இரத்தினங்களில் உயர்ந்தவற்றை மருதவாணருக்குக் காணிக்கையாகக் கொடுத்தனர். பிறகு, அவர்கள் படகைத் திருப்பிச்சென்று கரையை யடைந்தனர். அங்கு நெடுநேரமாக இவர்களைக் காணாது வாடி வருந்திய இவர்களின் தாய் தந்தையர் இவர்கள் சுகமே கரை சேர்ந்ததிலும், கடலில் நடந்த விஷயத்தைக் கேட்டதிலும் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தனர்.

பின்னர்ப் பட்டினத்துப்பிள்ளையார் மருதவாணருக்கு

வித்தியாப்பியாசம் செய்து வைக்கவேண்டுமெனக் கருதி ஆசிரிய இலக்கணங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற ஒருவரை வரவழைத்து அவருக்கு வேண்டுவன கொடுத்து மகிழ்வித்து ஒரு நன்னாள் பார்த்து அந்நாளில் மருதவாணரை அவரிடம் கல்வி பயில விடுத்தார். தெய்வக்குழந்தையாகிய மருத வாணருக்கு ஆசிரியரும வேண்டுமோ? மருத வாணர் (கனலைக்கண்ட கருப்பூரம்போல) ஆசிரியா கூறிய விஷயங்களை வெகு எளிதில் கிரகித்துக் கல்விக் கடலாய் விளங்கினார். உலகத்தாருக்குத் தாம் ஆசிரியரிடமிருந்தே பல விஷயங்களைத் தெரிந்து கொண்டதைப்போல நடித்துக் காட்டினாரேயன்றி உண்மையில் அவருக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அவர் ஒருவரிடத்திலும் ஒன்றுங் கேட்டுக்கொள்ள வேண்டிய அவசியமில்லையன்றோ? அத்தெய்வக் குழந்தையாகிய மருதவாணர், தாம் எல்லா விஷயங் களிலும் தேர்ந்திருப்பதாக மற்றவர்கள் நினைக்குமாறு நடந்துகொண்டார்.

அக்காலையில் அந்நிய தேசத்தான் ஒருவன் பருமணி முத்தொன்றை விற்பதற்காகக் காவிரிப்பூம் பட்டினத்துள்ள வைசியர்களிடங் கொண்டுவந்து காட்டினான். அவர்கள் அம்முத்தின் விலையை மதிக்கக்கூடாதவர்களாய் அவ்விஷயத்தில் அநுபவ முள்ள பட்டினத்துப்பிள்ளையார்பால் அம்முத்தைக் கொண்டு சென்றனர். அவர் அம்முத்தை வாங்கிப் பரிசோதித்துவிட்டு மற்ற வைசியர்களை நோக்கி, 'இம்முத்து மிகவும் சிறந்தது. இதற்கு எவ்வளவு

பொருள் வேண்டுமானாலும் கொடுக்கலாம். இதற்குப பதினுயிரம் பொன் கொடுத்தாலும் தகும்' என்ருர். அவர் அபிப்பிராயத்தைக் கேட்ட மற்ற வைசியர்கள் அதுவே முடிவென்று சம்மதிததனர். அதை விற்பதற்குக் கொண்டுவந்தவன் சந்தோஷிததான். அப்பொழுது பள்ளிக்கூடத்திற்குச சென்றிருநத மருதவாணர் அங்கு வநது சோந்தாா.

அவர் பட்டினததுப் பிள்ளையார் கையி லிருநத முத்தைக்கண்டு அதை வாங்கிக் கூர்ந்து கவனிததுவிட்டு அங்கிருநதாரை நோககி, 'அன்புடையீர்! இம்முத்து யாருடையது? எக்காரணம் பற்றி இஃது இங்கு வநதது? இதை வாங்கியவாகள் யார்?' என்று பல கேள்விகளைக் கேட்டார்.

அப்பொழுது பட்டினத்தார் அவரைப்பார்தது, 'குழந்தாய்! இதைபபற்றி யெல்லாம உனககென்ன கவலை? பள்ளியிலிருநது பசியுடன் வந்த நீ போஜனமுண்பாயாக' என்றனர்.

உடனே தெய்வச்சிறுவராகிய மருதவாணா அவரைப பார்த்து, 'நான் எனது ஆசிரியர் பால் நவமணிகளின் குண விசேஷங்களைப்பற்றிப் படித்திருக்கிறேன். நான் முத்தின் சமபந்தமாகத் தெரிநதுகொண்ட விஷயம் ஒன்று இம்முத்தில் காணபபடுகிறது' என்று கூறினர்.

உடனே மற்ற வைசியர்கள் அவரைப்பாாத்து, ஐயா மருதவாணரே! இம்முதததை இதோ இருககும் இவ்வணிகா விற்பதற்காக இங்குக்கொண்டு வந்தாா. உமது தந்தையார் இதை மதித்து இதற்குப்

பதினுயிரம் பொன் தாலாம என்றனர். இதை எங்களில் யாராவது ஒருவர் வாங்கிக் கொள்ளலாம் என்று கருதுகின்ருேம்' என்று கூறினர்.

கூறியதும் மருதவாணர் எல்லோரையும ஒரு முறை உற்றுப்பார்த்துவிட்டு, 'இம்முத்தைக் கொண்டு வந்தார்க்கு வேண்டுமானல் யானே பதினுயிரம பொன் தருகிறேன். இமமுத்தை நீங்கள வாங்க வேண்டாம. இதைக கண்ணுல பார்ப்பதும பாவமாகும. இதை வாங்குவோர் நாளடைவில் தரிதரிராவர். இம முத்தில் நீர் தங்கி யிருககின்றது. இஃது ஆண் முத்து என்று நீங்கள் நினைக்க வேண்டாம. இதனைத் தொட்டாலும் நோய் முதலியன வரும. நீர் தங்கி யுள்ள முத்தின் குணம எததகையதென்று உங்களுக்குத் தெரியுமல்லவா? இஃதோ இதில நீா தங்கி யிருப்பதைக காட்டுகிறேன் பாருங்கள்' என்று சொல்லி முன் பின் ஆலோசியாமல் அம முத்தைச் சட்டென்று உடைத்தார். உடனே அதனின்று அவா கூறியதைப் போல நீர் வெளி வந்தது. அதைக் கண்ட அனைவரும மருதவாணரின் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் வியநது அவரைப் புகழ்ந்தனர்.

தான் கொண்டு வந்த முத்து இவ்வாருயதைக் கண்ட அயலூர் வணிகன் மௌனமாக நின்ருன். உடனே மருதவாணர் அவனைப்பார்த்து, 'அன்பரே! நீர் சிறிதும் கவலைப் படவேண்டாம் நான் ஒரு கடிதம் கொடுக்கின்றேன். அதைக் கொண்டுபோய்க் கடார புரத்தில் வாழும் சிவபக்தியிற் சிறந்த

ஞானானந்தன் என்னும் பெயரினையுடைய நண்பனிடம கொடும். அவன் உமக்குப் பதினாயிரம் பொன் கொடுப்பான்' என்று கூறி ஒரு கடிதம் எழுதி அவனிடம் கொடுத்தார். அவனும் அக்கடிதத்தை எடுத்துச் சென்று ஞானானந்தனிடம் காட்டினான். ஞானானந்தன் ஆனந்தத்துடன் கடிதத்திற்குறித்திருந்த படி பதினாயிரம் பொன்னை அயலூர் வணிகனுக்குக் கொடுத்தனுப்பினான். இவற்றையெல்லாம் அறிந்த பட்டினத்தார் தமது குமாரரிடம அச்சமும், அன்பும உடையவரானார்.

---

# பதினேழாவது அத்தியாயம்

## மருதவாணர் வியாபாரம் செய்தல்

மருதவாணருக்கு வயது பதினாறாயிற்று. அதோடு அவர் கல்வி பயிலும் காரியமும் முடிவடைந்தது. பிறகு,

ஒரு தினம் மருதவாணர் பட்டினத்தாரைப் பார்த்து, 'ஐயா, கடலுக்கப்பால் செல்வம் செழித்த பல நாடுகள் இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். நான் கலமேறி அந்நாட்டிற்குச் சென்று அந்நாட்டாரோடு வியாபாரம் செய்து திரவியம் சேகரித்து வர விரும்புகிறேன். தாங்கள் இப்போது உத்தரவு கொடுப்பீர்களாயின் வியாபார நிமித்தமாகத் தீவாந்திரங்களுக்குச் செல்லவிருக்கும் இந்நகரத்துள்ள வணிகர்களோடு யானும் சென்று வருகிறேன்' என்று கூறினார்.

அவ்வார்த்தையைக் கேட்ட பட்டினத்தார் மனந் திடுக்கிட்டு அவரைப் பார்த்து, 'கண்மணி என்ன கூறினாய்? உனக்குப் பொருள் இல்லையென்றோ நீ தீவாந்திரத்திற்குப் பொருள் தேடப் போகவேண்டும் என்கிறாய்? நீ எவ்வளவு காலம் செலவு செய்யினும் வற்றாத செல்வம் நம்மிடத்தில் நிறைந்திருக்கிறதே. உன்னைப் பிரிந்து நான் உயிர் வாழ்வேனோ? நீ சுகமாக உண்டு உடுத்து வாழாமல் வெகுதூரம் பிரயாணம் செய்ய விரும்புவது தகுதியன்று. உன்

தாயாரும் உன்னை விட்டுப் பிரியச் சம்மதிக்க மாட்டாள்' என்று கூறினர்.

அப்போது மருதவாணர் அவரை நோக்கி, 'தந்தையே, நீங்கள் இவ்வாறு சொல்லலாமோ? நீங்களே இவ்வாறு சொன்னால் என் அன்னையார் என்ன சொல்வார்களென்பதைக் கேட்கவும் வேண்டுமோ? எவ்வளவு பொருள் இருந்த போதிலும் மேலும் மேலும் பொருளீட்ட வேண்டியதே வைசியர்களுடைய கடமையாகும். அன்றியும் உமது புதல்வனாகிய நான் உமது பெருமையை உலகத்தில் நிலைநாட்ட வேண்டாமா? அன்றியும் உலகானுபவம் பெறவேண்டுமானால் பலதேயங்களையும் சுற்றிப் பார்த்தல் அவசியமன்றோ? குலத் தொழிலைச் செய்யாதவன் எவ்வளவு சிறந்தவனாயினும் அறிவாளர்களால் பெருமையுடையவனாகக் கருதப்பட மாட்டானே. ஆகையால், தாங்கள் தயவு செய்து என் விருப்பத்திற்கு இணங்க வேண்டும்' என்று கூறினார்.

இனி என்னசொன்னாலும் மருதவாணர் கேட்க மாட்டார் என்பதை அறிந்த பட்டினத்தார் அவரைப் பார்த்து, 'அப்படியானால் யானும் உன்னுடன் வருகிறேன்' என்றார்.

அதற்கு மருதவாணர் அஞ்சி, 'ஒரு போதுங் கூடாது. நம்மிருவரையும் பிரிந்து என் அன்னையார் உயிருடன் இருக்கமாட்டார்கள். அன்றியும் நீங்கள் வருவதால் எனக்கு வியாபாரத்தின் பீறு பொறுப்பு உண்டாகாமல் ஊக்கங்குறையும்.

ஆகையால், யான் ஒருவனே மரக்கலமேறி மற்ற வணிகர்களோடு அயல் நாடு சென்று பொருளீட்டி வருகிறேன்' என்றார்.

அவர் விருப்பத்தை மறுப்பதற்கஞ்சிய பட்டினத்தார் பிரயாணத்திற்கு, வேண்டிய கப்பலையும் வேண்டிய பல பொருள்களையும் சேகரித்தார். கப்பலைச் செலுத்துவதற்குத் திறமைவாய்ந்த மீகாமன் ஒருவனை நியமித்தார். மருதவாணர் ஓர் நன்னாளில் அனைவரிடத்தும் உத்தரவு பெற்றுக்கொண்டு ஏனைய வணிகர்களோடு கடற்கரையை யடைந்தனர். பிறகு அனைவரும் அவரவர்களுடைய கப்பலிலேறிப் பாய் விரித்தனர். கப்பல்கள் கடலைக் கிழித்துக்கொண்டு சென்றன.

சில நாட்களாயின. வணிகரனைவரும் கப்பல்களோடு ஒரு தீவை அடைந்து வியாபாரம் செய்து பின்னர் வேறு தீவை நோக்கிச் சென்றனர். மருதவாணர் மட்டும் அத்தீவிலேயே தங்கித் தாம் கொண்டு சென்ற பொருள்களை விற்று அதனால் வந்த திரவியத்தைக்கொண்டு சத்திரம், கோயில், குளம், நந்தனவனம் முதலியனவமைத்து ஏழைகளுக்குத் தானதருமம் செய்துகொண்டிருந்தனர். பல மாதங்களாயின.

வேறு தீவுகளுக்குச் சென்றிருந்த வணிகர்கள் அத்தீவுகளில் நன்றாக வியாபாரம் செய்து ஏராளமான பொருள்களைத் திரட்டிக்கொண்டு கடைசியாக மருதவாணர் இருந்த தீவை யடைந்து அவரைக்கண்டு அவருடைய க்ஷேமலாபங்களை விசாரித்தனர்

அப்பொழுது மருதவாணர் அவர்களைப்பார்த்து, ' யான் வியாபாரம் செய்து பெற்ற பொருள் ஒரு சிறிதும் என் கையிலில்லை. இதோ கிடக்கும் வரட்டிகளும், அவல் கடலையுமே என்னுடையனவாகும் ' என்றார்

அவர் கூறிய அவல் கடலையையும், வரட்டிகளையுங்கண்ட வணிகர்கள் அவரைப் பார்த்து, ' இதுவோ வியாபாரம்? நீர் கொண்டுவந்த பண்டங்களை விற்று அதனால் வந்த பொருள்களை என்ன செய்தீர்? இந்த எருமுட்டைகளையும், ஏராளமான அவல் கடலையையும் எதற்காகச் சேமித்து வைத்திருக்கின்றீர்? உமது தந்தையாரோ செல்வத்திற் சிறந்து எங்களுக்குத் தலைவராகவும் இருக்கின்றார். அவர் புத்திரராகிய நீரும் எங்களுக்குத் தலைவராவீர். நீர் இவ்வாறு செய்யலாமா? உமது செயலை உமது தந்தையார் அறிவாரானால் அவர் என்னதான் நினைக்க மாட்டார்?' என்று பலவாறு கூறி அவர் செய்கைக்கு இரங்கினர்

அதுகண்ட மருதவாணர் அவர்களை நோக்கி, ' நீங்கள் எனக்காக ஏன் இவ்வாறு வருந்துகின்றீர்கள்? என் காரியம் என்னுடையதாகும். நீங்கள் உங்களுடைய காரியங்களைக் கவனியுங்கள்' என்றார்

அதனைக் கேட்ட மற்றவர்கள், ' இஃதென்ன அதிசயம், மருதவாணரின் குணம் மாறுபட்டு விட்டதே! நாம் இவரைத் தனித்து விட்டுச் சென்றது நம்மீது தவறாகும். இனி இவரை விட்டு நாம் அகல

வொண்ணாது' என்று தமமுள் தீர்மானித்து அவ்விடத்திற்றனே அவரோடு தங்கியிருநது சின்னாட்களானதும மருதவாணர் உட்பட எல்லோரும் தங்கள் தங்கள் பொருள்களுடன் தங்களுடைய மரககலங்களிலேறிக் காவிரிபபூம் பட்டினம் நோககிச் செல்வாராயினா.

அப்பொழுது மருதவாணா ஒரு விளையாடல் புரியக் கருதினர். அவர் முயற்சியனுல் பெருமழையுங் காற்றுந்தோன்றி கலங்களைப் போகுமவழியினின்றும் வேறொரு புறமாகத் தள்ளிச் சென்றன. கப்பல்கள் திசை தப்பிப போகவே அதிலிருந்தவர்களால் குறிதத காலததில் காவிரிப்பூம பட்டினம போய்ச் சேரமுடியவில்லை. நாள பல ஆகவே அவர்கள் வைத்திருநத உணவுப் பொருள்களெல்லாம் செலவழிந்து விட்டன. அவர்கள் குளிரால் மெலிநது பசியால் வாடினர். குளிரையும, பசியையும் போக்குவதற்கு வேண்டிய உபகரணங்கள் ஒன்றும் இல்லாமையால் கப்பலில் இருந்தவர்கள் வருந்தினர்.

பிறகு அவர்கள் மருதவாணரைப் பார்த்து, 'மருதவாணரே! நாங்கள் எங்களுடன் கொண்டு வந்த உணவுப் பொருள்களும், விறகு முதலியனவும் செலவழிந்துவிட்டன. மழையோஇன்னும்விட்டபாடில்லை. கலஙகளெலலாம எததிசையிற் செனறுகொண்டிருகக இன்றனவோ அதுவும் தெரியவில்லை. நீங்கள் உங்களிடமுள்ள அவல் கட்டையைக் கொடுத்து எங்கள் பசியைத் தீர்த்துக் குளிர் காய்வதற்கு வரட்டியும் கொடுப்பீரானால் பெரும் புண்ணியமாகும்' என்றனர்.

உடனே மருதவாணர் அவர்களைப்பார்த்து, 'தோழர்களே! அவல் கடலையை உங்களுக்கு நான் இலவசமாகக் கொடுக்கிறேன். ஆனால் நான் கொடுக்கும் வரட்டியை மட்டும் நீங்கள் நிறுத்து வாங்கிக் கொண்டு அந்நிறையளவு வரட்டியை ஊரைச் சேர்ந்தவுடன் எனக்குக் கொடுத்துவிட வேண்டும்' என்று கூறினார். அதற்கு அவர்கள் சம்மதித்தனர்.

உடனே மருதவாணர் ஒவ்வொருவருக்கும் வேண்டிய அளவு வரட்டியை நிறுத்துக்கொடுத்து, அவல் கடலையும் கொடுத்து அவரவர்கள் வாங்கிய அளவு வரட்டிக்கு அவரவர்களிடமிருந்து பத்திரமும் எழுதி வாங்கிக்கொண்டார். பின்னர்க் காற்றும் மழையும் அடியோடு நின்றுவிட்டன. மீகாமர்கள் திசை தெரிந்து போவதற்கு ஏற்றவாறு ஆகாயம் நிர்மலமாயிற்று. ஆகவே பின்னும் சின்னாட்களில் அவர்கள் எல்லோரும் காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்தனர். பல நாட்கள் வரையில் அவர்களைப் பிரிந்திருந்த அவருடைய தாய் தந்தையர், உறவினர் முதலியோர் அவர்கள் சுகமே வந்து சேர்ந்தமைக்காக மகிழ்ந்து சிவாலயங்களில் திருவிழாக்கொண்டாடினர்.

# பதினெட்டாவது அத்தியாயம்

## பெருந்துறவு

மருதவாணரும், அவருடைய தோழர்களும் காவிரிப்பூம் பட்டினத்துத் துறைமுகத்தை அடைந்தனர். பட்டினத்துப் பிள்ளையார் மருதவாணனைப் பார்க்கு முன் ஒருவன் பட்டினத்துப் பிள்ளையாரிடம் சென்று, 'ஐயா! உங்கள் குமாரர் மருதவாணர் சில நாளாக மனம் மாறுபட்டிருக்கின்றார். அவருக்குப் பைத்தியமோ என்று நாங்கள் சந்தேகப்படுகிறோம். இதை முன்னதாக உங்களிடம் கூறிப்போக வந்தேன்' என்று கூறிச்சென்றான்.

அதைக்கேட்ட பட்டினத்தார், 'எது எவ்வாறாயினும் ஆகட்டும். மகன் வந்து சேர்ந்தே போதும் அவனுக்குப் பைத்தியம் ஏற்பட்டிருந்தாலும் பின்னர் அதற்கு வைத்தியம் செய்து கொள்ளலாம்' என்று மனந்தேறி தம் மகனைச் சென்று கண்டு கட்டித்தழுவி ஆனந்தப்பட்டார். பிறகு பட்டினத்தார் தமது மகனுடைய கப்பலில் அவல் கடலையும் வரட்டியுமே இருக்கக் கண்டு அயர்ந்துபோனார். தாம் கேள்விப்பட்டதுபோலவே தம் மகனுக்குப் புத்தி மாறாட்டம் உண்டாயிருக்க வேண்டுமென்று நிதானித்தார். அதற்கேற்றாற் போல் மருதவாணர் தமமுடைய முகம் சிறிது விகாரத்துடன் தோன்றும்படி செய்துகொண்டார்.

உடனே பட்டினத்தார் அவரை மெதுவாகக் கரைக்கு அழைத்துச்சென்று நமது மாளிகையின் ஓர்புறம் இருந்த மண்டபத்தில் வைத்துக் கதவைச் சாற்றிக் காவல் வைத்து மறுபடியும் கப்பலுக்குச் சென்றார். சென்றவர் அக்கப்பலில் இருந்த அவல் கட்டைகளையும், வரட்டிகளையும் கணக்குப்பெட்டி முதலியவைகளையும் எடுத்துக்கொண்டு கரை சேர்ந்து, மருதவாணரோடு மரக்கலமேறிச் சென்ற தோழரோடிருந்து எல்லாப் பொருள்களையும் பரிசோதிக்கலாயினர். அப்பொழுது பணப் பெட்டிக்குள் ஒரு வரட்டியும், ஓலையும் இருக்கக்கண்டு அதிசயித்து, 'வரட்டி இப் பெட்டிக்குள் வரவேண்டிய காரணமென்ன? இதில் ஏதோ புதுமை யிருக்கவேண்டும்' எனவெண்ணி பட்டினத்தார் அவ்வரட்டியை உடைத்துப் பார்த்தார். அதனுள் சூரியனுடைய ஒளியை மழுங்கச்செய்யும் மாணிக்கம் ஒன்றிருக்கக் கண்டார். கப்பலிலிருந்து கொண்டுவந்த மற்ற வரட்டிகளையும் பரிசோதித்துப் பார்த்தார். அவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் மாணிக்கம் இருந்தது. அவல் மூட்டைகளை அவிழ்த்துப் பரிசோதனை செய்தார். அவைகளில் பொன் மணல் கலந்திருந்தது. இவைகளை யெல்லாங் கண்ட பட்டினத்தார் அதிசயித்துப் பின்னர்ப் பெட்டியில இருந்த ஓலையைப் பிரித்துப் பார்த்தார். அது மருதவாணரோடு வியாபார நிமித்தம் சென்றிருந்த தோழர்கள் வரட்டியின் பொருட்டு எழுதிக்கொடுத்த கடன் சீட்டாயிருக்கக் கண்டார். அச்சீட்டைப்பற்றிப் பட்டினத்தார்

அத்தோழர்களை விசாரித்தார். அவர்கள் தாங்கள் அச்சீட்டெழுதிக் கொடுத்தது உண்மைதான் என்று ஒப்புக்கொண்டனர். பட்டினத்தார் தமது மகனின் திறமைக்கு வியந்து அடங்கா மகிழ்ச்சி கொண்டார். மற்ற வணிகர்களோ, 'அந்தோ நாம அறியாமல் மருதவாணருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாகச் சொன்னோமே. இப்பொழுது பட்டினத்தார் நம்மைத் தம் மனத்தில் கேவலமாகவன்றோ நினைப்பார்! இப்பொழுதன்றோ எல்லாம் விளக்கமாகத் தெரிகிறது! மருதவாணர் நம்மிடங் கொடுத்த வரட்டியைச் சாதாரண வரட்டியாக நினைத்து அடுப்பெரித்து ஒழித்தோமே. பட்டினத்தார், பத்திரப்படி நாம் பெற்றுக்கொண்ட வரட்டியைத் தருமாறு கேட்பா ரானால் நாம் என்ன செய்வது ?" என்று தங்களுக்குள் எண்ணமிடலாயினர்.

பட்டினத்தார் தம்மகனார் கொண்டு வந்த மாணிக்கக் குவியல்களைக் கண்டு அடங்கா மகிழ்ச்சி கொண்டு தமது மகனாரைக் கட்டித்தழுவி ஆனந்தப்படுவதற்காக அவரைக் காவல் வைத்திருந்த இடத்திற்குச் சென்றனர். வெளியில் காவலாளிகள் காவல் காத்துக் கொண்டிருந்தனர். பூட்டிய கதவு பூட்டியபடியே யிருந்தது. பட்டினத்துப் பிள்ளையார் கதவைத் திறந்து உட்சென்று பார்த்தனர். அங்கு மருத வாணரைக் காணோம். இடம் வெற்றிடமாயிருந்தது. காவலாளரைக் கேட்டார். அவர்கள், 'சுவாமி! யாங்கள் இவ்வறையைச் சுற்றிலும் மிகவுஞ் சாக்கிரதையாகத்தான் காவல் காத்துக்கொண்

டிருந்தோம். தங்கள் குமாரர் போனவழி அறியோம்' என்றனர்.

'அந்தோ! நான் என் செய்வேன்? ஆராயாமல் அவல மூட்டைகளையும், வரட்டிகளையுங் கண்டவுடன் என் அருமந்தக் குழந்தையைக் காவலில் வைத்தேனே! ஆ கெட்டேன்!" என்றெண்ணிப் பட்டினத்தார் தமது மாளிகைக்குட் சென்று மனைவியாரைப் பார்த்து, 'பெண்ணே! நமது மகன் மருதவாணன் இங்கு வந்தானோ?' என்று கேட்டார்.

'இப்பொழுதுதான் வந்து எனக்காக அவன் வாங்கி வந்த ஆடை முதலியவைகளை என்னிடங் கொடுத்து விட்டு உண்டு களித்து வெளியிற் சென்றான்' என்று அவ்வம்மையார் கூறினார்.

என்று பெருமிதமாக அவ்வம்மையார் கூறிய பின்னர் மருதவாணனைப் பட்டினத்தார் அந்நகரம் முற்றும் தேடிப்பார்த்தார். அவர் அகப்படவில்லை. சிவபெருமானே மருதவாணராக வந்தவரென்பது உண்மையன்றோ! மருதவாணர் தம்முடைய படத்தை வைத்துத் தினமும் பூசித்துக்கொண்டிருக்கும், திருவிடைமருதூரிலுள்ள சிவசருமருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் மோட்சமளித்துத் தாம் தம்முடைய மூலலிங்க மூர்த்தமாகிய மகாலிங்கத்துட் கலந்திருந்தனர்.

பட்டினத்தார் மகனைக் காணாமல் மனம் வருந்திக் கொண்டிருக்கையில் அவர் மனைவியார் அவரிடம் ஒரு சிறு பெட்டியைக் கொண்டு வந்து கொடுத்து, 'தங்கள் மகன் வெளியில் போகும்போது இதைத் தங்களிடம்

கொடுக்கும் படியாகச் சொல்லி என்னிடங் கொடுத்து விட்டுப் போனான்' என்று கூறினர்.

' உடனே பட்டினத்தார் அப்பெட்டியை வாங்கித் திறந்து பார்த்தார். அதற்குள் காதற்ற ஊசி யொன்றும் ஓர் ஓலைச்சுருளும் இருந்தன. அவைகளைக் கண்ட பட்டினத்தார் ஆச்சரியப்பட்டு ஓலைச்சுருளை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். அதில், 'காதற்ற ஊசியும் வாராது காணுங் கடை வழிக்கே' என்று எழுதப்பட்டிருந்தது. பட்டினத்தார் அநேக பிறவிகளில் புண்ணியஞ் செய்தவராதலாலும், பரிசுத்தமான மனமுடையவராகையாலும், அவ்வாக்கியத்தைக் கண்டவுடன் இருவினையொப்பு மலபரிபாகம் உண்டாகக் ஞான நதி யடைந்து புலன்களொடுங்கி நிற்ப, சிவானந்தம் பரந்த வெள்ளமாக எழுந்து வர அதனுள் மூழ்கிக் கவலையற்று,

'பட்டைக் கிழித்துப் பருவூசி
தன்னைப் பரிந்தெடுத்து
முட்டச் சுருட்டியென் மொய்குழ
லாள் கையில் முன்கொடுத்துக்
கட்டி யிருந்த கனமாயக்
காரிதன் மாயமெல்லாம்
விட்டுப் பிரிய வென் றேஇங்ங
னே சிவன் மீண்டதுவே

வாதுற்ற திண்புய ரண்ணு
மலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப் போதும் புகலுநெஞ்
சேயிந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென் தேடிப்
புதைத்த திரவியமென்
காதற்ற வூசியும் வாராது
காணுங் கடைவழிக்கே.

என்று கூறிச்சென்று தமது தாயாரைப்பார்த்து, 'அம்மணி, நீர் செய்த தவம் சிறந்தது. நீர் யாதொன்றுக்கும வருநதாதிரும். யான் இறைவன் ஆணைவழியில் நிற்பவனாயினேன்' என்று கூறினார்.

அவா கருத்தை அறிநது கொண்ட அவர் தாயார் அவரைபபார்த்து, 'மகனே! எனக்கு அந்திய காலம் சமீபித்தது. என் ஈமக் கடனை கழித்துச் செல்லலாகாதோ?' என்ன, யாவற்றையும், துறந்த பட்டினததடிகள் 'அவ்வாறேயாகுக' என்று கூறித் தம் எதிரில் நின்ற தமது ஆப்த நண்பரும், தமது தலைமைக் காரியஸ்தருமாகிய சேந்தனாரைப் பார்த்து, 'நீர் என் வீட்டில் உள்ள பொருள் களெல்லாம் உலகிலுள்ள எல்லோரும கொள்ளச் செய்வீர்' என்று சூறையிடக் கட்டளை யிட்டுத் தொடர்பு ஒன்றும் இல்லாதவராய் முற்றுந் துறந்து மாளிகையினின்றும் வெளிப்புறப் பட்டனர்.

அது கண்ட அவர் மனைவியார் ஓடிச்சென்று

அவர் பாதத்தில் வீழ்ந்து, 'சுவாமி! தேவரீரைப் பிரிந்து நான் உயிர் வாழேன். அடியாளும் உடன் வருகின்றேன். அழைத்துச் செல்லுக. உங்களை விடுத்து எனக்கு வேறு கதியில்லையே' என்று அழுது தொழுதும் வேண்டினார்.

உடனே பட்டினத்தடிகள் தமது மனைவியைப் பார்த்து, 'பெண்ணே! இனி என்னோடு வருவதால் உனக்கு யாதொரு பயனும் உண்டாகாது. நான் உனக்குக் கதியாக மாட்டேன். எல்லோருக்கும் கதியாகச் சிவபெருமான் ஒருவர் இருக்கின்றார். அவரே உனக்குக் கதியாவார். யான் இறைவன் திருவாணை வழி நிற்பவனானேன். இனி இவ்வுலகத்தில் யான் சிறிதும் ஈடுபட மாட்டேன். உன்னால் என்னைத் தொடர்ந்து வரமுடியாது ஆகையால், நான் சொல்வதைக் கேள். உண்மையில் உனக்கு என்னிடம் பிரியம் இருக்குமானால் இங்கிருந்து சிவனடியாரைப் பூசித்துக் கொண்டிரு' என்று கூறி அவரைப் பிரிந்து அப்புறம் சென்றனர். பிறகு அடிகள் அவ்வூர்ப்புறத்தே யிருந்த ஒரு பொது மண்டபத்தில் தங்கி,

நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்புபொம்மல்
லாட்டமென் றேயிரு பொல்லா வுடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமென் றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீ
ரோட்டமென் றேயிரு நெஞ்சேயு நக்குப தேசமிதே.

என்று இவ்வாறு பல பாடல்களைக் கூறி மௌனமுற்றிருந்தார்.

அவர் நிலையை யறிந்த அவ்வூரிலுள்ள அவருடைய சுற்றத்தாரும், மற்றவர்களும் அவரைக் கண்டு 'பெரியீர்! நீர் இவ்வாறு இக்கோலங் கொள்ளக் காரணமென்ன? உமக்கு என்ன குறை வந்ததென்று இப்பரதேசிக் கோலங்கொண்டீர்? இனி எங்களுக்குத் தலைவராயிருந்து கௌரவம் அளிப்பவர் எவர்? உங்களுக்கு வேண்டிய பொருளிருக்க, கற்பிற்சிறந்த மனைவி யிருக்க, மற்ற வாழ்வெல்லாம் இருக்க இக் கோலங்கொண்டு இவ்வாறு இருக்கலாமோ? இக் கோலத்தினால் நீங்கள் அடையப்போகும் பலன் என்ன?' என்று கேட்டனர்.

அவர், அவர்கள் கூறிய விஷயங்களுக்கெல்லாம் பதிலாக,

மனையாளு மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாயின்மட்டே
வினையான சுற்றம யானமட் டேவழிக் கேதுதுணை
தினையா மளவேனு மெள்ளவா கிலுமுன்பு செய்ததவந்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே

என்று கூறினர்.

அப்பொழுது அவர் நிலையை யறியாத ஊரார் அவரைப்பார்த்து, 'தேவரீர் இவ்வாறு கூறுதல் தகுமோ? உங்களைவிட்டுப் பிரிந்தால் எங்களுக்கு வாழ்வேது, கதியேது' என்றனர்.

அப்பொழுது பட்டினத்தடிகள் அவர்களைப்பார்த்து,

ஊரீர் நமக்கோ ருபதேசங் கேளு முடம்படங்கப்
போரீர் சமணர் கழுவேற்று நீற்றைப் புறந்திகிரீர்ணைதீந்
சாரீ ரினந்தலைச் சுற்றத்தை நீங்கிச் சகநகைக்க
வேரீர மக்கள் தாமே தருவ ரிணையடியே

என்று கூறி மௌனமுற்றார்.

இனி இவரைத தங்கள் வழிக்குத திருபப முடியா தென்பதை யறிந்த ஊரார வநத வழியே திரும்பிச் சென்றனர்.

---

# பத்தொன்பதாவது அத்தியாயம்

## துறவின் திறம்

பட்டினத்தடிகள் துறவுபூண்டு சென்றதையும், அவரது செல்வம் அவருடைய தலைமைக் காரியஸ்தராகிய சேந்தனாரால் ஊராருக்கு வாரிக் கொடுக்கப்படுவதையும் அறிந்த அவ்வூர் அரசன் விரைந்துசென்று மிகுந்துள்ள செல்வத்தை ஒருவரும் கொண்டுபோகாவண்ணம் தடுத்து அச் செல்வமனைத்திற்கும் பட்டினத்துப் பிள்ளையாரின் தமக்கையின் மைந்தனைத் தலைவராக்கினான்.

பின்னர், அவ்வரசன் சேந்தனாரை வரவழைத்து அவரைப்பார்த்து, 'சேந்தனாரே! பட்டினத்தாரின் செல்வம் அளவுகடந்தது என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்பொழுது நாம் கேள்விப்பட்ட அளவு செல்வம் இருக்கக்காணோம். நீர் எங்கு மறைத்து வைத்திருக்கின்றீர்?' என்று கேட்டான்.

சேந்தனார், 'அரசரே! யாம் சிறிதும் ஒளியாமல் இருந்த நிதியை உம்மிடங் காட்டிவிட்டோம். வேறு நிதி கிடையாது' என்றனர்.

அரசன் அவர் வார்த்தையில் ஐயுற்றுத் தனதருகிலிருந்த தன் பரிவாரங்களைப் பார்த்து, 'சேந்தனார் கூறுவதை நாம் நம்பவில்லை. அவர் உண்மையைச் சொல்லுகிறவரையில் அவரைச் சிறையில் வைத்துக் காப்பாற்றி வாருங்கள்' என்று கட்டளை யிட்டான்.

அவர்கள் அவ்வாறே சேநதனாைச் சிறை செய்தனர். பிறகு அவவாசன் சேந்தனாருடைய ஆஸ்தி முழுவதையும பட்டினத்தாருடையதெனக் கருதிக் கவாநதுகொண்டான். பொருளில்லாமையால் வறுமையுற்ற சேந்தனாருடைய மனைவியாா தம் பிள்ளையோடு வேற்றூர் சென்று கூலிக்கு வேலை செய்து ஜீவிததது வநதார்.

பிறகு அவ்வூா அரசன பட்டினததடிகள் இருந்த பொதுமண்டபததிற்குச சென்று அவரைப்பாாததது, ' பூலோக குபோனெனப பலரும சொலல 'வாழ்ந்த நீர் இந்நிலையை யடைநது என்ன பயனைப் பெற்றீர் !' எனறான்.

உடனே அடிகள் அவனைப்பாாத்து, ' இந நிலையில் யாம அடைந்துள்ள பயன் உமககுத் தெரியவில்லையா? இதுவரையில நீர் உட்காரவும நாம நிற்கவுமா யிருநதது. இப்பொழுது நீா நிற்கவும நாம உட்காாவு மாயிற்று ' என்று அவனுடைய அறிவுககுத் தககபடி கூறினார்.

அதுகேட்ட அரசன் நாணமுற்று அதற்குமேல அங்கு நிறக மனமில்லாதவனாய் வந்த வழியே திருமபிச் சென்றான்.

பின்னர் அடிகள பசிவநதபோது ஊருககுட்சென்று அங்ஙகையில் பிச்சையேற்றுண்டு மகிழ்ந்து, ஜகமெங்கும் பேயென்றெண்ணிச் சிரித்திட நாண மின்றிப் பொது மண்டபத்தில் யோகசமாதி யிருப்பதும அங்கு வரும் சிறுவர்களோடுகூடி விளையாடுவதுமான காரியங்களைச் செய்து களித்திருந்தார.

அதுகண்ட அவர் தமககை அவருடைய நிலைமையை அறியாமல ஊராரைப் போலவே அவரைததானும பைததியக்காரர் என்று எண்ணினாள். அதனால அவள நம அடிகளை வஞசனையாற் கொன்று 'பைததியககாரர்' என்று பல்லோர் கூறும வசைமொழியை ஒழிக்க எண்ணினாள். உடனே அவள் தன் தமபியாராகிய அடிகளைத தந்திரமாக அழைத்துவநது அவருககு விஷங்கலநத ஒட்டபபம் சமைத்து உண்ணக கொடுததாள்.

திருவருளால் உண்மையை உணர்நத அடிகள, 'தன் வினை தன்னைச சுடும ; ஒட்டபபம வீட்டைச் சுடும்' என்று சொல்லிககொண்டே கையிலிருநத அபபததை வீட்டின்மீது வீசி யெறிந்து சென்றார். உடனே தீ தோன்றி எவராலும அணைக்க முடியாதபடி எரியலாயிற்று. அதுகண்ட பல்லோர் பயந்து அடிகளிடம ஓடிக காலில் விழுநது தீயை அணைககுமாறு வேண்டினா. அடிகள் கிருபை கூர்நது, அத தீ அணையுமாறு கிருபை செய்து திருவெண்காடடைநது அப்பதியில் தங்கி யிருநதனர்.

சிலகாலமாயிற்று. அடிகளின் தாயார் தேகவியோக மடைநதார். உடனே சுற்றத்தினர் சூழ்நது பிரேததததை எடுத்துக்கொண்டு வழககப்படி ஈமக் கடன் கழிகக மயானத்திற்குப் போயினா. அவ் விஷயததைதக கடவுளருளால் கண்டறிநத அடிகள் விரைநது சென்று காவிரிபபூம் பட்டினத்து மயான எல்லையை யடைநதனர். அவரைக் கண்டவுடன் எலலோரும் சவததை விட்டுச் சற்று விலகி நின்றனா.

அடிகள் தமது அன்னையின் சவத்தைக் கண்டு மனங் கலங்கி,

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை
யெப்பிறப்பிற் காண்பே னினி.

என்று பலவாறு வருந்தி,

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சிவனை யாதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்.

என்று கூறித் தம தாயாரைத் தகனஞ் செய்துவிட்டு மறுநாள் பால் தெளித்தல் முதலியவைகளையும் நிறைவேற்றிப் பின்னர்த் திருவிடைமருதூரை யடைந்தார். அங்குச் சென்ற அடிகள், சிவனடியார் பலர் எதிர்வந்து வணங்கத் திருவாலயத்தை யடைந்து பன்முறை பணிந்து மனமுருக அன்புபெருகி உடல் குழைந்து என்பு நெகக்குவிட்டு வியர்வைவடிய மடை திறந்தாற்போலக் கண்ணீர் ஆறாகப்பாய நாத்தழு தழுக்க வாயாரத் **திருவிடைமருதூர் மும்மணிக்கோவை** பாடிப் பின்னர் மனைகடோறும் பிச்சை யேற்றுண்டு கோபுரத்திருவாயிலிற்றங்கிச் சிவயோகத்தில் அமர்ந் திருந்தார்.

ஒரு நாளிரவு திருவிடைமருதூர் ஈசர் அவ்வூர்க் காவலன்போல் தோன்றி அடிகளைப்பார்த்து, 'நீர் யார்?' என்று வினவினார்.

உடனே அடிகள் அவரைப்பார்த்து, 'ஊர்க்காவல யான் தோலோ, நரம்போ, தசையோ, உரோமமோ, எலும்போ, உதிரமோ, மூளையோ, மூச்சோ, மனமோ யாதோ யறியேன். அலையும் மனத்தை அடக்க வழிகாணாது அழிகின்றேன்' என்று கூறினார்.

உடனே ஊர்க்காவலனைப்போல் வந்த கடவுள் மறைந்தருளினார். வந்தவர் கடவுள் என்பதை அறிந்த பட்டினத்தார் 'அந்தோ! கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போயிற்றே' என்று கலங்கினார். பின்னும் ஒரு நாள் சிவபெருமான் அவர் கனவிற் றோன்றி, 'அன்பனே, இனிமேல் நீ என்னுடைய தலங்கடோறுஞ் சென்று என்னைப் பாடுவாயாக' என்று கூறி மறைந்தார்.

உடனே கண் விழித்த அடிகள் இறைவன் திருவருளுக்கு வியந்து வணங்கி அவர் கட்டளையைச் சிரமேற் கொண்டு காரோணம், நாகேச்சுரம், குரங்காடுதுறை, மாயூரம், சிவபுரம், கடலூர், புகலூர், செங்காட்டங்குடி, மருகல், வாஞ்சியம் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று சிவபெருமானை உமாதேவியாரோடு வணங்கிப் பலதிருப்பாடல்களைப்பாடி மகிழ்ந்து கடைசியாகத் திருவாரூர் அடைந்து, பல அடியவர் எதிர் கொள்ள வணங்கித் திருவீதி வலம் வந்து, கோபுர வாயிலைப் பணிந்து கோயிலுக்குட் சென்று பூங்கோயிலுடையாரையும், வீதிவிடங்கப்பெருமானையும், பலகாற் றொழுது பாடிப் பரவசமுற்றுப் பசிவந்தபொழுது பிச்சையேற்றுண்டு மகிழ்ந்திருந்தார்.

அந்நாளில் சிவபக்தியிற் சிறந்த சிறுவன் ஒருவன் அவருக்குப்பணிவிடை செய்து, காலந்தவறாது அவருக்கு அமுதூட்டி அவரை இரவும் பகலும் பிரியாதிருந்தான். அவனுடைய தாய் தந்தையர் அவனுக்குத் தங்கள் உறவினரில் ஒருவருடைய பெண்ணைத் தேர்ந்தெடுத்து விவாகம செய்து வைக்க விரும்பினர். சிறுவன் தனக்கு விவாகம வேண்டா மென்று மறுத்தான். உடனே அவனுடைய தாய் தந்தையர் பட்டினத்தடிகளிடம் வந்து முறை யிட்டனர்.

உடனே அடிகள் அவர்களுடைய முறைப்பாட்டுக் கிணங்கி அச்சிறுவனைப்பார்த்து, 'அப்பா, நீ உன் தாய் தந்தையர்களின் இஷ்டப்படி அவர்கள் குறிப் பிட்ட பெண்ணை விவாகம செய்துகொள். உனக்கு நன்மையுண்டாகும' என்று கூறினர்.

சிறுவன் அவர் கட்டளையை மறுப்பதற்கு அஞ்சி விவாகம் செய்து கொள்வதற்கு உடன்பட்டான்.

அவனுடைய தாய் தந்தையர் விவாகத்திற்குரிய எல்லா விஷயங்களையும சரிவரச்செய்து முடித்து அவன் விவாகத்தை நிறைவேற்றி வைத்தனர். விவாக காலத்தில் அடிகள் சென்று அவனை வாழ்த்தினர்.

சிலநாட்களாயின. புதுமனைவியோடு வாழ்ந்திருந்த அவ்வாலிபன் திடீரென்று சன்னி கண்டு இறந்தான் இறந்ததும் அவன் மனைவி முதலியோர் கல்லுங் கரையும்படி அழுதனர்.

அப்பொழுது திருவருளால் அடிகள் அவ்வீதி வழியே சென்றனர். அதையறிந்த அச்சிறுவனின்

தந்தை முதலியோர் ஓடிச் சென்று அடிகளின் காலில் வீழ்ந்து வணங்கி, ‘ அடிகளே, திருமணத்தின்போது உங்களால் வாழ்த்தப்பெற்ற உங்களுடைய சீடன் இறந்தான். உங்கள் ஆசீர்வாதத்தைப்பெற்ற அவன் இவ்வளவு இளம் பருவத்தில் இறப்பது தகுதியோ ?’ என்று கூறி அழுதனர்.

உடனே அடிகள் மனமிரங்கி அவர்களுடைய வீட்டிற்குச் சென்று இறந்துகிடக்கும் வாலிபனைப் பார்த்து, ஒரு பாசுரம் பாடினார். உடனே அவ்வாலிபன் உறங்கி விழிப்பவனைப்போல் விழித் தெழுந்து அடிகளின் பாதத்தில் விழுந்து வணங்கி நின்றான். அடிகள் அவனுக்கு உண்மை அறிவுண்டா மாறு பல நல்லுரைகளைக் கூறிவிட்டு அவ்வூரை விட்டுப் போகப்புறப்பட்டார். அதை யறிந்த அவ்வூரார் அவரை அவ்விடத்திலேயே இருக்குமாறு வேண்டினர்.

அடிகள் அவர்கள் வேண்டுகோளுக் கிணங்காது அவர்களுக்குச் சமாதானங் கூறிப் பாண்டி நாடு சென்று அந்நாட்டின் தலைநகராகிய மதுரையை யடைந்து, திருவாலவாய்ப் பெருமானையும், அங்கையற்கண்ணியம்மையாரையும் வணங்கி,

விடப்படு மோவிப் பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுமனந்
திடப்படு மோநின் னருளின்றி யேதின மேயலையக்
கடப்படு மோவற்பர் வாயிலிற் சென்றுகண் ணீர்ததும்பிப்
படப்படு மோசொக்க நாதா சவுந்தர பாண்டியனே

என்று பல அருந்தமிழ்ப்பாடல்களை அருளிச்செய்து, அங்கு சிலநாள் தங்கிப் பின்னர் மலைநாடு சென்று, அந்நாட்டிலுள்ள திருவஞ்சைக்களம முதலிய சிவஸ் தலஙகளைக்கண்டு தரிசித்துக கொஙகு நாடடைநதாா.

அங்குச் சென்றபின் பல ஸ்தலங்களைத தரிசித்துப் பல திருப்பதிகங்களைத திருவாய் மலர்நதருளி இன்புற் றிருநதார். அபபொழுது ஒரு நாளிரவில் அடிகள தாஙக முடியாத பசியால் வருநதி ஒருவனுடைய வீட்டு வாயிலிற சென்று வழககமபோல் உணவுக் காக கைதட்டினார். அவ்வீட்டிலிருநதவன் ஒரு பெரிய குடுமபியாயினும மிகவும மூாககமுடையவன். அவன அடிகளின உயாவை யறியாது அவரை யாரோ களவனென்றெண்ணி தடிகொண்டு புடைத தான அடிகள் அமமூாககன் தமமைப புடைததும தாம யாதொன்றுங் கூறாது நின்ற நிலை பெயராது 'சிவசிவ' வென்று கூறி யிருநதனா. அபபொழுது பககததது வீட்டுத திண்ணையிற் படுததிருநத ஒருவன் ஓடி வநது அடிகளை உற்றுபபாாத்து விட்டு அவரைப புடைத்த மூடனை நோக்கி, 'அடே பேதாய்! இப்பெரியாரை நான் அறிவேன். இவருககு நீ என்ன தீங்கு செய்தாய்? குலததோடு கெட்டுப போக வழி தேடிக்கொண்டாயே. நீ செய்த இப்பாவததை இனி எநத ஜன்மாந்திரததில தீர்த்துக் கொள்ளப்போகிறாய்?' என்று கூறி அடிகளைத் தன் மனைககு அழைததுச் சென்று அவர் பசி தீர அன்னம படைததது உபசரிததான். அபபொழுது அடிகள்,

பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே

*என்று கூறிப், பின்னர்,*

இருக்கு மிடந்தேடி யென்பசிக்கே யன்ன
முருக்கமுடன் கொண்டு வந்தாலுண்பேன்—பெருக்க
வழைத்தாலும் போகே னரனே யென்றேக
மிளைத்தாலும் போகே னினி.

*என்று தமதுள் வைராக்கியம் செய்துகொண்டு பின்னும் பல ஸ்தலங்களுக்குச் சென்று வணங்கிக் கடைசியாக உஞ்சேனை மாகாளமடைந்து மாகாளீச்சுரரை வணங்கி அந்நகரத்திற்கு அருகிலிருந்த ஒரு குறுங்காட்டின் அருகிற் காணப்பட்ட பிள்ளையார் கோவிலில் தங்கி நிஷ்டை கூடியிருந்தார்.*

# இருபதாவது அத்தியாயம்

## பத்திரகிரியாரின் துறவு

பட்டினத்தார் தங்கியிருந்த பிள்ளையார் கோவிலுக்குச் சமீபத்தில் அவ்வூர் அரசர் **பத்திரகிரி** என்பவருடைய அரண்மனை இருந்தது. அவருடைய அரண்மனையில் ஏராளமான செல்வம் நிறைந்திருந்தது. ஒருநாள் பக்கத்திலே உள்ள குறுங்காட்டில் வசித்து வந்த கள்வர் சிலர் அவ்வரசருடைய அரண்மனையுட் புகுந்து கொள்ளையடிக்கத் தீர்மானித்தனர். தீர்மானித்தபடியே அவர்கள் அன்று நள்ளிரவில் அரசருடைய அரண்மனையை நோக்கிச் செல்லும்பொழுது வழியில் பட்டினத்துப்பிள்ளையார் தங்கியிருந்த கணபதி யாலயத்தைக் கண்டனர். உடனே தாங்கள் நாடிச்செல்லும் காரியம் நிறைவேறவேண்டுமென்று பிரார்த்தனை செய்துகொண்டு அரசருடைய அரண்மனைக்குச் சென்று தந்திரமாக உள்நுழைந்து தங்கள் ஆசை தீரப் பலவிதமான ஆபரணங்களையும், பொன் நாணயங்களையும் வாரிக்கொண்டு ஒருவர் கண்ணிலும் புலப்படாமல் வந்தவழியே திரும்பிச் சென்றனர். அப்பொழுது அவர்களுக்குத் தாங்கள் பிரார்த்தனை செய்துகொண்ட பிள்ளையாரின் ஞாபகம் வந்தது. உடனே அவர்கள் அக்கணபதியின் ஆலயத்திற்குச் சென்று தங்களிடமிருந்த விலையுயர்ந்ததோர் பதக்கத்தை எடுத்து, இருள் நிரம்பி யிருந்த

படியால், கணபதி விக்கிரகத்தின் அருகில் யோக சாதனையில் இருந்த பட்டினத்தடிகளையே கணபதியாக நினைத்து அவர் கழுத்தில் சாற்றிச்சென்றனர். பொழுது விடிந்தவுடன் அரண்மனையில் களவுபோன விஷயம் எங்கும் பரவிற்று. கள்வர்களைப் பிடிப்பதற்காகக் காவலாளிகள் பல விடங்களிலும் சுற்றிக் கடைசியாகப் பட்டினத்தடிகளிருக்கும் கணபதியாலயத்தை அடைந்தனர். அடைந்ததும் கழுத்தில் பதக்கத்தோடு யோகசாதனையிலிருந்த பட்டினத்தடிகளே களவன்னென்றும், அவர் தங்களைக் கண்டவுடன் யோகியைப்போல் பாசாங்கு செய்து வீற்றிருப்பதாகவும் எண்ணிய காவலாளிகள் அவரைப் பிடித்துப் பலவாறு துன்புறுத்தினர்.

அடிகள் கண்விழித்துச் 'சிவசிவ' என்று கூறி வதைத்தவிர வேறொன்றும் கூறாமல் மௌனமுற்றார். காவலாளிகள் அவரைப்பலகேள்விகள் கேட்டார்கள். அவர் யாதொன்றுக்கும் பதில் சொல்லாது 'சிவசிவ' என்று கூறி யிருந்தார். காவலாளிகள் அவரை வைது அவரைப்பற்றிப் பலவாறு தங்களுக்குள் பேசிக்கொண்டு கடைசியாக அவரைப்பத்திரகிரியரசர் முன்னால் கொண்டுபோய் நிறுத்தி,' இவனே கள்வன். இவனை அவசியம் கழுவில் ஏற்றவேண்டும். இல்லாவிட்டால் மற்றக் கள்வர்கள் அகப்படமாட்டார்கள்' என்று கூறினர்கள். அரசரும் பின் நடக்கவேண்டிய விஷயம் வேறு வகையாயிருந்தமையினால் ஆராயாது அவரைக் கழுவிலேற்றுமாறு கட்டளை யிட்டார். உடனே காவலாளிகள் அடிகளை முன்பின்

ஆலோசியாமல கழுமரத்திற்குச் சமீபத்தில் கொண்டு சென்றனா. அவர்கள் கருததைத யறிநத அடிகளா,

என்செய லாவதி யாதொன்று மில்லை யினித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப் பெற்றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங னேவந்து மூண்டதுவே

என்று பாடிய அளவில் கழுமரமபற்றி யெரிநது போயிற்று.

அதைககண்ட அஙகிருநத காவலாளிகள முதலியோர் படடினததடிகளிடம அச்சங்கொண்டவாக ளாய் விரைநதோடிச சென்று அரசரிடம நடநத விஷயங்களைக் கூறினார்கள். உடனே அரசர் பட்டினத தடிகளிடம ஓடி அவர் காலில் வீழ்நது வணங்கித தாம் செய்த தீமையைப பொறுததுத் தமமை மன்னிதது ஆட்கொளளுமாறு வேண்டினார். உடனே அடிகள் அவவரசாமீது கருணைகொண்டு அவருக்குச சில நல்லுபதேசங்களைச் செய்தனா. அபபொழுதே அவ்வரசா தமது செல்வமனைததையுங துறந்து தமது நகரததைத் திருமபியும பாராது அப்படியே அடிகளைப் பின்பற்றிச் செலலத் தயாரானார்.

அதுகண்ட அடிகள் அவ்வரசரைத் திருவிடைமருதூர் சென்றிருக்குமாறு கட்டளையிட்டுத் தாம் காசி, கேதாரம முதலிய திருப்பதிகளுக்குச் சென்று சிவபெருமானைத் தரிசித்துவிட்டு மறுபடியும் தென்னாடடைந்து திருக்குற்றாலம்போந்து சிவபெருமானைப் பணிந்து,

காலன் வருமுன்னே கண் பஞ்சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
யுற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றலத் தானையே கூறு

என்று பல திருப்பதிகங்களை அருளிச்செய்து, பின்னும் பல ஸ்தலங்களுக்குச்சென்று கடைசியாகத் திருவிடைமருதூர் அடைந்து மருதவாணரைப் பணிந்து, பின்னாக கீழைக்கோபுரவாயிலில் சிவயோகத் தமர்ந்திருந்தார்.

பட்டினத்தடிகளின் கட்டளையைத் தலைமேற் கொண்ட பத்திரகிரி மன்னர் ஊர்கள்தோறும் சென்று பிச்சை யேற்றுண்டு கடைசியாகப் பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் வந்து சேர்ந்த அன்றைய தினமே தாமும் திருவிடைமருதூர் அடைந்து தமது குருமணியாகிய பட்டினத்தடிகளைப் பணிந்து அவர் கட்டளைப்படி மேலைக்கோபுரவாயிலில் தங்கியிருந்து நாடோறும் பிச்சை யெடுத்துவந்து குருவுக்களித்து அவர் உண்டு மிகுந்ததைத் தாம் உண்டு களித்திருந்தார். ஒருதினம் பத்திரகிரியார் தமது குரு உண்டு மிகுந்த சேடத்தினை உண்ணப் போகையில் ஆதரிப்பாரின்றி வாடிய பெட்டை நாய்க்குட்டி யொன்று அவர் எதிரில் நின்று ஏழை முகங்காட்டிப் பசியால் தான் வருந்துவதைக் குறிப்பித்தது. கருணைவள்ளலான பத்திரகிரியார் அச் சேடப்பிரசாதத்தில் சிறிது அதற்கிட்டு அதன் பசியைப் போக்கினார். அன்றுமுதல் அந்நாய்க்

குடடி அவரிடமே தங்கியிருநதது. சில நாட்கள் சென்றன. ஒருநாள சிவபெருமான் சிததவேடங் கொண்டு பட்டினததடிகளின் முன் தோன்றி, ' ஐயா ! நான பசியால வருநதுகிறேன. நீர் எனககுப பிச்சை யிடுவீரா ” என்று கேட்டார்.

கேட்டதும அடிகள அவரைபபாாதது, 'பெரியீர், யான் தரிததுளள கோவணமே பாரமென்றுள்ளேன். நான எவவாறு பிசசையிட முடியும? ஆயினும மேலைககோபுரவாயிலில சமசாரி ஒருவன் இருக கின்றான். அவன்பாற் செல்வீரேல அவன் உமது பசியைப் போககககூடும ' என்று கூறினார்.

கூறியதும் சிதத வேடத்துடனிருககும சிவ பெருமான் மேலைக கோபுரவாயிலை யடைந்து அங்கிருநத பததிரகிரியாரைப்பார்த்து, 'பெரியவரே ! கீழைக கோபுரவாயிலில இருககும பெரியாரை என் பசிதீர ஏதாவது கொடுககச சொன்னேன். அவர், “ பெரியீர், யான் தரிததுள்ள கோவணமே பார மென்றுள்ளேன். நான் எவ்வாறு பிச்சையிட முடியும. ஆயினும மேலைக கோபுரவாயிலில் சம்சாரி ஒருவன் இருககிறான். அவன்பாற் செல்வீரேல் அவன் உமது பசியைப் போக்கக் கூடும் ” என்றார். அதுகேட்ட நான் உம்மை யடைந்தேன். ஆகையால் நீராவது என் பசியைப் போக்கியருளும ' என்று சொன்னார்.

சிதத வேடதாரியாகிய சிவபெருமான் பட்டினத் தடிகள் கூறியதாகச் சொல்லிய வார்த்தையின் உட்கருத்து இன்னதென்று அறிந்துகொண்ட

பத்திரகிரியார், 'இரந்துண்ணும் இவ்வோடும், எச்சிலுண்ணும் இந்நாயுமோ என்னைச் சம்சாரி யாக்கின' என்று கூறிய வண்ணம் தமது கையிலிருந்த திருவோட்டை வீசி யெறிந்தார். அது தெய்வச் செயலால் சிறிது தூரத்திலிருந்த பெட்டை நாயின் பொறியிற் சென்று தாக்கியது. தாக்கியதும் ஓடும் உடைந்தது நாயும் இறந்தது. அவ்வளவிலே பிச்சைக்கு வந்த சிவபெருமான் புன்னகையோடு மறைந்தருளினார். வந்தவர் சிவபெருமான் என்பதை யறிந்த பத்திரகிரியார் தெய்வத் திருவருளை வியந்து 'திருப்புலம்பல்' முதலான பல தமிழ்ப்பாடல்களை அருளிச் செய்து சிவயோகத்தமர்ந்திருந்தார்.

## இருபத்தொன்றாவது அத்தியாயம்

### சேந்தனார் சிவனருள் பெறுதல்

பத்திரகிரியார் எறிந்த ஓடு தாக்கி இறந்த பெட்டை நாய் முன் ஜன்மத்தில் தாசியாயிருந்து பல தீமைகளைச் செய்ததாகும். அதனால் அது நாயாய்ப் பிறந்து அலைந்தது. இச்செனமத்தில் அந்த நாய் இருபெரும் துறவிகள் உண்ட சேடத்தினைத் தான்புசித்த விசேஷத்தினால் இறந்தவுடன் வெகுகாலமாக மகவின்றித் தவம் செய்துகொண்டிருந்த காசிமா நகரத்தரசன் விசுவகுத்தன் என்பவனுக்கு மகளாகப் பிறந்து ஞானவல்லி எனனும் பெயரோடு திருவருளால் பூர்வஞானத்துடன் வளர்ந்து வந்தது. ஞானவல்லி எனனும் பெண்ணின் அழகைக்கண்டு வியக்காதவர்கள் ஒருவருமில்லை. அப்பெண் ஒவ்வொரு தினமும் வளர்பிறைபோல வளர்ந்து மங்கைப்பருவம் அடைந்தாள்.

அப்பொழுது அவளுடைய தந்தை அவளுக்கு விவாகம் செய்விக்கக் கருதிப் புரோகிதரை அழைத்து, 'சுவாமி! என் மகள் ஞானவல்லிக்கேற்ற கணவன் இவ்வுலகில் இருக்கின்றனா? நான் விரைவில் தகுந்த மணாளன் ஒருவனைத்தேடி என் மகளுக்கு மணம் செய்து வைக்கவேண்டும்' என்றான்.

பின்னர் அவ்விஷயத்தை யறிந்த ஞானவல்லி தன் தந்தையைப்பார்த்து, 'அப்பா! நீர் எனக்கு

மணாளனைத் தேடவேண்டாம். கடுந்துறவியாகிய பத்திரகிரியார் என்னும் பெயரினையுடைய என் குருநாதர் தென்னாட்டில் உள்ள திருவிடைமருதூரி லிருக்கும் மருதவாணர் ஆலயத்தின் மேலைக்கோபுர வாயிலில் வீற்றிருக்கின்றார். அவருக்கேயன்றி நான் வேறொருவருக்கும் உரியவளல்லள். உமக்கு என்னிடம் உண்மையாகவே அன்பிருக்குமாயின் நீர் என்னை அவரிடம் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். நீர் அவ்வாறு செய்வீராயின் நீர் குடும்பத்துடன் மோட்சவீட்டினை யடைவீர்' என்றாள்.

அவ்வார்த்தையைக் கேட்ட அவ்வரசன் ஆச்சரியப் பட்டு, 'திருவிடைமருதூரா? குருநாதரா? என்ன இஃது ஆச்சரியமாயிருக்கிறதே, இப்பெண் இவைகளை யெல்லாம் எப்படி அறிந்தாள்? இவளைப்பார்த்தால் சாதாரண பெண்ணாகத் தோன்றவில்லை. இதில் ஏதோ இரகசியம் இருக்கவேண்டும்' என்றெண்ணி அறிவாளர் பலரோடு ஆலோசித்து உண்மையை அறிந்து வரும்படி ஒற்றரைத் தென்னாட்டிலுள்ள திருவிடைமருதூருக்கு அனுப்பினான்.

அவர்கள் சென்று சிலகாலம் பொறுத்துத் திரும்பி வந்து அரசனைப்பார்த்து, 'தங்கள் திருக்குமாரி தெரிவித்தது உண்மையே. பத்திரகிரியார் என்னும் பெயருடன் கூடிய பெரியார் ஒருவர் திருவிடை மருதூரின் மேலைக்கோபுரவாயில் இருப்பது உண்மை தான்' என்று கூறினார்கள்.

உடனே அரசன் தன் மகளைச் சிவிகையிலேற்றிப் பரிவாரங்கள் புடைசூழத் திருவிடைமருதூரடைந்து

ஆலயத்தின் மேலைக்கோபுரவாயிலுக்குச் சென்று தன் மகளைச்சிவிகையினின்றும் இறக்கினான்.

அச்சமயத்தில் பத்திரகிரியார் சிவயோகத்தில் இருந்தபடியால் அவர் கண்விழிக்கும் வரையில் ஞானவல்லியும், அவள் தந்தையாய அவ்வரசனும் அவர் எதிரில் நின்றுகொண்டிருந்தனர். கடைசியாகப் பத்திரகிரியார் கண் விழித்ததும் அப்பெண் அவரை வணங்கி, 'எம்பெருமானே! அடி நாய் மீண்டும் தங்கள் திருவடிபேற்றைச் சேர்ந்தது' என்றாள்.

எல்லாம் உணர்ந்த பெரியோராகிய பத்திரகிரியார் உண்மையை உணர்ந்து அப்பெண்ணை அழைத்துக் கொண்டு கீழைக்கோபுரவாயிலில் இருக்கும் தமது ஞானாசிரியரிடம்போய் வணங்கி அவரைப்பார்த்து, 'எம்பெருமானே இவ்வெச்சிலையுண்ட நாய்க்கும் இப்பிறவி நோய் வரலாமோ' என்று கண்ணீர் வடிய விண்ணப்பித்து நின்றனர்.

அதுகண்ட பட்டினத்தடிகள், 'திருவருள் இப்படியிருந்தால் நாம் செய்யவல்லது என்ன இருக்கின்றது' என்று கூறிச் சிவபெருமானைச் சிந்தையில் நினைத்தார்.

உடனே ஒரு பெருஞ்சோதி உண்டாயிற்று. அச்சோதியில் சிவபெருமான் ஆணைப்படி பத்திரகிரியார் அப்பெண்ணோடு புகுந்து மறைந்தார். பத்திரகிரியாரும், தன் மகளும் சிவத்தோடு கலந்தமை யறிந்த காசிராஜன் ஆனந்த பரவசனானான். உடனே தோன்றிய சோதியும் மறைந்து மகாலிங்கத்துட் சென்று அடங்கியது.

அதைக்கண்ட பட்டினத்தடிகள் திடுக்குற்று

ஆராமைமேலிட்டுக் கண்களில் ஆனந்த நீர் பெருகத் 'திருவிடைமருதூர, என் தீவினை இன்னும் என்னை இவ்வுலகில் இருத்தியிருக்கின்றதோ ? அடியேனுககு எபபொழுது உன் திருவடி கிடைக்கும் ? நான் செய்த பாவம கொடிதோ ? எக்காரணத்தினால் என்னை இவ்வாறு இங்கு நிறுத்தியிருக்கின்றாய் ? எனக்கு உன திருவருள் எப்பொழுது எங்குக் கிடைக்கும ? ஐயனே, நான் ஏதும அறியாது மயங்கி நிற்கின் றேன' என்று சிவபெருமானை நோக்கிப் பிரார்த் தித்தார்.

அபபொழுது, 'நீ வருநதவேண்டாம். உன்மீது யாம கொண்டுள்ள அன்புக்கோா அளவேயில்லை. ஐய, நீ நமமுடைய ஒற்றியூருககு வருவாயாக' என்று சிவபெருமான அசரீரியாகக கூறினர்.

சிவபெருமானின் கட்டளையைச சிரமேற்கொண்ட அடிகள் திருவொற்றியூருக்குப போகப் புறப்பட்டுப் பல ஸ்தலங்களையும தரிசித்துககொண்டு வழியி லிருநத திருவெண்காட்டை அடைந்தார். நிற்க.

ஆதியில் காவிரிப்பூம பட்டினத்தில் அரசனால் சிறைசெய்யப்பட்ட சேந்தனாருடைய மனைவியாரும், மைநதனும பல விடங்களிலும் சென்று கஷ்டப்பட்டுத் திருவெண்காட்டில வந்து தங்கிக கூலிவேலை செய்து பிழைததிருநதனா. அவர்கள், பட்டினத்தடிகள் அவ் வூரில வந்திருககும செய்திகேட்டு அவரிடம் விரைநது சென்று அவர் அடிகளில் வீழ்நது கதறிப புலம்பித தங்களுக்கு நேர்நத கதியை விவரமாகக் கூறினாகள்.

## சேந்தனார் சிவனருள் பெறுதல்

அதுகேட்ட அடிகள் மனமுருகிச் சிவபெருமான் சந்நிதிக்குச் சென்று சிவபெருமானை நோக்கி,

மத்தளை தயிருண் டானுமலர்மிசை
    மன்னி னானும்
நித்தமுந் தேடிக் காணா நிமலனே
    யமல மூர்த்தி
செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை
    வேந்த னிட்ட
கைத்தளை நீக்கி யென்முன் காட்டு வெண்
    காட்டு ளானே

என்ற திருப்பதிகத்தை அருளிச்செய்தாா. உடனே சிவபெருமான் அவர் வேண்டுகோளுக்கிணங்கித தமது புத்திரராகிய கணேசரை நோககி, 'சேந்தனை அரசனிட்ட சிறைக்களத்தினின்றும் நீக்குக' என்று கட்டளையிட்டார்.

அககட்டளைப்படியே கணேசப பெருமான் சேநதனாரை அவர் இருந்த சிறைக்களததினின்றும் அவருக்கு இட்டிருந்த விலங்கை முறித்து வெளிக கொண்டுவந்து பட்டினததுப் பிள்ளையாரின் முன் நிறுத்தினார்.

உடனே சேந்தனார் நடந்த விஷயங்களை யறிந்து பட்டினத்தடிகளின் காலில் வீழ்நது வணங்கி, 'தேவரீர் அரசனிட்ட சிறைக்களத்தினின்றும அடியேனை விடுவித்ததைப்போலவே சமசாரமாகிய

சிறையினின்றும் விடுவிக்கவேண்டும்' என்று பிரார்த்தித்தார்.

பட்டினத்தடிகள் அவருடைய உள்ளத்தூய்மையையறிந்து அவரைப்பார்த்து, 'சேந்தனாரே! நீர் சிதம்பரம் சென்று காட்டு விறகைக் கொண்டுவந்து விற்று அதனால் வரும் ஊதியத்தைக்கொண்டு சிவனடியார் ஒருவருக்கு அமுது செய்வித்து உமது மனைவி மக்களோடு உண்டு வாழ்ந்திரும்' என்று கட்டளையிட்டு அவ்வூரைவிட்டுப் போயினார்.

(தம் ஆசிரியர் கட்டளைப்படி சிதம்பரம் சென்று காட்டு விறகைச் சேமித்து விற்று அடியவரைப் போஷித்துச் சேந்தனார் காலங்கடத்தி வந்தார். ஒரு நாள் உணவளித்தற்குச் சிவனடியார் ஒருவரும் கிடைக்காமையினால் சேந்தனார் மனம் வருந்திப் பின்னும் சிவனடியாரைத்தேடிக் கொண்டு சென்றனர். அவரது பக்திக்கு மகிழ்ந்து நடராஜப்பெருமான் வயது சென்ற ஒரு அடியவரைப்போல் உருக்கொண்டு, மிகுந்த பசியால் வாடியவரைப்போல ஒரு மண்டபத்தில் தங்கி யிருந்தார். சேந்தனார் அவரைத் தம்முடைய குடிசைக்கு அழைத்துச் சென்று மனைவியார் சமைத்து வைத்திருந்த களியமுதை அவருக்கிட்டு மகிழ்ந்தார். சிவபெருமான் தாம் உண்டு மிகுந்ததை முன்றானையில் முடிந்துகொண்டு கோயிற் புகுந்து அதன் பெருமையைத் தேவர் முதலாயினோருக்குக் கூறினார். பின்னர், அவர்களுக்கும் அக்களியிற் சிறிது சிறிது அளித்து மகிழ்ந்திருந்தார். சேந்தனாரும் தமது மனைவி மக்களோடு மிகுந்திருந்த

களியமுதுண்டு யோக நித்திரையில் இருந்தார். நிற்க.

அவ்வூரிலிருந்த செல்வச்சோழன் என்னும் அரசன் நாடோறும் திருச்சிற்றம்பலத்தில் பூசனை நடத்தி, பூசை முடிவில் இறைவனருளால் உண்டாகும் மணி யோசையைக் கேட்டு அமுது கொள்ளும் விரதம் பூண்டிருந்தான். சிவபெருமான் சேந்தனாரிட்ட களி யமுதை உண்ட அன்றையதினம் நடுராத்திரியாகியும் மணியோசை கேளாமையால் அரசன் மனங்கலங்கி வருந்த முற்றுந் தரையிற் கிடந்து துயின்றான். சிவபெருமான் சேந்தனாரின் பெருமையை வெளிப் படுத்த எண்ணி அரசனுடைய கனவிற்றோன்றி, 'அரசனே, இன்று நாம சேந்தனா படைத்த களி யமுதை உண்ணச சென்றிருந்தமையால் உன்னுடைய பூசைககு வாததடைப்பட்டோம்' என்று கூறி மறைநதார்.

உடனே அரசன் கண் விழித்தெழுந்து, 'இறைவன் கிருபை யிருந்தவாறென்னே! அச்சேந்தனாரின் பக்தியும அன்பும எவ்வகைப்பட்டதோ? அவர் எங்கிருக்கின்றார்? அவரை நான் எவ்வாறு காண்பேன்?' என்று சிந்தித்துச் சிவனை நினைந்து இரவைக் கழித்துப் பொழுது விடிந்தவுடன் ஸ்நானம் செய்து ஜபதபங்களை முடித்துக்கொண்டு கோயிலுக்குச் சென்றான்.

அங்குக கோயிலின் பலபாகங்களிலும களியமுது சிந்தி மணம வீசிக்கொண்டிருந்தது. அதைக்கண்ட அரசனும், தில்லைவாழந்தணர் முதலானவரும் ஆச்சரிய மடைந்தனர். உடனே அரசன் அவர்

களுக்குத் தான் கண்ட கனவைக் கூறினர். எல்லோரும் சேந்தனாரைப் பார்க்கவேண்டும் என்று பேரவாக் கொண்டனர்.

அப்பொழுது மார்கழி மாதத்தில் நடக்கும் திருவாதிரையுற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தேர்விழா நடத்த வேண்டிய தினத்தில் பெருமழை பெய்தபடியால் அன்று அவ்விழாவை நிறுத்தி மறு தினம் ஆரம்பித்தனர். பல பேர் சேர்ந்திழுத்தும் தேர் செல்லவில்லை. அது கண்டு யாவரும் வருந்தினர். அப்பொழுது, எல்லோருக்கும் கேட்கும்படி, ‘சேந்தனாரே, தேர் நடக்க நம்மைப்பல்லாண்டு பாடுவீராக’ என்று சிவபெருமான் அசரீரியாகக் கூறினர்.

உடனே சேந்தனார் மனமுருகி அன்பு வழிந்து ஆறாய்ப் பெருகியோடத் **திருப்பல்லாண்டு** பாடினர். தேரும் நடந்து வீதிவலம் வந்து நிலையையடைந்தது. பின்னர்ச் சேந்தனார் திருவிசைப்பா முதலியன பாடிக் குருவருளால் தம் குடும்பத்தோடு முத்தி யடைந்தார்.

# இருபத்திரண்டாவது அத்தியாயம்

## அடிகள் முத்தியடைதல்

சேந்தனருக்கு உபதேசம் செய்து சென்ற நம் பட்டினத்தடிகள் சீர்காழி சென்று **திருக்கழுமல மும் மணிக்கோவை** பாடி அவ்விடத்தை விட்டகன்று சிதம்பரஞ் சென்று **கோயினான்மணிமாலை** பாடி ஆனந்தத்தில் அழுந்தியிருந்தார். அப்போது பசி அவர் வயிற்றில் பற்றியெழுந்தது. உடனே அவர் 'பன்னக வாடகப் பொற்பாதம்' என்னும் பாட்டைச் சொல்ல உலகத்திற்கோர் அன்னையாய் விளங்கும் சிவகாமி அம்மையார் உச்சிக காலததில் நிவேதிக்கப் பட்ட பிரசாததத்தினைக் கொண்டு வந்து அவருக்கு உண்ணககொடுக்க அடிகளார் அதையுண்டு பசி யாறினர். அப்பொழுது பூவுலகப பெண்ணுருவுடன் உணவு கொண்டு வந்து கொடுத்த சிவகாமியம்மையார் மறைந்தருளினர். வந்தவர் அம்மையார் என்பதை அறிந்த அடிகள்,

ஓடுமே டுத்தத ளாடையுஞ் சுற்றி யுலர்விமேன்ள
வீடுக டோறும் பலிவாங்கி யேவிதி யற்றவர்போ
லாடு மருட்கொண்டிங் கம்பலத் தேநிற்து மாண்டிதன்னைத்
தேடுங் கணக்கென்ன காண்சிவ காம சவுந்தரியே.

என்று துதித்துச் சிவயோகத்தில் வீற்றிருந்தார். அவ்வாறிருக்கையில் அவர்,

சோறிடு நாடு துணிதருங் குப்பைதொண் டன்பரைக்கண்
டேறிடுங் கைக ளிறங்கிடுந் தீவினை யெப்பொழுது
நீறிடு மேனியர் சிற்றம் பலவர் நிருத்தங்கண்டால்
ஊறிடுங் கண்க ளுருகிடு நெஞ்சமென் னுள்ளமுமே

என்ற பாடலை அருளிச்செய்து காலந்தவறாமல் சிற்சபையிற் சென்று அங்கு நடனமிடும் தேவதேவனை நோக்கி, 'நினைமின் மனனே' என்பது முதலாய பல திருப்பாடல்களை அருளிச்செய்து நாள் பல கழிகக, 'திருவொற்றியூருககு வருக' என்று சிவபெருமான் கூறிய ஞாபகம அவருக்கு வநதது. உடனே அடிகள்

"பாற்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயை"

எனனும அடைககலததிருவகவல பாடி இனனும் பல பாக்களை அருளிச்செய்து திருக்கோயிலை வலமவந்து தொழுது கோபுரவாயிலை வணங்கி வீதிகடோறும் பணிந்தெழுந்து பின்னர்த தில்லையைவிட்டுப் புறப் பட்டார்.

வழியில் திருத்தினை, திருப்பாதிரிப்புலியூர், திருத் துறையூர், திருவாமூர், திருநாவலூர், திருவெண்ணெய் நல்லூர், திருக்கோவல்வீரட்டம் முதலிய திருப்பதி களைத் தொழுது கடைசியாகத் திருவண்ணாமலையை யடைந்தார்.

அங்கடைந்ததும் அருணாசல ஈசுவரரும், உண்ணா முலையம்மையாரும் திருக்கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் இடத்தை நண்ணி அவர்களைத் தொழுது கும்பிட்டுத் துதித்து,

## அடிகள் முத்தியடைதல்

அருந்தமிழ்ப்பாக்கள் பல பாடிக் கிரிவலம் வந்து அங்குச் சிலநாள் தங்கியிருந்தார்.

பின்னர் அவ்விடத்தை விட்டகன்று காஞ்சிபுரம் அடைந்து அந்நகர எல்லையைப் பணிந்து ஊருக்குள் செல்லுகையில் அவர் வருகையை யறிந்த அவ்வூர்ச் சிவநேசச் செல்வர்கள் மங்கலவாத்திய முழங்க எதிர் கொண்டு சென்று அவரை வணங்கினர். அவர்கள் வணங்குமுன் அடிகள் தாமும் அவர்களை வணங்கித் திருமதிலவாயில் கடந்து வீதிகளைப் பணிந்து கோபுர வாயிலைக் குமபிட்டுத் திருவேகம்பர் திருத்தலத்தை வலம் வந்து வாழ்த்தி அன்பு பெருக,

மெய்த்தொண்டர் செல்லு நெறியறி
யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலு நற்றெண்டு
வந்தில னுண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புற
மேயுன்னைப் போற்றுகின்ற
வித்தொண்ட னேன்பணி கொள்ளுதி
யோகச்சி யேகம்பனே

என்று பாடித்துதித்துப், பின்னும் கச்சித்திருவகவல் முதலிய பாடல்களைப்பாடி வீற்றிருக்கும்போது பசி நோய் வருத்த அதைப் பொறுராய் ஒரு பதிகம் பாடினர். உடனே காமாட்சியம்மையார் அமுது கொண்டுவந்து அளித்துச் சென்றார். பின்னர் அடிகளார் காமக்கோட்டம், கச்சபாலையம், ஓணகாந்

தன்றளி, கச்சிநெறி, காரைக்காடு முதலிய திருப்பதிகளைப் பணிந்து ஆங்காங்குச் சிலநாள் தங்கிப் பின்னர் அங்கிருந்து புறப்பட்டுப் போகையில் வழியிலுள்ள திருவாலங்காடு, திருப்பாச்சூர், திருவெண்பாக்கம் முதலிய திருப்பதிகளை வணங்கிக் கண்ணப்பதேவரும், சிவகோசரியாரும், சிலந்தியும், காளனும், அத்தியும் பூசித்துப் பேறுபெற்றதும், கடைச்சங்கப் பெரும் புலவராகிய நக்கீரதேவர் அருளிச்செய்த திருவந்தாதியாகிய கொழுந்தமிழ்ச்சுவை யுண்டறிந்ததுமாகிய காளத்தித் திருமலையை வணங்கி,

வாளால் மகவரிந் தூட்டவல் லேனல்லன் மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்ல னினிச்சென்
றாளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பனுக்கே.

என்று பல பாடல்களை அருளிச்செய்து சிவபெருமானருளால் கைலாயத்தைத் தரிசித்தது அவ்விடம் விட்டகன்று சிவபெருமான் வரும்படி கட்டளையிட்ட திருவொற்றியூரை யடைந்தார்.

அடிகள் திருவொற்றியூரை யடைந்ததும் அன்பு ஆறுய்ப்பெருக,

கண்டங் கரியதாங் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப் போல வழகியதாம்—தொண்டர்
உடலுருகத் தித்தித்து மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு.

என்ற திருப்பாடலைப் பாடிப் பின்னர்,

வாவியெல்லாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவனங்க ளெல்லாங் கணநாதர்—பூவுலகில்
ஈது சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றி யூர்.

என்ற திருப்பதிகத்தைப் பாடித் திருவீதிக்குட் சென்று,

சூடப்படு வாரறி யார்புர மூன்றையுஞ் சுட்டபிரான்
றிடப்படு மாமதிற் றென்னொற்றி யூரன் றெருப்பரப்பி
னடப்பவர் பொற்பத நந்தலை மேற்பட நன்குருண்டு
கிடப்பது காண்மன மேவிதி யேட்டைக் கிழிப்பதுவே.

என்று சொல்லித் துதித்து ஆலயத்தை யடைந்து மும்முறை வலம் வந்து தியாகராஜப்பெருமானையும், தேவியாரையும் பணிந்து,

'இருநில மடந்தை யியல்பினி லுடுத்த'

என்னும் முதல் அடியினை யுடைய அகவலைப்பாடி,

ஐயுந் தொடர்ந்து விழியுஞ்
செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற
போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடை
யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத்
தோதவுங் கற்பியுமே.

எனும் பாடலையும் அருளிச்செய்து அங்குத் தங்கி யிருந்தனர்.

அவ்வாறு அங்குத் தங்கி யிருந்தவர் பசு மேய்க்கும் சிறுவரோடு சேர்ந்து ஆடியும் பாடியும் அநேகத் திருவிளையாடல்களைச் செய்துகொண் டிருந்தார். பின்னர், முதல்வன் முறையீடு, அருட்புலம்பல், இறந்த காலத்திரங்கல், நெஞ்சொடு புலம்பல், பூரணமாலை, நெஞ்சொடு மகிழ்தல், உடற் கூற்றுவண்ணம் என்னும் பெயரமைந்த பாடல்களை அருளிச் செய்தார். பின்னா முத்தி யடையுங்காலம் நேர்ந்த படியால் அவர், தம்முடன் இருந்த மாடுமேய்க்கும சிறுவர்களை நோக்கி, 'சிறுவர்களே, நான் உங்களுக்குச் சில விநோதங்களைக காட்டுகிறேன். என்னை ஒரு குழியிற் புதையுங்கள்' என்றார்.

முதலில் அச்சிறுவர்கள் அவ்வாறு செய்வதற்கு அஞ்சினராயினும் பின்னர் அவர் வேண்டுகோளின் படியே அவரை ஒரு குழியிற் புதைத்தனர்.

உடனே அடிகள் அவர்களுக்கு ஆச்சரியமுண்டா மாறு வெளியில் வந்து சமீபத்தில் நின்ற ஒரு மணற் குன்றின்மீது நின்றார். சிறுவர்கள் ஆச்சரியமடைந்து மீட்டும் மீட்டும் அடிகளைப் புதைக்க அடிகள் வெளியில் வநதுகொண்டிருந்தனர். கடைசியாகச் சிறுவர்கள் அடிகளைப் புதைக்க அடிகள் வெளி வாராமல் சிவலிங்க வடிவமாகத் தோன்றி நின்றார்.

அதைக்கண்ட சிறுவர்கள் வியப்பும், அச்சமும் உடையவர்களாய் ஓடிச்சென்று நடந்த விஷயங்களை ஊரிலுள்ளவர்களுக்குத் தெரிவித்தார்கள். ஊரா ரெல்லாந் திரண்டுவந்து உண்மையை யறிந்து தங்கள் கண்கள் செய்த தவப்பயன் பலிக்குமாறு அடிகள்

கொண்ட சிவலிங்க ரூபத்தைத் தரிசித்து மகிழ்ந்தனர். எங்கெங்கும் ' அரகர ' வென்னும் முழக்கம் உண்டா யிற்று. ஊர் முழுவதும் பேரானந்த வெள்ளம் வழிந்தோடியது.

அடிகள் இவ்வாறு அரும்பெரும் நிலையடைந்ததைக் கேட்ட உலகத்தார் அடிகளைப் போற்றிப் புகழ்ந்து இ. 'ற்றிருந்தனர்.

அடிகளின் பத்தினியாராகிய சிவகலையம்மையார் அடிகளின் திருவடிகளையே தினைந்திருந்து சிவபதவி யடைந்தார்.

காவிரிப்பூம் பட்டினத்திலுள்ளார் அனைவரும் அடிகள் பெற்ற பெரும் பேற்றைக் கேள்வியுற்று ஆவலுடன் திருவொற்றியூரடைந்து அடிகளின் சிவலிங்கத் தோற்றத்தைக் கண்டு வணங்கி ஆனந் தத்தினல் ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள்.

**67.** காணொ ணாதது உருவோ டருவது
பேசொ ணாதது உரையே தருவது
காணு நான்மறை முடிவாய நிறைவது பஞ்சபூதக்

காய பாசம தனிலே உறைவது
மாய மாயுடல் அறியா வகையது
காய மானவர எதிரே யவரென வந்துபேசிப்

பேணொ ணாதது வெளியே ஒளியது
மாய னாரயன் அறியா வகையது
பேத பேதமொ டுலகாய் வளர்வது விந்துநாதப்

பேரு மாய்கலை அறிவாய் துரியஅ
தீத மானது வினையேன் முடிதவ
பேறு மாயருள் நிறைவாய் விளைவது ஒன்றுநீயே;

வீணொ ணாதென அமையா தசுரரை
நூறி யேஉயிர நமனீ கொளுவென
வேலக டாவிய கரனே, உமைமுலை உண்டகோவே,

வேத நான்முக மறையோ னொடுமெவி
யாடி யேகுடு மியிலே கரமொடு
வீற மோதின மறவா, குறவர்கு றிஞ்சியூடே

சேணொ ணாயிடும் இதணமேல அரிவையை
மேவி யேமயல் கொளலீ லைகள் செய்து
சேர நாடிய திருடா, அருள்தரு கந்தவேளே,

சேரொ ணாவகை வெளியே திரியுமெய்ஞ்
ஞான யோகிகள் உளமே உறைதரு
தேவ னூர்வரு குமரா, அமரர்கள் தம்பிரானே!

68. ஆறு மாறு மஞ்சு மஞ்சும் ஆறு மாறு மஞ்சு மஞ்சும்
ஆறு மாறு மஞ்சு மஞ்சும அறுநாலும்

ஆறு மாய சஞ்ச லங்கள் வேற தாவி ளங்குகின்ற
ஆர ணாக மங்க டந்த கலையான

ஈறு கூற ருமபெ ருஞ்சு வாமி யாயி ருந்த நன்றி
ஏது வேறி யமப லின்றி ஒருதானாய்

யாவு மாயம னங்க டந்த மோன வீட டைந்தொ ருங்கி
யான வாவ டங்க என்று பெறுவேனோ?

மாறு கூறி வந்தெதிர்ந்த சூரா சேனை மங்க வங்க
வாரி மேலவெ குண்ட சண்ட விததாரை

வாகை வேல.கொன்றை தும்பைமாலை கூவி ளங்கொ ழுந்து
வால சோமன நஞ்சு பொங்கு பகுவாயே

சீறு மாசு ணங்க ரங்கை ஆறு வேணி கொண்ட நம்பர்
தேசி கா,க டம்ப லங்கல புனைவோனே,

தேவா யாவ ருந்திரண்டு பாரின் மீது வந்தி றைஞ்சு
தேவ னூரவி ளங்க வந்த பெருமாளே!

---

## 24. பெரியமடம்

69. கலகவிழி மாமகளிர கைககுளே யாய்ப்பொய்
களவுமத னூல்பலப டித்தவா வேட்கை
கனதனமு மார்புமுற லிச்சையால் ஆர்தது கழுநீரார்

கமழ்நறைச வாதுபுழு கைத்துழாய் வாரத்து
நிலவரசு நாடறிய கட்டில்போட் டார்சசெய்
கருமமறி யாதுசிறு புத்தியால் வாழ்க்கை கருதாதே

தலமடைசு சாளரமு கப்பிலே காத்து
நிறைபவுசு வாழ்வரசு சத்யமே வாய்த்த
தெனவுருகி ஓடியொரு சற்றுளே வாராததை
தடுமாறித்
தழுவிஅநு ராகமும்வி ளைத்துமா யாகனை
தனையுமரு நாளையும வதத்திலே போக்கு
தலையறிவி லேனைநெறி நிற்கநீ தீக்ஷை தரவேணும்;

அலகில்தமி ழாலுயர்ச மர்த்தனே போற்றி!
அருணைநகர் கோபுரவி ருப்பனே போற்றி!
அடல்மயில்ந டாவியப்ரி யத்தனே போற்றி! அவதான

அறுமுகசு வாமியெனும் அத்தனே போற்றி!
அகிலதலம ஓடிவரு சித்தனே போற்றி!
அருணகிரி நாதனெனும அப்பனே போற்றி! அசுரேசர்

பெலமடிய வேலைவிடு கரத்தனே போற்றி!
கரதலக பாலிகுரு வித்தனே போற்றி!
பெரியகுறமாதணைபுயத்தனேபோற்றி! பெருவாழ்வாம்

பிரமனறி யாவிரத தக்ஷிணா மூர்த்தி
பரசமய கோளரித வத்தினால வாய்த்த
பெரியமட மேவியசு கத்தனே, யோகயா பெருமாளே!

---

## 25. சோமநாதன் மடம்

70. ஒருவழிப டாது மாயை இருவினைவி டாது நாளும்
உழலுமநு ராக மோக அநுபோகம்
உடலுமுயிர் தானு மாயுன் உணர்விலொரு கால்இ ராத
உளமுநெகிழ் வாகு மாறு அடியேனுக்
இரவுபகல் போன ஞான பரமசிவ யோக தீரம்
எனமொழியும வீசு பாச கனகோப
எமபடரை மோது மோன உரையிலுப தேச வாளை
எனதுபகை தீர நீயும அருள்வாயே

அரிவையொரு பாக மான அருணகிரி நாதர் பூசை
அடைவுதவ றாது பேணும அறிவாளன்
அமணாகுல கால னாகும அரியதவ ராஜ ராஜன்
அவனிபுகழ் சோம நாதன் மடமேவும்
முருக, பொரு சூரா சேனை முறியவட மேரு வீழ
முகரசல ராசி வேவ முனிவோனே,
மொழியுமடி யாாகள் கோடி குறைகருதி னாலும் வேறு
முனியஅறி யாத தேவா பெருமாளே!

---

## 26. திருமுருகன் பூண்டி

**71.** அவசியமுன் வேணடிப பலகாலும்
அறிவினுணாந தாணடுக கொருநாளில
தவசெபமுந தீணடிக கனிவாகிச
சரணமதும பூணடற கருள்வாயே;
சவதமொடுந தாணடிதூ தகஙுரவாய்,
சடுசமயங காணடற் கரியானே,
சிவகுமரன் பீணடிற பெயரானே,
திருமுருகன் பூணடிப் பெருமாளே!

---

## 27. ஞானமலை

**72.** மனையவள் நகைககக ஊரின் அனைவரு நகைகக லோக
மகளிரு நகைகக தாதை தமரோடும்
மனமது சலிப்ப நாயன் உளமது சலிப்ப யாரும
வசைமொழி பிதற்ற நாளும அடியேனை
அனைவரும் இழிப்ப நாடு மனவிருள் மிகுதது நாடின்
அகமதை எடுதத சேமம் இதுவோவென்
றடியனு நினைதது நாளும் உடலுயிர் விடுதத போதும்
வனகிரமன் வளிகக பாகம் அருள்வாயே:

தனதன தனதத தான எனமுர சொலிப்ப வீணை
தமருக மறைக்கு ழாமும் அலைமோதத்

தடிநிக ரயிற்க டாவி அசுரர்கள் இறக்க மாறு
சமரிடை விடுத்த சோதி முருகோனே,

எனமன முருக்கி யோக அநுபுதி அளிதத பாத,
எழுதரிய பசசை மேனி உமைபாலா,

இமையவர் துதிப்ப ஞான மலையுறை குறததி பாக,
இலகிய சசிப்பெண் மேவு பெருமானே!

---

## 28. ஆறு திருப்பதி

**73.** ஈனமிகுத துளபிறவி அணுகாதே
யானுமுனக் கடிமையென வகையாக
ஞானஅருட் டனையருளி வினைதீர
நாணமகற் றியகருணை புரிவாயே;
தானதவத தினின்மிகுதி பெறுவோனே,
சாரதிஉத தமிதுணைவ, முருகோனே,
ஆனதிருப் பதிகமருள் இளையோனே,
ஆறுதிருப் பதியில்வளர் பெருமானே!

# மகா க்ஷேத்திரங்கள்

1. தார ணிக்கதி பாவி யாய்வெகு
சூது மெத்திய மூட னாய்மன
சாத னைக்கள வாணி யாயுறும் — அதிமோக

தாப மிக்குள வீண னாய்பொரு
வேல்வி ழிச்சியர் ஆகு மாதர்கள்
தாமு யச்செயும் ஏது தேடிய — நினைவாகிப்

பூர ணச்சிவ ஞான காவியம்
ஓது தற்புணர் வான நேயர்கள்
பூசு மெய்த்திரு நீறி டாஇரு — **வினைவேலைப்**

பூசி மெய்ப்பத மான சேவடி
காண வைத்தருள் ஞான மாகிய
போத கத்தினை எய மாறருள் — **புரிவாயே;**

வார ணத்தினை யேக ராவுமு
னேவ ளைத்திடு போது மேவிய
மாய வற்கித மாக வீறிய — **மருகோனே,**

வாழி முப்புர வீற தானது
நீறெ ழப்புகை யாக வேசெய்த
மாம திப்பிறை வேணி யாரருள் — புதல்வோனே,

கார ணக்குறி யான நீதியா
ஆன வாகமு ஞக வேநெறி
காவி யச்சிவ நூலை ஓதிய — கதிர்வேலா,

கான ககுற மாதை மேவிய
ஞான சொறகும ரா,ப ராபர,
காசி யிற்பிர தாப மாயுறை — பெருமாளே!

2\. வேழ முண்ட விளாங்கனி யதுபோல
மேனி கொண்டு வியாபக மயலூறி
நாளு மிண்டர்கள் போல்மிக அயர்வாகி
நானு நைந்து விடாதருள் புரிவாயே;
மாள அன்றமண நீசர்கள் கழுவேற
வாதில் வென்ற சிகாமணி மயில்வீரா,
காள கண்டன் உமாபதி தருபாலா,
காசி கங்கையில் மேவிய பெருமாளே!

---

3\. ஒருபதும இருபதும அறுபதும உடனறும்
உணர்வுற இருபதும் உளநாடி
உருகிட முழுமதி தழலென ஒளிதிகழ்
வெளியொடு ஒளிபெற விரவாதே
தெருவினில் மரமென எவரொடும உரைசெயது
திரிதொழில அவமது புரியாதே
திருமகள் மருவிய திரள்புய. அறுமுக
தெரிசனை பெறஅருள் புரிவாயே;
பரிவுடன் அழகிய பழமொடு கடலைகள்
பயறொடு சிலவகை பணியாரம்
பருகிடு பெருவயி றுடையவர பழமொழி
எழுதிய கணபதி இளையோனே,
பெருமலை உருவிட அடியவர உருகிட
பிணிகெட அருள்தரு குமரேசா,
பிடியொடு களிறுகள் நடையிட கலைதிரள்
பிணையமர் திருமலை பெருமாளே!

4\. அலகில்அ வுணரைக கொன்ற தோளென
மலைதொளை உருவச சென்ற வேலென
அழகிய கனகத தணடை சூழ்வன    புண்டரீக

அடியென முடியிற் கொணட கூதளம
எனவன சரியைக கொணட மாரபென
அறுமுகம எனநெக கெனபெ லாமுரு    கன்புறுதோ ?

கலகல கலெனக கணட பேரொடு
சிலுகிடு சமயப பஙக வாதிகள்
கதறிய வெகுசொற பஙக மாகிய    பொஙகளாவும்

கலைகளு மொழியப் பஞச பூதமும
ஒழியுற மொழியிற றுஞசு ருதன
கரணமும ஒழியத் தநத ஞானமி    ரு நதவாறென் ?

இலகுக டலைகற கணடு தேனொடும
இரதமு றுதினைப பிணடி பாகுடன்
இனிமையின் நுகருற் றெம்பி ரான்ஒரு    கொம்பினாலே

எழுதென மொழியப் பணடு பாரதம்
வடகன சிகரச செமபொன் மேருவில
எழுதிய பவளக குன்று தாதையை    அன்றுசூழ

வலமவரும அளவிற சணட மாருத
விசையினும் விசையுற றெணடி சாமுக
மகிதல மடையக கணடு மாசுணம்    உண்டலாவும்

மரகத கலபச செம்புள் வாகன
மிசைவரு முருகசசிம்பு ளேயென
மதுரையில வழிபட் டும்ப ரார்தொழு    தம்பிரானே !

5. ஆனைமுக வற்கு நேர்இளைய கந்த,
ஆறுமுக வித்த குமரேசா,

ஆதிஅர னுக்கும் வேதமுதல் வற்கும்
ஆரணமு ரைத்த குருநாதா,

தானவா குலத்தை வாள்கொடு துணித்த
சால்சதுர் மிகுந்த திறல்வீரா,

தாளிணைகள் உற்று மேவியப தத்தில்
வாழ்வொடு சிறக்க அருள்வாயே;

வானெழு புவிக்கு மாலுமய னுக்கும
யாவரொரு வர்க்கும் அறியாத

மாமதுரை சொக்கா மாதுமை களிக்க
மாமயில் நடத்து முருகோனே,

தேனெழு புனத்தில் மான்விழி குறத்தி
சேரமரு வுற்ற திரள்தோளா,

தேவர்கள் கருத்தில் மேவிய பயத்தை
வேல்கொடு தணித்த பெருமாளே!

---

6. பரவு நெருங்கதிர் உலகில் விரும்பிய
பவனி வரும்படி யதனாலே

பகர வளங்களும் நிகர விளங்கிய
இருளை விடிந்தது நிலவாலே

வரையினில் எங்கணும் உலவி நிறைந்தது
வரிசை தரும்பத மதுபாடி

வளமொடு செந்தமிழ் உரைசெய அன்பரும்
மகிழவரங்களும் அருள்வாயே;

அரஹர சுந்தர அறுமுக என்றுனி
அடியா பணிந்திட மகிழ்வோனே,
அசலநெ டுங்கொடி அமையுமை தன்சுத,
குறமக ளிங்கித மணவாளா,
கருதரு திணபுய, சரவண, குங்கும
களபம ணிந்திடு மணிமார்பா,
கனக மிகுமபதி மதுரை வளமபதி
யதனில் வளர்ந்தருள பெருமாளே!

---

7. கலைமேவு ஞானப் பிரகாசக்
கடலோடி ஆசைக் கடலேறிப்
பலமாய வாதிற பிறழாதே
பதிஞான வாழ்வைத தருவாயே;
மலைமேவு மாயக குறமாதின்
மனமேவு வாலக குமரேசா,
சிலைவேட, சேவற கொடியோனே,
திருவர்ணி கூடற் பெருமாளே!

---

8. நீதத துவமாகி நேமத துணையாகிப்
பூதத் தயவான போதைத தருவாயே;
நாதத தொனியோனே, ஞானக கடலோனே,
கோதற் றமுதானே, கூடற் பெருமாளே!

---

9. முத்துநவ ரத்நமணி பத்திநிறை சத்தியிட
மொய்த்தகிரி முத்திதரு எனவோதும்

முக்கணிறை வர்க்குமருள் வைத்தமுரு கக்கடவுள்
முப்பதுமு வர்க்கசுரர் அடிபேணிப்

பத்துமுடி தத்தும்வகை உற்றகணை விட்டஅரி
பற்குனனை வெற்றிபெற ரதமூரும்

பச்சைநிற முற்றபுயல் அச்சமற வைத்தபொருள்
பத்தர்மன துற்றசிவம் அருள்வாயே ;

தித்திமிதி தித்திமிதி திக்குகுகு திக்குகுகு
தெய்த்ததெனை தெய்த்ததெனை தெனனான

திக்குவென மத்தளமிடக்கைதுடி தத்ததகு
செச்சரிகை செச்சரிகை எனஆடும்

அத்தனுடன் ஒத்தநட மித்தரிபுவ னத்திநவ
சித்தியருள் சத்திஅருள் புரிபாலா,

அற்பவிடை தற்பமது முற்றுநிலை பெற்றுவள
ரற்கனக பத்மபுரி பெருமாளே !

— —

10. வாலவய தாகிஅழ காகிமத னாகிபணி
வாணிபமொ டாடிமரு ளாடிவிளை யாடிவிழல்
வாழ்வுசத மாகிவலி வாகிமட கூடமொடு
பொருள்தேடி

வாசபுழு கோடுமல ரோடுமன மாகிமகிழ்
வாசனைகள் ஆதியிட லாகிமய லாகிவிலை
மாதர்களை மேவியவர் ஆசைதனி லேசுழல
சிலநாள்போய்க்

தோல்திரைக ளாகிநரை யாகிகுரு டாகியிரு
கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்கதிகள் மாறிசுக மாறிதடி யோடுதிரி
வுறுநாளிற்
சூலைசொறி ஈளைவலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழலுற மூலகசு மாலமென நாறியுடல்
அழிவேனோ ?
நாலுமுக னாதியரி யோமென அதாரமுறை
யாதபிர மாவைவிழ மோதிபொரு ளோதுகென
நாலுசிர மோடுசிகை தூளிபட தாளமிடும
இளையோனே,
நாறிதழி வேணிசிவ ரூபகலி யாணிமுதல்
ஈணமக வானைமகிழ் தோழவன மீதுசெறி
ஞானகுற மாதைத்தினை காலில்மண மேவுபுகழ்
மயில்வீரா,
சூலமிடு தாடகைசு வாகுவளா ஏழுமரம்
வாலியொடு நீலிபக னோடொருவி ராதனெழு
மோதகட லோடுவிறல் ராவணகு ழாமமரில்
பொடியாக
ஓகைதழல் வாளிவிடு மூரிதநு நேமிவளை
பாணிதிரு மாபனரி கோனன்மரு காஎனவெ
ஓதமறை ராமெசுர மேவுகும ரா;அமரா
பெருமாளே !

---

11. வானோர் வழுத்துனது பாதார பத்மமலர்
மீதே பணிக்கும்வகை அறியாதே
மானார் வலைக்கணதி லேதூளி மெத்தையினி
லூடே அணைததுதவும் அதனாலே
தேனோ கருப்பிலெழு பாகோ இதற்கிணைகள்
ஏதோ வெனக்கலவி பலகோடி
தீரா மயக்கினொடு நாகா படத்திலெழு
சேருடல் பெற்றதுயர் ஒழியேனோ ?

மேனாடு பெற்றுவளர் சூராதி பற்கெதிரி
னூடேகி நிற்குமிரு கழலோனே,

மேகார வுக்ரபரி தானேறி வெற்றிபுனை
வீரா, குறசசிறுமி மணவாளா,

ஞானுப ரற்கினிய வேதாக மப்பொருளை
நானா துலைக்குமொரு பெரியோனே

நாரா யணற்குமரு கா; வீறு பெற்றிலகு
ராமே சுரதிலுறை பெருமானே !

---

12. அந்தோமன மேநம தாககையை
நம்பாதெஇ தாகித சூத்திரம
அம்போருகன் நாடிய பூட்டிது இனிமேல்நாம்

அஞ்சாதமை யாகிரி யாககையை
பஞ்சாடிய வேலவ னார்க்கியல்
அஙகாகுவம் வாஇனி தாககையை ஒழியாமல்

வந்தோமிது வேகதி ஆட்சியும்
இந்தாமயில் வாகனர் சீட்டிது
வந்தாளுவம் நாமென வீக்கிய சிவநீறும்

வந்தேவெகு வாநமை ஆட்கொளு
வந்தார்மத மேதினி மேற்கொள
மைந்தாகும ராவெனு மார்ப்புய மறவாதே

திந்தோதிமி தீதத மாத்துடி
தந்தாதன னாதன தாத்தன
செம்பூரிகை பேரிகை ஆர்த்தெழ மறையோதச்

செங்காடென வேவரு சூர்க்கரை
சங்காரசி காமணி வேற்கொடு
திண்டாடிம காமயில் மேற்கொளு முருகோனே,

இந்தோடிதழ் நாகம காக்கடல்
கஙகாளமி ஞர்சடை சூட்டிய
என்தாதைச தாசிவ கோத்திரன் அருள்பாலா,

எண்கூடரு ளால்நௌவி நோக்கியை
நன்பூமண மேவிசி ராப்பளி
என்பார்மன மேதினி நோக்கிய பெருமாளே!

---

13. சததி பாணீ நமோநம! முததி ஞானீ நமோநம!
ததவ வாதீ நமோநம! விந்துநாத

சதது ரூபா நமோநம! ரதந தீபா நமோநம!
தற்ப்ர தாபா நமோநம! என்றுபாடும்

பததி பூணு மலேஉல கத்தின் மாஞர் சவாதகில்
பசைசை பாட ரபூஷித கொஙகைமேல்வீழ்

பட்டி மாடா னநாஙுனே விட்டிராமே உலோகித
பதம சீபா தநீயினி வந்துதாராய்;

அதர தேவா யுதா, சுர ருக்ர சேஞு பதீ, சுசி
யாக்ய சோமா சியா, குரு சம்ப்ரதாயா,

அர்சச ஞவா கஞ, வய லிக்குள் வாழ்நாய கா, புய
அக்ஷ மாலா தரா, குற மஙகைகோவே,

சித்ர கோலா கலா, விர லக்ஷ்மி சாதா பதாபல
திக்கு பாலா, சிவாகம தந்தரபோதா

சிட்ட நாதா. சிராமலே அப்பர் ஸ்வாமீ மகாவ்ருத
தெர்ப்பை யாசா ரவேதியா தம்பிரானே!

---

14. பகலிரவினிற் றமொரு
பதிகுருவனத் தெளிபோத
ரகசியமுரைத் தநுபூதி
ரதநிலேதனைத் ... தருவாயே;

இகபரமதற் றிறையோனே,
இயலிசையின்முத தமிழோனே,
சகசிரகிரிப் பதிவேளே.
சரவணபவப் பெருமாளே !

---

15. புவனத தொருபொற் றொடிசிற் றுதரக்
கருவிற் பவமுற் றுவிதிப் படியிற
புணரா துக கசுகப் பயில்வுற் றுமரித திடிலாவி
புரியட் டகமிட் டதுகட் டியிறுக்
கடிகுத தெனஅச சம்விளைத் தலறப்
புரள்வித துவருத திமணற் செறிவித தனலூடே
தவனப் படவிட் டெயிரசெக் கிலசைத
தணிபற் களுதிரத தெரிசெப் புருவைத
தழுவப் பணிமுட் களில்கட் டியிசித திடவாய்கண
சலனப் படஎற் றியிறைச யிறுத
தயில்வித துமுரித துநெரித துளையத்
தளையிட் டெருத தும்யமப் ரகரத துயர்தீராய் ;
பவனத தையொடுக் குமனக கவலைப்
ப்ரமையற றைவகைப் புலனிற் கடிதிற
படரிச சையொழித ததவச சரியைக் கிரியையோகர்
பரிபக் குவர்கிட் டைகிவிர்த் தியினிற்
பரிசுத தர்விரத தாகருத ததனிற்
பரவப் படுசெய்ப் பதியிற் பரமக குருநாதா,
சிவனுத தமனித் தவுருத் திரன்முக்
கணனக் கன்மழுக கரனுக் ரரணத்
த்ரிபுரத் தையெரித் தருள்சிற் குணசிற் குணனுதி
செகவித் தனிசப் பொருள்சிற் பரனற்
புதனைப் பிலிஉற் பவ, பத் மதடத்
த்ரிசிரப் புரவெற் புறைசற் குமரப் பெருமாளே !

---

16. வாசித்துக் காணொ ணாதது
பூசித்துக கூடொ ணாதது
வாய்விட்டுப் பேசொ ணாதது நெஞ்சினாலே

மாசர்க்குத் தோணொ ணாதது
நேசர்க்குப் பேரொ ணாதது
மாயைக்குச சூழொ ணாதது விந்துநாத

ஓசைக்குத தூர மானது
மாகததுக கீற தானது
லோகததுக காதி யானது கண்டுநாயேன்

யோகததைச சேரு மாறுமெய்ஞ்
ஞானததைப் போதி யாயஇனி
ஊனததைப் போடி டாதும யஙகலாமோ ?

ஆசைப்பட் டேனல் காவல்செய்
வேடிசசிக காக மாமய
லாகிப்பொற் பாத மேபணி கந்தவேளே,

ஆலிததுச சேல்கள் பாய்வயல்
ஓரததிற் காள மோடடா
ஆரததைப் பூண்ம யூரது ரஙகவீரா,

நாசிக்குட் ப்ராண வாயுவை
ரேசிததெட் டாத யோகிகள்
நாடிற்றுக் காணொ ணாதென நின்றநாதா,

நாகததுச சாகை போயுயர்
மேகத்தைச சேர்சி ராமலை
நாதர்க்குச சாமி யே, சுரர் தம்பிரானே!

17\. சருவி இகழ்ந்து மருண்டு வெகுண்டுறு
சமயமும் ஒன்றிலை என்ற வரும்பறி
தலையரும் நின்று கலங்க விரும்பிய
தமிழ்கூறும்

சலிகையு நன்றியும் வென்றியு மங்கள
பெருமைக ளுங்கன மும்குண மும்பயில்
சரவண மும்பொறை யும்புக ழுமதிகழ்
தனிவேலும்

விருது துலங்க சிகண்டியில் அண்டரும்
உருகி வணங்க வரும்பத மும்பல
விதரண மும்திற மும்தர மும்தினை
புனமானின்

ம்ருகமத குங்கும கொங்கையில் நொந்தடி
வருடிம ணந்துபு ணர்ந்தது வும்பல
விஜயமும் அன்பின்மொ ழிந்துமொ ழிந்தியல்
மறவேனே ;

கருதிஇ லங்கை அழிந்துவி டும்படி
அவுணர்அ டங்கம டிந்துவி ழும்படி
கதிரவன் இந்து விளங்கி வரும்படி
விடுமாயன்

கடகரி அஞ்சி நடுங்கி வருந்திடு
மடுவினில் வந்துத வுமபுயல் இந்திரை
கணவன ரங்க முகுந்தன் வருஞ்சக
டறமோதி

மருது குலுங்கி நலங்க முனிந்திடு
வரதன லங்கல் புனைந்தரு ளுங்குறள்
வடிவன்நெ டுங்கடல் மங்கவொ ரம்புகை
தொடுமீளி

மருக, பு ரந்தர னுந்தவம் ஒன்றிய
பிரம புரந்தனி லும்குக னென்பவர்
மனதினி லும்பரி வொன்றிஅ மர்ந்தருள்
பெருமாளே !

---

**18.** சிந்துற்றெழு மாமதி அங்கித திரளாலே
தென்றற்றரு வாசமி குந்துற் றெழலாலே
அந்திப்பொழு தாகிய கங்குற் றிரளாலே
அன்புற்றெழு பேதைம யங்கித தனியாளுள் ;
நந்துற்றிடு வாரியை மங்கத திகழாயே
நஞ்சொத தொளிர் வேலினை யுந்திப் பொருவேளே,
சந்தக்கவி நூலினர் தம்சொற் கினியோனே,
சணைப்பதி மேவிய கந்தப் பெருமாளே !

**19.** தினமணி சாரங்க பாணி யெனமதிள் நீடு சால
தினகரன் எய்ந்த மாளி கையிலாரம்
செழுமணி சேர்ந்த பீடி கையிலிசை வாய்ந்த பாடல்
வயிரியர் சேர்ந்து பாட இருபாலும்
இனவளை பூணகை யாக வரியிட வேய்ந்து மாலே
புழுகதில் சாந்து பூசி அரசாகி
இனிதிறு மாந்து வாழும் இருவினை நீடு காயம்
ஒருபிடி சாமப லாகி விடலாமோ ?
வனசரர் ஏங்க வான முகடுற ஓங்கி ஆசை
மயிலொடு பாங்கி மார்கள் அருகாக
மயிலொடு மான்கள் சூழ வளவரி வேங்கை ஆகி
மலைமிசை தோன்று மாய வடிவோனே,
அனசமண் மூங்கர் கோடி கழுமிசை தூங்க நீறு
கருணைகொள் பாணடி நாடு பெறவேதக்
கவிதரு காந்த, பால, கழுமல பூந்த ராய
கவுணியர் வேந்த, தேவர் பெருமாளே !

20. பூமாதுர மேயணி மான்மறை
வாய்நாலுடை யோன்மலி வானவர்
கோமான்முநி வோர்முதல் யாரும்இ யம்புவேதம்

பூராயம தாய்மொழி நூல்களும
ஆராய்வதி லாதடல் ஆசுரா
போரால்மறை வாய்உறு பீதியின் வந்துகூடி

நீமா றருளாயென ஈசனை
பாமாலைக ளால்தொழு தேதிரு
நீரூர்தரு மேனிய தேன்இயல் கொன்றையோடு

நீரோர்தரு சானவி மாமதி
காகோதர மாதுளை கூவிளை
நேரோடம் விளாமுத லாசடை எம்பிரானே

போமாறினி வேறெது வோதென
வேயாரரு ளாலவ ரீதரு
போாவேலவ, நீலக லாவிஇ வர்ந்துநீடு

பூலோகமொ டேஅறு லோகமும்
நேரோர் நொடி யேவரு வோய், சுர
சேனாபதி யாயவ னே, உனை அன்பினோடும்

காமாவறு சோம ஸமானன,
தாமாமண மாதரு நீபசு
தாமாவென வேதுதி யாதுழல் வஞ்சனேனைக்

காவாய்அடி நாள சுரேசரை
யேசாடிய கூர்வடி வேலவ,
காரார்தரு காழியின் மேவிய தம்பிரானே !

**21.** அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு
ஆறு மாகிஓர் பால ரூபமாய்
அருமதலை குதலைமொழி தனில்உருகி அவருடைய
ஆயி தாதையார் மாய மோகமாய்
அருமையினில் அருமையிடமொளுமொளெனஉடல்வளர
ஆளு மேளமாய் வால ரூபமாய்
அவரொரு பெரியோராய்

அழகுபெறு நடைஅடைய கிறுதுபடு மொழிபழகி
ஆவி யாயவோர் தேவி மாருமாய்
விழுசுவரை அரிவையாகள் படுகுழியை நிலைமைஎன
வீடு வாசலாய் மாட கூடமாய
அணுவளவு தவிடுமிகள் பிதிரவிட மனமிறுகி
ஆசை ஆளராய் ஊசி வாசியாய்
அலியுறு சுடர்போலே

வெறுமிடியன் ஒருதவசி அமுதுபடை எனுமஅளவில்
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்முடுகி அவர்களொடு
சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய
விரகினொடு வருபொருள்கள் சுவறியிட மொழியும்ஒரு
வீணி யாசொலே மேல தாயிட
விதிதனை நினையாதே

மினுகுமினு கெனுமுடலம அறமுறுகி நெகிழ்வுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமையுள தெனும்அவரை விடும்விழலை அதனின்வரு
வார்கள் போகுவார் காணு மோஎனு
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசொலாய் ஆளி வாயராய்
மிடையுற வருநாளில்

வறுமைகளு முடுகிவர உறுபொருளு நழுவசில
    வாதம் ஊதுகா மாலை சோகைநோய
  பெருவயிறு வயிறுவலி படுவன்வர இருவிழிகள்
    பீளை சாறிடா ஈளை மேலிடா
  வழுவழென உமிழுமது கொழுகொழென ஒழுகிவிழ
    வாடி ஊனெலாம் நாடி பேதமாய்
                                        மனையவள் மனம்வேறாய்

மறுகமனை உறுமவாகள் நணுகுநணு கெனும்அளவில்
    மாதர் சீயெனு வாலா சீயெனு
  கனவுதனில் இரதமொடு குதிரைவர நெடியசுடு
    காடு வாவெனு வீடு போவெனு
  வலதழிய விரகழிய உரைகுழற விழிசொருகி
    வாயு மேலிடா ஆவி போகுநாள்
                                        மனிதர்கள் பலபேச

இறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழ
    ஏழை மாதராள் மோதி மேல்விழா
  எனதுடைமை எனதடிமை யெனுமறிவு சிறிதுமற
    ஈமொ லோவெனு வாயை ஆவெனு
  இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய
    ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய்
                                        எரிதனி லிடும் வாழ்வே

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
    ஏசி டார்களோ பாச நாசனே,
  இருவினையு மலமும்அற இறவியொடு பிறவியற
    ஏக போகமாய் நீயு நானுமாய்
  இறுகும்வகை பரமசுகம் அதனையருள் ; இடைமருதில்
    ஏக நாயகா, லோக நாயகா,
                                        இமையவர் பெருமானே !

22. படியையள விடுநெடிய கொண்டலும் சண்டனும்
தமரசது மறையமரா சஙகமும் சமபுவும்
பரவரிய நிருபன்விர கன்சுடும் சம்பனன்
செம்பொன்மேனிப்

பரமனெழில் புனையும்அர வங்களும் கஙகையும்
திருவளரும் மூளரியொடு திஙகளும் கொன்றையும்
பரியகுமி ழறுகுகன துமபையும் செம்பையும்
துன்றுமூலச்

சடைமுடியி லணியுநல சஙகரன் கும்பிடும்
குமரனறு முகவன்மது ரம்தரும் செஞ்சொலன்
சரவணையில் வருமுதலி கொநதகன் கநதனென
றுய்ந்துபாடித்

தணியவொலி புகலும்வித மொன்றிலும சென்றிலன்
பகிரஒரு தினையளவு பணபுகொண டணடிலன்
தவநெறியில் ஒழுகிவழி பணபடும் கஙகணம
சிந்தியாதோ ?

கடுகுபொடி தவிடுபட மந்திரம தந்திரம
பயிலவரு கிருதருட லம்பிளந தம்பரம
கதறிவெகு குருதிநதி பொஙகிடும சம்ப்ரமம்
கண்டுசேரக்

கழுகுநரி கொடிகருடன் அஙகெழுந் தெஙகுநின்
றலகைபல திமிலைகொடு தந்தனந் தந்தனங
கருதிஇசை பொசியுநசை கணடுகண டின்புறும்
துஙகவேலா,

அடல்புனையு மிடைமருதில் வந்திணங குமகுணம்
பெரியகுரு பர, குமர, சிந்துரம சென்றடங
கடவிதனி லுறைகுமரி சந்திலங குந்தனம் தங்குமார்பா,
அருணமணி வெயில்இலகு தண்டையம் பஙகயம்
கருணைபொழி வனகழலில் அந்தமும் தம்பமென்
றழகுபெற நெறிவருடி அண்டரும் தொண்டுறும்
தம்பிரானே!

— —

23. இந்துகதிர்ச சேர்அருணப் பந்திநடுத் தூவொளிபட்
டின்பரசப் பாலமுதச சுவைமேவும்

எணகுணமுற் றோன்நடனச சந்தரஒளிப் பீடகமுற்
றெநனைநடித தாடுமணிச சபையூடே

கந்தமெழுத் தோடுறுசிற் கெந்தமணப் பூவிதழைக்
கணடுகளித தேஅமுதக கடல்மூழ்கிக்

கந்தமதித தாயிரஎட் டணடமதைக கோலபுவனக
கணடமதைக் காணஎனக கருள்வாயே ;

திந்திமித தீதகுடட் டுணடுமிடட் டாடுடிட்
டிந்தமெனக காளமணித தவில்ஓசை

சிந்தைதிகைத தேழுகடற் பொஙகவரிச சூரமகுடச
செணடுகுலைத தாடுமணிக கதிர்வேலா,

குந்தியரித தாழ்துளபச செந்திருவைச சோகளபக
கொணடல்நிறத தோன்மகளைத தரைமீதே

கும்பிடகைத் தாளம்எடுத தம்பொனுருப் பாவைபுகழ்க்
கும்பகொணத தாறுமுகப் பெருமாளே!

---

24. மாலைதனில் வந்து வீதிதனில் நின்று
வாசமலர் சிந்து குழல்கோதி

வாரிருத னஙகள் பூணொடுகு லுஙக
மால்பெருகி நினற மடவாரைச

சாலைவழி வந்து போமவர்கள் நின்று
தாழ்குழல்கள் கண்டு தடுமாறித்

தாகமயல் கொண்டு மாலிருள்அ ழுந்தி
சாலமிக நொந்து தவியாமல்

காலையில் எழுந்துன் நாமமெமொ ழிந்து
காதல்உமை மைந்த எனவோதிக்
காலமும் உணாந்து ஞானவெளி கணகள்
காணஅரு ளென்று பெறுவேனோ?
கோலமுடன் அன்று சூர்படையின் முன்பு
கோபமுடன் நின்ற குமரேசா,
கோதைஇரு பங்கின் மேவவளா கும்ப
கோணநகா வந்த பெருமாளே!

---

**25.** உரத்துறை போதத தனியான
உனைசசிறி தோதத தெரியாது ;
மரததுறை போலுற றடியேனும்
மலததிருள் மூடிக் கெடலாமோ ?
பரததுறை சீலத தவர்வாழ்வே,
பணிததடி வாழ்வுற றருள்வோனே,
வரததுறை நீதர்க கொருசேயே,
வயித்திய நாதப் பெருமாளே!

---

**26.** எத்தனை கோடி கோடி விட்டிட லோடி ஆடி
எததனை கோடி போன தளவேதோ ?
இப்படி மோக போகம் இப்படி ஆகி ஆகி
இப்படி ஆவ தேது இனிமேலோ
சித்திடில் சீசி சீசி குத்திர மாய மாயை
சிக்கினி லாயு மாயும் அடியேனைச்
சித்தினில் ஆட லோடும் முத்தமிழ் வாணர் ஓது
சித்திர ஞான பாதம் அருள்வாயே ;

நித்தமும் ஓது வார்கள் சித்தமெ வீட தாக
நிர்த்தம தாடும் ஆறு முகவோனே,

நிட்கள ரூபா யாதி பசசுரு வான மூணு
நெட்டிலை சூல பாணி அருள்பாலா,

பைததலை நீடு மாயி ரத்தனை மீது பீறு
பத்திர பாத நீல மயில்வீரா,

பசிள பூக பாளை செய்க்கயல் தாவு வேளூர்
பற்றிய மூவா தேவா பெருமாளே!

---

27. மாலி னால்எடுதத கந்தல் சோறி னால்வ ளாதத பொந்தி
மாறி ஆடெடுதத சிந்தை அநியாய

மாயை யால்எ டுத்து மங்கி னேன்ஐ யாஎ னக்கி ரங்கி
வாரை யாஇ னிப்பி றந்து இறவாமல்

வேலி னால்வி னைக்க ணங்கள் தூள தாஎ ரிதது உன்றன்
வீடு தாப ரித்த அன்பர் கணம்ஊடே

மேவி யான்உ னைப்பொல் சிந்தை ஆக வேக ளிதது கந்த
வேளெ யாமெ னப்ப ரிந்து அருள்வாயே;

காலி னால்எ னப்ப ரந்த சூரர் மாள வெற்றி கொண்ட
கால பானு சததி அஙகை முருகோனே,

காம பாண மட்ட நந்த கோடி மாத ரைப்பு ணர்ந்த
காளை யேறு கர்தத னெந்தை யருள்பாலா,

சேலை நேர்வி ழிக்கு றம்பெண் ஆசை தோளு றப்பு ணர்ந்து
சீரை யோது பத்த ரன்பில் உறைவோனே,

தேவர் மாதர் சித்தர் தொண்டர் ஏக வேளூ ருக்கு கந்த
சேவல் கேது சுற்று கந்த பெருமாளே!

---

28. மூலா தாரமோ டேற்றி அங்கியை
ஆறு தாரமோ டோட்டி யந்திர
மூலா வாயுவை எற்று நன்சுழி முனையூடே

மூதா தாரம ரூப்பி லந்தர
நாதா கீதம தாரதி டும்பரம்
ஊடே பாலஒளி ஆதது மந்தனை விலகாமல்

மாலா டேஞுடு சோதகி தமபெற
நாஞு வாகம சாதகி ரஞுசொலும்
வாழ்ஞா ஞுபுரி எற்றி மந்திர தவிசூடே

மாதா நாதனும வீற்றி ருந்திடும
வீடே மூள்ஒளி காட்டி சநதிர
வாகா தேனமு தூட்டி என்றனை உடனுள்வாய் ;

சூலாள் மாதுமை சீர்த்த சம்பவி
மாதா ராபகல் காதத மைந்தனை
சூடோ டாவினை வாட்டி மைந்தரெ னெமையாளும்

தூயாள் மூவரை நாட்டும் எநதையர்
வேளுநா வாழ்வினை தீர்தத சஙகரர்
தோய்சா ரூபரொ டேற்றி ருந்தவள் அருள்பாலா,

வேலால் எழ்கடல் வீட்டி வஞ்சக
மூடார் சூரரை வாட்டி அந்தகன்
வீடு டேவிய காத்தி ரம்பரி மயில்வாழ்வே,

வேதா நால்தலை சீக்கொ ளும்படி
கோலா காலம தாட்டு மந்திர
வேலா, மால்மக ளார்க்கி ரங்கிய பெருமானே !

**29.** புவிபுனல் காலும் காட்டி சிகியொடு வானும் சேர்த்தி
புதுமன மானும் பூட்டி இடையூடே

பொறிபுலன் ஈரைந் தாககி கருவிகள் நாலும் காட்டி
புகல்வழி நாலைந் தாககி வருகாயம்

பவவினை நூறும் காட்டி சுவமதி தானும் சூட்டி
பசுபதி பாசம் காட்டி புலமாயப்

படிமிசை போவென் றோட்டி அடிமையை நீவந் தேத்தி
பரகதி தானும் காட்டி அருள்வாயே ;

சிவமய ஞானம் கேட்க தவமுநி வோரும் பார்க்க
திருநட மாடும சுூததா முருகோனே,

திருவளா மார்பன் போற்ற திசைமுக னும் போற்ற
செகமொடு வானம் காக்க மயிலேறிக்

குவடொடு சூரன் தோற்க எழுகடல் சூதம் தாக்கி
குதர்வடி வேலங் கோட்டு குமரேசா,

குவலயம் யாவும் போறற பழனியி லாலங் காட்டில்
குறமகள் பாதம போற்று பெருமானே !

---

**30.** வடிவது நீலம் காட்டி முடிவுள காலன் கூட்டி
வரவிடு தூதன் கோட்டி விடுபாசம்

மகனெடு மாமன் பாட்டி முதலுற வோரும் கேட்டு
மதிகெட மாயம் நீட்டி உயுயிர்போமுன்

படிமிசை தாளும் காட்டி உடல்உறு நோய்பண டேற்ற
பழவினை பாவம் தீர்த்துன் அடியேனைப்

பரிவொடு நாளும் காத்து விரிதமி ழாலங் கூர்த்த
பரபுகழ் பாடென் றாட்கொண் டருள்வாயே ;

முடிமிசை சோமன் சூட்டி வடிவுள ஆலங் காட்டில்
முதிர்நடம் ஆடும் கூததா புதல்வோனே,

முருகவிழ் தாரும் சூட்டி ஒருதனி வேழம் கூட்டி
முதல்மற மானின் சேர்ககை மயல்கூர்வாய்,

இடியென வேகம காட்டி நெடிதரு சூலம் தீட்டி
எதிரபொரு சூரன் தாகக வரஎகி

இலகிய வேல்கொண டாரதது உடலிரு கூறன் ருக்கி
இமையவா எதம தீரதத பெருமானே!

---

**31.** ஓல மிட்ட சுரும்பு தணு தணுஎன
வேசி ரததில் விழுமகை பளீர பளீரஎன
ஓசை பெறற சிலம்பு கலீர கலீரஎன
விரகலீலை

ஓரமி டறறில் எழுமபுள் குகூ குகூவென
வோவை மெதத எழுந்து சலா சலாவென
ரோம குச்சு நிறைந்து சிலீர சிலீரஎன
அமுதமாரன்

ஆல யததுள் இருந்து குபீர குபீர்என
வேகு திகக உடமபு விரீர விரீர்என
ஆர முத்தம் அணிந்து அளா வளாவென
மருவுமாதர்

ஆசை யிற்கை கலந்து சுமா சுமாபவு
சாக ரத்தில் அழுந்தி எழா எழாதுளம்
ஆறெழுத்தை நினைந்து குகா குகாவென
வகைவராதோ?

மாலை யிட்ட சிரங்கள் செவேல் செவேலென
வேலை மூசிய தரும்பல வெளேல வெளேலென
வாகை பெற்ற புயங்கள் கரேல் கரேலென
எதிர்கொள்சூரன்

மாறு மொக்க நெரிந்து கரீல் கரீலென
பேயகு திக்க நிணங்கள் குழு குழுவென
வாயபு தைத்து விழுந்து ஐயோ ஐயோவென
உதிரமாறாய்

வேலை வற்றி வறண்டு சுறீல சுறீலென
மாலை வெற்பும இடிந்து திடீல திடீலென
மேன்மை பெற்ற ஜனங்கள் ஐயா ஐயாவென
இசைகள்கூற

வேலெ டுத்து நடந்த திவா கராசல
வேடு வப்பெண மணந்த புயா சலா, தமிழ்
வேத வெற்பில் அமாந்த கருபா கரா, சிவ
குமரவேளே.

---

32. வேத வெற்பி லேபு னத்தில் மேவி நிற்கும் அபிராம
வேடு வச்சி பாத பத்ம மீது செச்சை முடிதோய
ஆத ரித்து வேளை புக்க ஆறி ரட்டி புயநேய
ஆத ரத்தொ டாத ரிக்க ஆன புத்தி புகல்வாயே;
காதும் உக்ர வீர பத்ர காளி வெட்க மகுடாமா
காச முட்ட வீசி விட்ட காலா பத்தி இமையோரை
ஓது வித்த நாதர் கற்க ஓது வித்த முனிநாண
ஓரெ ழுத்தி லாறெ ழுத்தை ஓது வித்த பெருமாளே!

---

33. எழுகுநிறை நாபி அரிபிரமா சோதி
இலகும்அரன் மூவா முதலானோர்

இறைவியெனு மாதி பரைமுலையின் ஊறி
எழும அமிர்தம நாறு கனிவாயா,

புழுகொழுகு காழி கவுணியரில் ஞான
புனிதன்என ஏடு தமிழாலே

புனலில்எதிர் ஏற சமணர்கழு ஏற
பொருதகவி வீர குருநாதா,

மழுவுழைக பால டமரகதரி சூல
மணிகரவி நோதர் அருள்பாலா,

மலரயனை நீடு சிறைசெய்தவன் வேலை
வளமைபெற வேசெய முருகோனே,

கழுகுதொழு வேத கிரிசிகரி வீறு
கதிர்உலவு வாசல் நிறைவானோர்

கடலொலிய தான மறைதமிழ்கள் ஓது
கதலிவனம மேவு பெருமானே !

---

34. சூழும்வி னைக்கட் டுன்பநெ டுமேபிணி கழிகாமம்
சோரமி தறகுச சிந்தைநி னைந்துறு துணையாரே ?
எழையெ னிததுக் கஙகளு டனதினம் உழல்வேனோ ?
எதமஅ கறறிச செம்பத சிந்தனை தருவாயே;
ஆழிய டைத்துத தஙகையி லஙகையை எழுநாளே
ஆணமைசெ லுததிக் கொணடக ரும்புயல் மருகோனே,
வேழமு கற்குக தம்பிஎ னும்திரு முருகோனே,
வேத வனததிற் சங்கரர் தந்தருள் பெருமானே !

---

35. ஒருவரைச் சிறுமனைச் சயனமெத் தையினில்வைத்
தொருவரைத் தமதலைக் கடையினிற் சுழலவிட்
டொருவரைப் பரபரப் பொடுதெருத் திரியவிட்
டதனாலே

ஒருவருக் கொருவர்சக் களமையிற் சருவவிட்
டுருவுபத் திரமெடுத் தறையின்மற் புரியவிட்
டுயிர்பிழைப் பதுகருத் தளவிலுச் சிதமெனச்
செயுமானார்

தருமயற் ப்ரமைதனிற் றவநெறிக் கயலெனச்
சரியையிற் கிரியையிற் றவமுமற் றெனதுகைத்
தனமவத் தினிலிறைத் தெவருமுற் றிகழ்வுறத்
திரிவேனைச்

சகலதுக் கமுமறச் சகலசற் குணமவரத்
தரணியிற் புகழ்பெறத் தகைமைபெற் றுனதுபொற்
சரணமெப் பொழுதுநட் பொடுநினைத் திடஅருட்
டருவாயே ;

குருமொழித் தவமுடைப் புலவரைச் சிறையில்வைத்
தறவுமஉக் கிரமவினைத் திடுமரக் கரைமுழுக்
கொடியதுர்க் குணஅவத் தரைமுதற் றரிசறுத்
திடுமவேலா,

குயில்மொழிக் கயல்விழித் துகிரிதழ்ச் சிலைநுதற்
சசிமுகத் திளநகைக் கனகுழற் றனகிரிக்
கொடியிடைப் பிடிநடைக் குறமகட் டிருவினைப்
புணர்வோனே,

கருதுசட் சமயிகட் கமைவுறக் கிறியுடைப்
பறிதலைச் சமணரைக் குலமுதற் பொடிபடக்
கலகமிட் டுடலுயிர்க் கழுவினுச் சியினில்வைத்
திடுவோனே,

கமுகினிற் குலையறக் கதலியிற் கனிஉகக்
கழையின்முத் தமுதிரக் கயல்குதித் துலவுநற்
கனவயற் றிகழ்திருக் கரபுரத் தறுமுகப் பெருமானே!

**36.** நிகரில் பஞ்ச பூதமும் நினையு நெஞ்சும் ஆவியும்
நெகிழ வந்து நேர்படும் அவிரோதம்

நிகழ்த ரும்ப்ர பாகர நிரவ யம்ப ராபர
நிருப அநகு மாரவெ ளனவேதம்

சகர சங்க சாகரம எனமு ழங்கு வாதிகள்
சமய பஞ்ச பாதகா அறியாத

தனிமை கண்ட தானகிண கிணிய தண்டை சூழ்வன
சரண புண்ட ரீகம தருள்வாயே;

மகர விம்ப சீகர முகர வங்க வாரிதி
மறுகி வெந்து வாய்விட நெடுவான

வழிதி றந்து சேனையும் எதிரம லைந்த சூரனும
மடிய இந்தி ராதியர் குடியேற

சிகர துங்க மால்வரை தகர வென்றி வேல்விடு
சிறுவ, சந்த்ர சேகரா பெருவாழ்வே,

திசைதொ றும்ப்ர பூபதி திசைமு கன்ப ராவிய
திருவி ரிஞ்சை மேவிய பெருமாளே!

---

**37.** மருவும் அஞ்சு பூதம் உரிமை வந்தி டாது
மலமறு தென்று போட அறியாது

மயல்கொள் இந்த வாழ்வு அமையும எந்த நாளும்
வகையில் வந்தி ராத அடியேனும்

உருகி அன்பி னோடு உனைநி னைந்து நாளும்
உலக மென்று பேச அறியாத

உருவம் ஒன்றி லாத பருவம் வந்து சேர
உபய துங்க பாதம் அருள்வாயே;

அரிவி ரிஞ்சர் தேட அரிய தம்பி ரானும்
அடிப ணிந்து பேசி கடையூடே

அருளு கென்ற போது பொருளி தென்று காண
அருளும் மைந்த ஆதி குருநாதா,

திரியும் உம்பர் நீடு கிரி பிளந்து சூரா
செரு அடங்க வேலை விடுவோனே,

செயல்அ மைந்த வேத தொனிமு ழங்கு வீதி
திருவி ரிஞ்சை மேவு பெருமாளே !

---

**38.** குடத்தைத் தகர்த்துக் களிற்றைத் துரத்திக்
குவட்டைச்செ றுத்துக் கச்சாலக்

குலத்தைக் குமைத்துப் பகட்டிச்செ ருக்கிக்
குருத்தத்து வத்துத் தவாசோரப்

புடைத்துப்ப ணைத்துப் பெருக்கக்க தித்துப்
புறப்பட்ட கச்சுத் தனமாதர்

புணர்ச்சிச்ச முத்ரத் திளைப்பற்றி ருக்கப்
புரித்துப்ப தத்தைத் தருவாயே;

கடத்துப்பு னத்துக் குறத்திக்கு மெத்தக்
கருத்திச்சை யுற்றுப் பரிவாகக்

கனக்கப்ரி யப்பட் டகப்பட்டு மைக்கட்
கடைப்பட்டு நிற்கைக் குரியோனே,

தடத்துற்ப வித்துச் சுவர்க்கத்த லத்தைத்
தழைப்பித்த கொற்றத் தனிவேலா,

தமிழ்க்குக் கவிக்குப் புகழ்ச்செய்ப் பதிக்குத்
தருக்கற் குடிக்குப் பெருமாளே !

39. சிகர மருந்த வாழ்வது சிவஞானம்
சிதறி அலைந்து போவது செயலாசை
மகர நெருங்க வீழ்வது மகமாய
மருவி நினைந்தி டாவருள் புரிவாயே ;
அகர நெருங்கி ஞமயம உறவாகி
அவச மொடுஙகை யாமொருமெ முனமேகிக்
ககனம இசைநத சூரியா புகமாயை
கருணை பொழிந்து மேவிய பெருமானே !

---

40. எருவாய கருவாய் தனிலே உருவாய்
இதுவே பயிராய் விளைவாகி
இவாபோய் அவராய் அவர்போய் இவராய்
இதுவே தொடாபாய் வெறிபோல
ஒருதாய் இருதாய் பலகோ டியதாய்
உடனே அவமாய் அழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா எனஓ தருள்தாராய் ;
முருகா எனஓா தரமோ தடியாா
முடிமேல் இணைதாள் அருள்வோனே,
முநிவோர் அமரோர் முறையோ எனவே
முதுசூா உரமேல் விடும்வேலா,
திருமால் பிரமா அறியா தவர்சீர்
சிறுவா, திருமால் மருகோனே,
செழுமா மதில்சேர் அழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் பெருமானே !

---

41. இபமாந்தர் சக்ர பதிசெறி
படையாண்டு சக்ர வரிசைகள்
இடவாழ்ந்து திக்கு விசயமண அரசாகி

இறுமாந்து வட்ட அணைமிசை
விரிசாந்து வெற்றி மலர்தொடை
எழில்ஆர்ந்த பட்டி வகைபரி மளலேபம்

தபனுங்க ரதந அணிகலன்
இவைசேர்ந்த விசசு வடிவது
தமர்சூழ்ந்து மிகக உயிர்நழு வியபோது

தழல்தாங்கொ ளுததி இடஒரு
பிடிசாமபல் பட்ட தறிகிலர்
தனவாஞ்சை மிகவுன் அடிதொழ நினையாரே ;

உபசாந்த சிதத குருகுல
பவபாணட வர்கரு வரதன்மை
உருவோன்ப்ர சிதத நெடியவன் ரிஷிகேசன்

உலகீன்ற பசசை உமையணன்
வடவேங்க டததில் உறைபவன்
உயர்சாங்க சகர கரதலன் மருகோனே,

திரிபுராந்த கற்கு வரசுத,
ரதிகாந்தன் மைதது னமுருக.
திறல்பூண்ட சுப்ர மணிய,ஷண முகவேலா,

திரைபாய்ந்த பதம தடவய
லியில்வேந்த, முததி அருள்தரு
திருவாஞ்சி யததில் அமரர்கள் பெருமானே

42. மூல முண்டகனு பூதி மந்திரப
ராப ரஞ்சுடர்கள் மூணு மண்டலமு
தார சந்திமுகம ஆறும இந்தரதரு வுந்தளாமேல்

மூது ரம்பலவர் பீட மந்தமுமறி
லாத பாத ஒளி ஆயி ரங்கிரண
மூணும இந்து ஒளிர் சோதி விண்படிக விந்துநாதம்

ஓல மென்றுபல தாள சந்தமிடு
சேவை கண்டமுழை வாரி உண்டுலகி
ரேழு கண்டு விளையாடி இந்துகதிர் அங்கிசூலம்

ஓடு மந்தகலி காலொ டுங்கநடு
தூணில தங்கஅரி ஞான வண்கயிறு
மீத ணைந்துசத கோடி சந்தரஒளி சந்தியாதோ ?

சூலி அந்தரிக பாலி சங்கரிபு
ராரி யமபரிகு மாரி எண்குணசு
வாமி பங்கிசிவ காம சுந்தரிஉ கந்தசேயே,

சூர சங்கர, குமார, இந்திரச
காய, அன்பருப கார, சுந்தரகு
காள னுஞ்சுருதி ஓலம ஒன்றநட னங்கொள்வேலா,

சீல வெண்பொடிஇ டாத வெஞ்சமணர்
மாள வெங்கழுவில் ஏறும் என்றுபொடி
நீறி டுங்கமல பாணி, சந்த்ரமுக, கந்தவேளே,

தேவ ரம்பைஅமு தீண மங்கைதரு
மான ணைந்தபுய தீர சங்கரதி
யாகர் வந்துறைந லூர்அ மர்ந்துவளர் தம்பிரானே !

43. தோல்எ லும்பு சீந ரம்பு பீளை துன்று கோழை பொங்கு
சோரி பிண்ட மாயு ருண்டு வடிவான

தூல பங்க காயம் வம்பி லேசு மந்து நான்மெ லிந்து
சோரு மிந்த நோய கன்று துயராற

ஆலம்உண்ட கோன்அ கண்ட லோகம உண்ட மால்வி ரிஞ்சன்
ஆர ணங்கள் ஆக மங்கள் புகழ்தாளும்

ஆன னங்கள் மூவி ரண்டும் ஆறி ரண்டு தோளும் அங்கை
ஆடல் வென்றி வேலும் என்று நினைவேனோ ?

வால சந்த்ர சூடி சந்த வேத மந்த்ர ரூபி அம்பை
வாணி பஞ்ச பாணி தந்த முருகோனே,

மாயை ஐந்து வேகம் ஐந்து பூதம் ஐந்து நாதம் ஐந்து
வாழ்பெ ருஞ்ச ராச ரங்கள உறைவோனே,

வேலை அன்பு கூர வந்த ஏக தந்த யானை கண்டு
வேடர் மங்கை ஓடி அஞ்ச அணைவோனே,

வீர மங்கை வாரி மங்கை பாரின் மங்கை மேவு கின்ற
மேரு மங்கை ஆள வந்த பெருமாளே !

---

44. சுருதி மறைகள் இருநாலு திசையில் அதிபர் முனிவோர்கள்
துகளில் இருடி எழுபேர்கள் சுடர்மூவர்

சொலவில் முடிவில் முகியாத பகுதி புருடர் நவநாதர்
தொலைவில் உடுவின் உலகோர்கள் மறையோர்கள்

அரிய சமய மொருகோடி அமரர் சரணர் சதகோடி
அரியும அயனும் ஒருகோடி இவர்கூடி

அறிய அறிய அறியாத அடிகள் அறிய அடியேனும்
அறிவுள் அறியும் அறிவூற அருள்வாயே ;

வரைகள் தவிடு பொடியாக நிருதர் பதியும் அழிவாக
மகர சலதி அளறாக முதுசூரும்

மடிய அலகை நடமாட விஜய வனிதை மகிழ்வாக
மவுலி சிதறி இரைதேடி வருநாய்கள்

நரிகள் கொடிகள் பசியாற உதிர நதிகள் அலைமோத
நமனும் வெருவி அடிபேண மயிலேறி

நளின உபய கரவேலை முடுகு முருக, வடமேரு
நகரி உறையும் இமையோர்கள் பெருமாளே !

---

**45.** கலகலெ னச்சில கலைகள் பிதறுவ
தொழிவ துனைச்சிறி துரையாதே

கருவழி தத்திய மடுவ தனிற்புகு
கடுநர குக்கிடை இடைவீழா

உலகு தனிற்பல பிறவி தரித்தற
உழல்வது விட்டினி அடிநாயேன்

உனதடி மைத்திரள் அதனினும் உட்பட
உபய மலர்ப்பதம் அருள்வாயே ;

குலகிரி பொட்டெழ அலைகடல் வற்றிட
நிசிசர னைப்பொரு மயில்வீரா,

குணதர, வித்தக, குமர, புனத்திடை
குறமக ளைப்புணர் மணிமார்பா,

அலைபுன லிற்றவழ் வளைநில வைத்தரு
மணிதிரு வக்கரை உறைவோனே,

அடியவ ரிச்சையில் எவையெவை உற்றன
அவைதரு வித்தருள் பெருமாளே !

46. திருமொழி உரைபெற அரனுன துழிபணி
செயமுனம் அருளிய குளவோனே,
திறல்உயர் மதுரையில் அமணரை உயிர்கழு
தெறிபட மறுகிட விடுவோனே,
ஒருவரும் உனதருள் பரிவிலா அவர்களின்
உறுபடர் உறுமெனை அருளவாயோ ?
உலகினில் அனைவர்கள் புகழ்வுற அருணையில்
ஒருநொடி தனிலவரு மயிலவீரா,
கருவரி உறுபொரு கணைவிழி குறமகள்
கணின்எதிர் தருவென முனமஆனாய்,
கருமுகில் பொருநிற அரிதிரு மருமக,
கருணையில் மொழிதரு முதலவோனே,
முருகலர் தருஉறை அமரர்கள் சிறைவிட
முரணுறும அசுரனை முனிவோனே,
முடிபவர் வடிவறு சுசிகர முறைதமிழ்
முதுகிரி வலம்வரு பெருமானே !

---

47. மனமெ னும்பொருள் வானறை கால்கனல்
புனலு டன்புவி கூடிய தோருடல்
வடிவு கொண்டதி லேபதி மூணெழு வகையாலே
வருசு கம்துயர் ஆசையி லேயுழல்
மதியை வென்றுப ராபர ஞானநல்
வழிபெ றும்படி நாயடி யேனைநின் அருள்சேராய்;
செனனி சஙகரி ஆரணி நாரணி
விமலி எண்குண பூரணி காரணி
சிவைப ரம்பரை ஆகிய பார்வதி அருள்பாலா,
சிறைபு கும்சுரர் மாதவர் மேல்பெற
அசுரர் தங்கிளை யானது வேரற
சிவன்உ கந்தருள் கூர்தரு வேல்விடு முருகோனே,

கனகன அங்கையி னலறை தூணிடை
மனித சிங்கம தாய்வரை பார்திசை
கடலக லங்கிட வேபொரு தேஉகி முனையாலே
கதற வென்றுடல் கீணவ னுருயிர
உதிர முமசித ருதமு தாயுணு
கமல வுந்திய னகிய மாலதிரு மருகோனே,
தினக ரன்சிலை வேளருள மாதவா
சுராகள் இந்திர னுருர காதிபர்
திசைமு கனசெழு மாமறை யோாபுகழ் அழகோனே,
திரும டந்தையா நாலிரு வோாநிறை
அகமொ டமபொனின ஆலய நீடிய
சிவபு ரந்தனில் வாழ்குரு நாயக, பெருமானே!

---

48. அருவரை எடுதத வீரன எரிபட விரற்க ளூனும்
அரனிட மிருககும ஆயி அருள்வோனே,
அலை கடல அடைதத ராமன் மிகமன மகிழ்சசி கூரும்
அணிமயில நடததும ஆசை மருகோனே,
பருதியின ஒளிககண வீறும அறுமுக, நிரைதத தோளப
னிருகரம் மிகுதத பார முருகா, நின்
பதமலா உளத்தில நாளும நினைவுறு கருதகர் தாள்கள்
பணியவும எனககு ஞானம் அருள்வாயே;
சுருதிகள் உரைதத வேதன் உரைமொழி தனககுள் ஆதி
சொலுமென உரைதத ஞான குருநாதா,
சுராபதி தழைதது வாழ அமாசிறை அனைதது மீள
துணிபட அரககா மாள விடும்வேலா,
மருமலா மணககும் வாசம் நிறைதரு தருக்கள் சூழும்
வயலபுடை கிடககும் நீல மலர்வாவி
வளமுறு தடததி னூடு சரஸ்வதி நதிக்கண் வீறு
வயிரவி வனத்தில் மேவு பெருமானே!

---

49. தவர்வாட் டோமர சூலம் தரியாக் காதிய சூரும்
தணியாச சாகர மேழும் கிரியேழும்
சருகாக் காய்கதிர் வேலும பொருகாற் சேவலு நீலம்
தரிகூத தாடிய மாவும் தினைகாவல்
துவர்வாய்க் கானவா மானும் சுரநாட் டாளொரு தேனும்
துணையாத தாழ்வற வாழும் பெரியோனே,
துணையாய்க் காவல்செய் வாயென் றுணராப் பாவிகள்
பாலும் தொலையாப் பாடலை யானும புகலவோ ?
பவமாய்த தாணது வாகும் பனைகாய்த தேமண நாறும்
பழமாய்ப் பார்மிசை வீழும் படிவேதம்
படியாப் பாதகர் பாயன் றியுடாப் பேதைகள் கேசம்
பறிகோப் பாளிகள் யாரும கழுவேறச
சிவமாய்த தேனமு தூறும் திருவாக காலொளி சோவெண்
டிருநீற் றுலம ராடும் சிறியோனே,
செழுநீச சேய்நதி யாரம கொழியாக கோமளம் வீசும்
திருவோத தூர்தனில் மேவும பெருமாளே !

---

50. அணிசெவ்வி யாதிரை சூழ்புவி
தனநிவ்வி யேகரை எறிட
அறிவில்லி யாமடி யேனிடா அதுதீர
அருள்வல்லை யோநெடு நாளினம்
இருளில்லி லேயிடு மோவுன
தருளில்லை யோஇன மானவை அறியேனே ;
குணவில்ல தாமக மேரினை
அணிசெல்வி ஆய்அரு ளுசல
குருவல்ல மாதவ மேபெறு குணசாத
குடிவில்ல மேதரு நாளெது
மொழிநல்ல யோகவ ரேபணி
குணவல்ல வா,சிவ னே,சிவ குருநாதா,

பணிகொள்ளி மாகன பூதமொ
டமாகள்ளி கானக நாடக
பரமெல்லி யாபர மேஸ்வரி          தருகோவே,
படரல்லி மாமலா பாணம
துடைவிலலி மாமத னானை
பரிசெல்வி யார்மரு காசுர          முருகேசா,
மணமுல்லை யாகி நகாகன
தனவல்லி மோகன மோடமர்
மகிழ்தில்லை மாநட மாடினா          அருள்பாலா,
மருமலலி மாவன நீடிய
பொழில்மெல்லி காவன மாடமை
வடமுலலை வாயிலில் மேவிய          பெருமாளே!

---

51. அண்டாபதி குடியேற மணடசுரர் உருமாற
அணடாமன மகிழ்மீற          அருளாலே
அந்தரியொ டுடனாடு சஙகரனு மகிழ்கூர
ஐஙகரனு முமையாளும்          மகிழ்வாக
மண்டலமும முனிவோரும் எணடிசையில் உளபேரும்
மஞ்சினனும அயனாரும          எதிர்காண
மஙகையுடன் அரிதானும் இன்பமுற மகிழ்கூர
மைந்துமயில் உடன்ஆடி          வரவேணும்;
புணடரிக விழியாள; அணடர்மகள் மணவாள,
புந்திநிறை அறிவாள,          உயாதோளா,
பொஙகுகடல் உடனாகம் விணடுவரை இகல்சாடு
பொன்பரவு கதிாவீசு          வடிவேலா,
தணடரள மணிமாப, செம்பொன்எழில் செறிரூப,
தண்டமிழின் மிகுநேய,          முருகேசா,
சந்ததமும் அடியாகள் சிந்தையது குடியான
தண்சிறுவை தனில்மேவு          பெருமாளே!

---

52. சீதள வாரிஜ பாதா நமோநம!
நாரத கீதவி நோதா நமோநம!
சேவல மாமயில் ப்ரீதா நமோநம! மறைதேடும்

சேகர மானப்ர தாபா நமோநம!
ஆகம சாரசொ ரூபா நமோநம!
தேவர்கள் சேனைம கீபா நமோநம! கதிதோயப்

பாதக நீவுகு டாரா நமோநம!
மாவசு ரேசக டோரா நமோநம!
பாரினி லேஜய வீரா நமோநம! மலைமாது

பார்வதி யாள்தரு பாலா நமோநம!
நாவல ஞானம னோலா நமோநம!
பாலகு மாரசு வாமீ நமோநம! அருள்தாராய்;

போதக மாமுக னேரான சோதர.
நீறணி வேணியர் நேயாப்ர பாகர,
பூமக ளாமரு கேசா,ம கோததி யிகல்சூரா,

போதக மாமறை ஞானாத யாகர,
தேனவிழ் நீபந றுவாரு மார்பக,
பூரண மாமதி போலாறு மாமுக முருகேசா,

மாதவர் தேவர்க ளோடேமு ராரியும்
மாமலா மீதுறை வேதாவு மேபுகழ்
மாநில மேழினு மேலான நாயக, வடிவேலா,

வானவ ரூரினும் வீறுகி வீறள
காபுரி வாழ்வினு மேலாக வேதிரு
வாழ்சிறு வாபுரி வாழ்வே,சு ராதிபர் பெருமாளே!

53. பிறவி யான சடம் இறங்கி வழியி லாத துறைசெ றிந்து
பிணிக ளான துயர்உ ழன்று தடுமாறிப்

பெருகுதீயவினையி னொந்துகதிகள் தோறுமலை பொருந்தி
பிடிப டாத ஜனனம நம்பி அழியாதே

நறைவி ழாத மலர்மு கந்த அரிய மோன வழிதி றந்த
நளின பாதம் எனது சிந்தை அகலாதே

நரர்சு ராதி பரும்வ ணங்கும் இனிய சேவை தனைவி ரும்பி
நலன தாக அடியன் என்று பெறுவேனோ ?

பொறிவ ழாத முநிவர் தங்கள் நெறிவ ழாத பிலன்உ ழன்று
பொருநி சாச ரனைநி னைந்து வினைநாடிப்

பொருவிலாமல் அருள்புரிந்துமயிலினேறிநொடியில்வந்து
புளக மேவ தமிழ்பு னைந்த முருகோனே,

சிறுவ ராகி இருவ ரந்த கரிப தாதி கொடுபொ ருஞ்சொல்
சிலையி ராம னுடன்எ திர்ந்து சமராடிச

செயம தான நகர மர்ந்த அளகை போல வளமி குந்த
சிறுவை மேவி வரமி குந்த பெருமாளே !

---

54. விரகற நோக்கியும் உருகியும் வாழ்த்தியும்
விழிபுனல் தேக்கிட அன்புமேன்மேல்

மிகவுமஇ ராப்பகல் பிறிதுப ராக்கற
விழைவுகு ராப்புனை யுங்குமாரா,

முருக,ஷ டாக்ஷர, சரவண, கார்த்திகை
முலைநுகர் பார்த்திப, என்றுபாடி

மொழிகுழ றத்தொழு தழுதழு தாட்பட
முழுதும்அ லாப்பொருள் தந்திடாயோ ?

பரகதி காட்டிய விரகசி லோசசய
 பரமப ராக்ரம சம்பராரி

படவிழி யாற்பொரு பசுபதி போற்றிய
 பகவதி பார்ப்பதி தந்தவாழ்வே.

இரைகடல் தீப்பட நிசிசரர் கூப்பிட
 எழுகிரி ஆர்ப்பெழ வென்றவேலா,

இமையவர் நாட்டினில் நிறைகுடி எற்றிய
 எழுகரை நாட்டவர் தம்பிரானே !

---

**55.** கூசா தேபாரா எசா தேமால்
 கூறு நூல்கற றுளம்வேறு

கோடா தேவேல பாடா தேமால்
 கூர்கூ தாளத தொடைத்தாளில

வீசா தேபோ பேசா தேசீர்
 வேதா தீதக கழல்மீதே

வீழா தேபோய் நாயேன் வாணாள்
 வீணே போகத தகுமோதான் ?

நேசா, வானோர் ஈசா, வாமா,
 நீபா, கானப் புனமானை

நேர்வா யார்வாய், சூர்வாய் சாவாய்
 நீள்கார் சூழ்கற் பகசாலத

தேசா தீனா; தீனர் ஈசா,
 சீரா ரூரிற் பெருவாழ்வே,

சேயே, வேளே, பூவே கோவே,
 தேவே, தேவப் பெருமானே !

---

56. பாலோ தேனே பாகோ வானோர்
பாரா வாரத தமுதேயோ
பாரோர் சீரோ வேளேர் வாழ்வோ
பானே வான்முத தெனாநீளத்
தாலோ தாலே லோபா டாதே
தாய்மார் நேசத் துனுசாரம்
தாரா தேபேர் ராயா தேபே
சாதே எசத் தருமோதான் ?
ஆலோல கேளா மேலோர் நாணமால்
ஆனே தேனற புனமேபோய்
ஆயாள் தாள்மேல் வீழா வாழா
ஆளா வேளைப் புகுவோனே,
சேலோ டேசோ ஆரால் சாலா
சீரா ரூரிற் பெருவாழ்வே,
சேயே, வேளே, பூவே கோவே,
தேவே, தேவப் பெருமானே !

---

57. நீதானெத தனையாலும் நீடேழி க்ருபையாகி
மாதானத தனமாக மாஞானக கழல்தாராய் ;
வேதாமைத் துனவேளே, வீரா,சற் குணசீலா,
ஆதாரத தொளியானே, ஆரூரிற் பெருமானே !

---

**58.** அமல கமலஉரு சஙகம் தொனிததமறை
அரிய பரமவெளி எஙகும் பொலிததசெயல்
அளவும் அசலமது கணடங கொருததாஉள
வறியாத
தகர முதலுருகொ ளோம்பர் தொராக்ஷரமொ
டகில புவனநதி அண்டங களுக்குமுதல்
அருண கிரணஒளி எஙகெங குமஉற்றுமுதல்
நடுவான
கமல துரியமதில் இந்தும் கதிர்ப்பரவு
கனக நிறம்உடைய பணபம் படிக்கதவ
ககன சுழிமுனையில் அஞ்சும் களிததமுத
சிவயோகம்
கருணை யுடன்அறிவி தஙகொண டிடககவுரி
குமர குமரகுரு என்றென் றுரைப்பமுது
கனிவு வரஇளமை தந்துன் பததில்எனை
அருள்வாயே ;
திமிலை பலமுருடு திந்திந் திமிததிமித
டுமுட டுமுடுமுட டுணடுண டுமுட்டுமுட
திகுட திகுடதிகு திநதிந் திகுர்ததிகுர்த
திகுதீதோ
செகண செகணசெக செஞ்செஞ் செகக்கணென
அகிலம் உரகன்முடி அணடம பிளக்கவெகு
திமிர்த குலவிருது சஙகம் தொனித்தசுரர்
களமீதே
அமரர் குழுமிமலா கொணடங் கிறைததருள
அரிய குருகுகொடி எஙகும் தழைததருள
அரியொ டயன் முனிவா அண்டம் பிழைததருள
விடும்வேலா,
அரியின் மகள்தனமொ டஙகம் புதைககமுக
அழகு புயமொடணை இன்பங களித்துமகிழ்
அரிய மயில்அயில்கொ டிந்தம் பலததின்மகிழ்
பெருமாளே !

59. வேதத்திற் கேள்வி இலாதது
போதத்திற் காண ஒணாதது
வீசத்திற் றூர மிலாதது களியாளர்

வீதித்துத் தேடரி தானது
ஆதித்தற் காய வொணாதது
வேகத்துத் தீயில் வெகாதது சுடர்கானம்

வாதத்துக் கேஅவி யாதது
காதத்திற் பூவியல் ஆனது
வாசத்திற் பேரொளி யானது மதம்ஊறு

மாயத்திற் காய மதாசல
தீதர்க்குத் தூரம தாகிய
வாழ்வைச்சற் காரம தாஇனி அருள்வாயே;

காதத்திற் காயம தாகும
தீதித்தித் தீதிது தீதென
காதற்பட் டோதியு மேவிடு கதிகாணர்

காணப்பட் டேகொடு நோய்கொடு
வாதைப்பட் டேமதி தீதக
லாமற்கெட் டேதடு மாறிட அடுவோனே,

கோதைப்பித தாயொரு வேடுவ
ரூபைப்பெற் றேவன வேடுவர்
கூடத்துக கேகுடி யாய்வரு முருகோனே,

கோதிற்பத தாரொடு மாதவ
சீலசித்த தாதியர் சூழ்தரு
கோலகுற் றுலமஉ லாவிய பெருமானே!

60. பஞ்சபுல னும்பழைய ரண்டுவினை யும்பிணிகள்
பஞ்செனஎ ரிந்துபொடி அஙகமாகிப்
பண்டறவு டன்பழைய தொண்டர்களு டன்பழகி
பஞ்சவர்வி யன்பதியு டன்குலாவக்
குஞ்சரமு கன்குணமொ டந்தவனம் வந்துலவு
கொஞ்சியசி லம்புகழல் விந்துநாதம்
கொஞ்சமயி லின்புறமெல் வந்தருளி என்கவலை
கொன்றருள்நி றைந்தகழல் இன்றுதாராய் ;
எஞ்சியிடை யுஞ்சுழல அம்புவிழி யுஞ்சுழல
இன்பரச கொஙகைகர முஙகொளாமல்
எந்தஉடை சிந்தபெல மிஞ்சியமு தம்புரள
இந்துநுத லும்புரள கஙகுல்மேகம்
அஞ்சுமள கம்புரள மென்குழைக ளும்புரள
அம்பொனுரு மஙகைமணம உண்டபாலா,
அன்பர்குல வுந்திருநெ டுங்களவ ளம்பதியில்
அண்டரய னும்பரவு தம்பிரானே !

---

61. ஆசார ஈனக குதர்க்க துட்டர்கள்
மாதாபி தாவைப் பழித்த துட்டர்கள்
ஆமாவின் ஊனைச செகுத்த துட்டர்கள் பரதாரம்
ஆகாதெ னாமற் பொசித்த துட்டர்கள்
நானாஉ பாயச சரித்ர துட்டர்கள்
ஆவேச நீரைக குடித்த துட்டர்கள் தமியோர்சொம்
கூசாது சேரப் பறித்த துட்டர்கள்
ஊரார்கள் ஆசைப் பிதற்று துட்டர்கள்
கோலால வாழ்விற் செருக்கு துட்டர்கள் குருசேவை
கூடாத பாவத் தவத்த துட்டர்கள்
ஈயாது தேடிப் புதைத்த துட்டர்கள்
கோமான நாயிற் கடைப்பி றப்பினில் உழல்வாரே,

வீசாவி சாலப் பொருப்பெ டுதெறி
பேரார வாரச சமுததி ரததினில
மீளாமல் ஓடித துரததி உட்குறும் ஒருமாவை

வேரோடு வீழத தறிதத டுகெகிய
போராடு சாமாத தியததி ருகைகையிட
வேலாயு தாமெயத திருப்பு கழ்ப்பெறு வயலூரா,

நாசாதி ப்ராரத் ததுகக மிககவா
மாயாவி காரத தியகக றுததருள்
ஞானோப தேசப் பிரசிதத சறகுரு வடிவான

நாதாவெ ஞமுற றுதிததி டப்புவி
ஆதார மாயகைக குமுட்ட முறறருள்
நாகேச நாமத தகபபன் மெசசிய பெருமாளே !

---

**62.** சீத மதியம் எறிககும தழலாலே
சீறி மதனன் வளைக்கும சிலையாலே
ஓத மருவி அலைககும கடலாலே
ஊழி இரவு தொலைககும படியோ தான் ?
மாது புகழை வளாககும திருவாரூர்
வாழும மயிலில் இருக்கும் · குமரேசா ;
காதல் அடியா கருத்தின் பெருவாழ்வே,
காலன் முதுகை விரிகக்கும் பெருமாளே !

**63.** ஈளை சுரங்குளிர் வாதம் எனும்பல
நோய்கள் வளைந்தற இளையாதே

ஊடு பருஞ்சிறு கூடு புகுந்திடு
காடு பயின் றுயிர் இழவாதே

மூளை எலும்புகள் நாடி நரம்புகள்
வேறு படுந்தழல் முழுகாதே

மூல மெனுஞ்சிவ யோக பதந்தனில்
வாழ்வு பெறும்படி மொழிவாயே ;

வாளை நெருங்கிய வாவியி லுங்கயல்
சேல்கள் மறிந்திட வலைபீறு

வாகை துறைந்தணி கேதகை மங்கிட
மோதி வெகுண்டிள மதிதோயும்

பாளை நறுங்கமழ் பூக வனந்தலை
சாடி நெடுங்கடல் கழிபாயும்

பாகை வளம்பதி மேவி வளஞ்செறி
தோகை விரும்பிய பெருமாளே !

---

**64.** இருவினை அஞ்ச வருவினை கெஞ்ச
இருள்பிணி துஞ்ச மலமாய

எனதிடர் மங்க உனதருள் பொங்க
இசைகொடு துங்க புகழ்கூறித்

திருமுக சந்த்ர முருகக டம்ப
சிவசுத கந்த குகவேல

சிவசிவ என்று தெளிவுறு நெஞ்சு
திகழுந டஞ்செய் கழல்தாராய்

மருவொடு கஞ்சன் உயிர்பலி கொண்டு
மகிழ்அரி விண்டு மருகோனே,

வதைபுரி கின்ற நிசிசரர் குன்ற
வலம்வரு செம்பொன் மயில்வீரா,

அருகுறு மங்கை யொடுவிடை உந்தும்
அமலனு கந்த முருகோனே,

அருள்செறி பந்த ணையிலிரு மங்கை
அமளிந லங்கொள் பெருமாளே !

---

65. செண்டைகள்பொ ருங்கணமங் கையாமலாக்
கொண்டைகள்கு லுங்கநின் றுநகினிற்
கெஞ்சுபலு டன்குழைந் தமளியிற் கொடுபோய்வண

கெந்தபொடி யும்புனைந் துறவணைத
தின்பவச னந்தருந் தொழிலடுகெ
கின்றமய லின்படுந் துயரறப் ப்ரபைவீசும்

தண்டைகள் கலினகலின் கலின்எனக்
கிணகிணி கிணின்கிணின் கிணின்எனத
தணகொலு சுடன்சிலம பசையஉட் பரிவாகிச்

சந்ததமும் வந்திரும் பரிமளப்
பங்கய பதங்கள்என் கொடுவினைச
சஞ்சல மலங்கெடும படிஅருட் புரிவாயே ;

தொண்டாகள் சரணசரண சரணெனக்
கொம்புகள் குகுங்குகுங் குகுமெனத
துந்துமி திமிந்திமிந் திமின்எனக குறமோசை

சுந்தரி மணஞ்செயுஞ் சவுரியக்
கந்த குற வஞ்சிதங் கருவனத
துங்கமலை யும்புரந் தமரருக் கிடர்கூரும்

பணடார்கள்பு யஙகளும பொடிபடக
கண்டவ,ப்ர சண்டகுஞ் சரிஎழிற்
பைந்தருவ னம்புரந் தகழ்எயிற் புடைசூழும்

பந்திவரு மந்திசெண் பகம்அகிற்
சந்துசெறி கொன்றைதுன் றியவனப்
பந்தணையில் வந்திடுஞ் சரவணப் பெருமாளே !

———

66. ஓல மிட்டி ரைத்தெ ழுந்த வேலை வட்டம் இட்ட இந்த
ஊழு யிற்ற ருககள் ஒன்றும அவராரென்

றாம ரைப்ர சிதத ரென்றும் மூட ரைசச மாத்த ரென்றும்
ஊன ரைப்ர புகக ளென்றும அறியாமற்

கோல முதத மிழ்ப்ர பந்த மால ருக்கு ரைதத நந்த
கோடி இசசை செப்பி வம்பில் உழல்நாயேன்

கோபம் அற்று மற்றும் அந்த மோகம்அற்று னைப்ப ணிந்து
கூடு தறகு முததி என்று தருவாயே ?

வாலை துர்க்கை சததி யம்பி லோக கததா பிததர் பஙகில்
மாது பெற்றெ டுத்து கநத சிறியோனே,

வாரி பொட்டெ ழகர வுஞ்சம வீழ நெட்ட யிற்று ரந்த
வாகை மற்பு யப்ர சணட மயில்வீரா,

ஞால வட்டம் முற்ற உணடு நாக மெத்தை யிற்று யின்ற
நார ணற்க ருட்சு ரந்த மருகோனே,

நாலு திக்கும் வெற்றி கொணட சூர பத்ம னைக்க ளைந்த
நாக பட்டி னதத மர்ந்த பெருமாளே !

———

67. பகரு முத்தமிழ்ப் பொருளு மெய்த்தவப்
பயனு மெப்படிப் பலவாழ்வும்
பழைய முத்தியிற் பதமு நட்புறப்
பரவு கற்பகத் தருவாழ்வும்
புகரில் புத்தியுற் றரசு பெற்றுறப்
பொலியும் அற்புதப் பெருவாழ்வும்
புலன கற்றிடப் பலவி தத்தினைப்
புகழ்ப லத்தினைத் தரவேணும்;
தகரி லற்றகைத் தலமவி டப்பிணைச்
சரவ ணத்தினிற் பயில்வோனே,
தனிவ னத்தினிற் புனம றத்தியைத்
தழுவு பொற்புயத் திருமார்பா,
சிகர வெற்பினைப் பகிரும வித்தகத்
திறல் அயிற்சுடர்க் குமரேசா,
செழும லர்ப்பொழிற் குரவ முற்றபொற்
றிருவி டைக்கழிப் பெருமானே!

---

68. மருக்கு லாவிய மலரணை கொதியாதே
வளர்த்த தாய்தமர் வசையது மொழியாதே
கருக்கு லாவிய அயலவர் பழியாதே
கடப்ப மாலையை இனிவர விடவேணும்;
தருக்கு லாவிய கொடிஇடை மணவாளா,
சமர்த்த னே,மணி மரகத மயில்வீரா,
திருக்கு ராவடி நிழல்தனில் உறைவோனே,
திருக்கை வேல்வடி வழகிய பெருமானே!

---

69. இருவினைப் பிறவிக் கடல்மூழ்கி
இடர்கள்பட் டலையப் புகுதாதே
திருவருட் கருணை ப்ரபையாலே
திரமெனக கதியைப் பெறுவேனோ ?
அரிஅயற் கறிதற் கரியானே,
அடியவர்க் கெளியற் புதநேயா,
குருவெனச சிவனுக கருள்போதா.
கொடுமுடிக் குமரப் பெருமாளே !

---

70. பக்குவ ஆசார லட்சண சாகாதி
பட்சண மாமோன சிவயோகர்
பதியில் ஆறுறு தததுவ மேல்வீடு
பற்றுநி ராதார நிலையாக
அக்கண மேமாய துர்க்குணம் வேறாக
அப்படை யேஞான உபதேசம
அக்கற வாய்பேசு சற்குரு நாதாஉன்
அற்புத சீபாதம் மறவேனே ;
உக்கிர, ஈராறு மெய்ப்புய னே,நீல
உற்பல வீராசி மணநாற
ஒத்தநி லாவீசு நித்தில நீராவி
யுற்பல ராசீவ வயலூரா,
பொக்கமி லாவீர, விக்ரம மாமேனி
பொற்ப்ரபை ஆகார, அவிநாசிப்
பொய்க்கலி போமாறு மெய்க்கருள் சீரான
புக்கொளி யூர்மேவு பெருமாளே !

---

71\. மதப்பட்டவி சாலக போலமும
முகப்பிற்சன வாடையும் ஓடையும்
மருககறபுர லேபல வாடமு மஞ்சையாரி

வயிற்றுககிடு சீகர பாணியு
மிதறசெககாவி லோசன வேகமு
மணிசசதததக டோரபு ரோசமும ஒன்றுகோல

விதப்பட்டவெ ளானையி லேறியும்
நிறைககற்பக நீழலில ஆறியும
விஷததுாககன சூளிகை மாளிகை இந்தரலோகம்

விளக்கசசுரா சூழ்தர வாழ்தரு
பிரப்புதவகு மாரசொ ரூபக,
வெளிப்பட்டெனே ஆள்வய லூரிலி ருந்தவாழ்வே,

இதப்பட்டிட வேகம லாலய
ஒருததிககிசை வானபொன ஆயிரம்
இயறறப்பதி தோறுமஉ லாவிய தொணடாதாள

இசைகசொககஇ ராசத பாவினை
உளப்பெற்றொடு பாடிட வேடையில்
இளைப்புககிட வார்மறை யோனென வந்துகானில்

திதபட்டெதி ரேபொதி சோறினை
அவிழ்ததிட்டவி நாசியி லேவரு
திசைக்குறறச காயனு மாகிம றைந்துபோமுன்

செறிப்பிததக ராவதின வாய்மக
வழைப்பிததபு ராணகரு பாகர
திருப்புக்கொளி யூருடை யார்புகழ் தம்பிரானே !

**72.** மனத்தி ரைந்தெழும் ஈளையு மேலிட
கறுத்த குஞ்சியு மேநரை யாயிட
மலர்க்க ணண்டிரு ளாகியு மேநடை தடுமாறி
வருத்த முந்தர தாய்மனை யாள்மக
வெறுத்தி டுங்கிளை யோருடன் யாவரும்
வசைக்கு றுஞ்சொலி னாலமி கவேதினம் நகையாட
எனைக்க டந்திடு பாசமு மேகொடு
சினத்து வந்தெதி ராசூல முமேகையில்
எடுத்தெ றிந்தழல் வாயவிட வேபயம் உறவேதான்
இழுக்க வந்திடு தூதர்க ளானவர்
பிடிக்கு முன்புன தாள்மல ராகிய
இணைப்ப தந்தர வேமயில் மீதினில் வரவேணும்;
கனத்த செந்தமி ழால்நினை யேதினம்
நினைக்க வுந்தரு வாயுன தாரருள்
கருத்தி ருந்துறை வாயென தாருயிர் துணையாக
கடற்ச லந்தனி லேயொளி சூரனை
உடற்ப குந்திரு கூறென வேயது
கதித்தெ ழுந்தொரு சேவலு மாமயில் விடும்வேலா,
அனத்த னுங்கம லாலய மீதுறை
திருக்க லந்திடு மாலடி நேடிய
அரற்க ருமபொருள் தானுரை கூறிய குமரேசா,
அறத்தை யுந்தரு வோர்கன பூசுரா
நினைத்தி னந்தொழு வாரம ராய்புரி
அருட்செ றிந்தவி நாசியுள் மேவிய பெருமாளே!

---

**73.** இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே;
குறமாதைப் புணர்வோனே, குகனே,சொற் குமரேசா,
அறநாலைப் புகல்வோனே, அவிநாசிப் பெருமாளே!

---

74. தீராப் பிணிதீர — சீவாத் துமஞான
ஊராட் சியதான — ஓர்வாக் கருள்வாயே;
பாரோர்க் கிறைசேயே, — பாலாக் கிரிராசே,
பேராற் பெரியோனே, — பேரூர்ப் பெருமாளே!

---

75. ஆடல்மதன் அம்பின் மங்கையர்
ஆலவிழி யின்பி றங்கொளி
ஆரமத லம்பு கொங்கையின் — மயலாகி
ஆதிகுரு வின்ப தங்களை
நீதியுடன் அன்பு டன்பணி
யாமலமனம் மைந்து நொந்துடல் — அழியாதே
வேடரென நின்ற ழும்புலன்
நாலுகர ணங்க ளின்தொழில்
வேறுபட நின்று ணர்ந்தருள் — பெறுமாறென்
வேடைகெட வந்து சிந்தனை
மாயைஅற வென்று துன்றிய
வேதமுடி வின்ப ரம்பொருள் — அருள்வாயே;
தாடகைஉ ரங்க டிந்தொளிர்
மாமுனிம கஞ்சி றந்தொரு
தாழ்வறந டந்து திண்சிலை — முறியாவொண்
ஜாநகித னங்க லந்தபின்
ஊரிலம குடங்கள் தந்தொரு
தாயர்வ சனஞ்சி றந்தவன் — மருகோனே,
சேடன்முடி யுங்க லங்கிட
வாடைமுழு தும்ப ரந்தெழு
தேவர்கள்ம கிழ்ந்து பொங்கிட — நடமாடும்
சீர்மயில மஞ்சு துஞ்சிய
சோலைவளர் செம்பொன் உந்திய
சீபுருட மங்கை தங்கிய — பெருமாளே!

---

**76.** மதியால்வித தகனாகி மனதாலுத தமனாகிப்
பதிவாகிச சிவஞான பரயோகத தருள்வாயே ;
நிதியே,நித் தியமேயென் நினைவே,நற் பொருளாயோய்,
கதியே,சொற பரவேளே, கருவூரிற் பெருமாளே!

---

**77.** பசசை ஒணகிரி போல்இரு மாதனம்
முறறி தமபொறி சோகுழல் வாள்அயில்
பற்று புண்டரி காமென எய்கயல் விழிஞான
பததி வெணடர ளாமெனும் வாள்நகை
விதரு மஞசிலை போல்நுத லாஇதழ்
பதம செணபக மாமநு பூதியின் அழகாளென்
றிசசை அநதரி பாாவதி மோகினி
ததலை பொனகவி ஞலிலை போாவயி
றிறப சுஙகிளி யானமி னூலிடை அபிராமி
எககு லஙகுடி லோடலை கியாவையும
இறப திந்திரு நாழிநெ லாலறப
எப்பொ தும்பகி ராள்கும ராஎன உருகேனோ !
கசசை யுந்திரு வாளுமி ராறுடை
பொறபு யஙகளும வேலுமி ராறுள
கட்சி வஙகம லாமுகம் ஆறுள முருகோனே,
கறப கந்திரு நாடியா வாழ்வுற
சிததர் விஞசையர் மாகாச பாசென
கட்ட வெஙகொடு சூாகிளை வேரற விடும்வேலா,
நச்சு வெண்பட மீதணை வாமுகில்
பசசை வணபுய ஞர்கரு டாசனர்
நறக ரந்தநு கோல்வளை நேமியர் மருகோனே,
நறபு னந்தனில் வாழ்வளி நாயகி
இசசை கொணடொரு வாரண மாதொடு
நத்தி வந்தூந ளாறுறை தேவர்கள் பெருமாளே !

---